மாவை வரோதயன்

# வலிகாமத்து மண்ணின் மாந்தர்கள்



# வலிகாமத்து

## மண்ணின் மாந்தர்கள்

(நடைச்சித்திரம்)

- மாவை வரோதயன் -

தேசிய கலை இலக்கியப் பேரவை

## தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு 112


| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | **வலிகாமத்து மண்ணின் மாந்தர்கள்** (நடைச்சித்திரம்) |
| நூலாசிரியர் | : | சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன் (மாவை வரோதயன்) |
| பதிப்பு | : | 2010 ஓகஸ்ட் |
| வெளியீடு | : | தேசிய கலை இலக்கியப் பேரவை<br>இல. 571/15, காலி வீதி,<br>கொழும்பு - 06<br>011 2381603 / 077 8851989 |
| கணனிப் பதிப்பும் பக்க வடிவமைப்பும் | : | மதுராளினி குலசிங்கம் |
| அச்சுப்பதிப்பு | : | கௌரி அச்சகம், 011 2432477 |
| விலை | : | ரூபா **150.00** |

| | | |
|---|---|---|
| Title | : | **Valikamaththu Mannin Maantharkal** (The People of Valikamam Soil - Narative Portrayals) |
| Author | : | Sivakadatchampillai Sathiyakumaran (Mavai Varothayan) |
| Edition | : | 2010 August |
| ISBN | : | 978 - 955 - 8637 - 28 -9 |
| Publishers | : | Dhesiya Kalai Ilakkiyap Peravai<br>571/15, Galle Road,<br>Colombo - 06<br>011 2381603 / 077 8851989 |
| Computer typing & Layout Design | : | Mathuralini Kulasingam |
| Printing | : | Gowriy Printers<br>011 2432477 |
| Price | : | Rs. **150.00** |

# பதிப்புரை

1990 களின் முற்கூறில் தேசிய கலை இலக்கியப் பேரவையைத் தேடித் தொடர்பு கொண்டு கலை - இலக்கியப் பணிகளின் தேக்கத்தைத் தகர்த்து முன் செல்லும் பணிகளில் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் வேகத்துடனும் செயற்பட்ட தோழர் மாவை வரோதயன் ஆவார்.

அவரது பிரிவின் ஒரு வருட துக்கத்தைச் சுமந்தபோதும் கலை இலக்கிய ஆர்வலர்கள் - நண்பர்கள் - தோழர்கள் ஒன்றிணைந்து ஆற்றிய செயற்பாடுகள் எமது நெஞ்சங்களில் பலத்தையும் நம்பிக்கை யையும் கூட்டுழைப்பின் மகத்துவத்தையும் முன்னிறுத்துகின்றன.

இரு தசாப்த காலத்துக்கும் மேலாக வலி வடக்கு மண்ணுக்கு மீளமுடியா மக்களின் சோகத்துக்கு மருந்தாக மாவை வரோதயனின் ‘வலிகாமத்து மண்ணின் மாந்தர்கள்’ என்ற நடைச்சித்திரம் ‘தாயகம்’ சஞ்சிகையில் 2006 - ஜூன் முதல் 2008 டிசம்பர் வரையிலான இதழ் களில் தொடர்ந்து வெளிவந்தது.

மாவை வரோதயனின் இந்நடைச்சித்திரம் ஈழத்து கதை சொல் மரபில் ஒரு முக்கிய பங்களிப்பாகும். எதிர்கால இலக்கியத்துக்கு வழி காட்டியாகவும் அமையும் தனித்துவமிக்க படைப்பாக்க முயற்சியாகும்.

இந்நூலுக்கான ஓவியங்களை அவ்வப்போது வரைந்து வழங்கிய ஓவியர் எஸ்.ரி.சாமி, மதிபுஷ்பா, அமளி ஆகியோருக்கும் நூல் வெளியீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கிய மாவை வரோதயனின் துணைவியார் ஜெயகௌரி சத்தியகுமாரன் அவர்களுக்கும் கௌரி அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள்.

இந்நூல் பற்றி ஆக்கபூர்வமான விமர்சனங்களை வரவேற்கிறோம்.

**தேசிய இலக்கிய பேரவை**

571/15, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.
29-08-2010

## உள்ளே...

01. நுளம்பு நாகரத்தினம்

02. சுருட்டு சங்கரப்பிள்ளை

03. கண்பரிகாரி கனகம்மா

04. மேசன் மகாலிங்கம்

05. மாங்கண்டு மதியாபரணம்

06. சகலகலா சுந்தரமூர்த்தி

07. பெரியவ பொன்னம்மா

08. பரந்தன் பாலசிங்கம்

09. குழந்தை குமாரசாமி

10. தலைவர் தவராசா

# முன்னுரை

இது சிறுகதைகளின் நீட்சியோ, நாவலோ, குறுங் கதைகளின் தொகுப்போ அல்ல. உள்நாட்டு யுத்தம் தொடங்கிய பின் (ஏறத்தாழ 1977ற்குப் பின்) யாழ் குடா நாட்டில் அவ்வப்போது யுத்த நெருக்கீடுகளுக்கு முகம் கொடுத்து வந்த பிரதேசங்களில் வலிகாமம் வடக்கு மிக முக்கியமானதாகும்.

இதற்கு அது கொண்டிருந்த புவியியல், பொருளாதாரக் காரணிகள் முக்கியமானவை. சுருங்கச் சொல்வதானால் வடக்கே ஆழமற்ற கடல், இயற்கைத் துறைமுகம், சீமெந்துத் தொழிற் சாலை, பலாலி விமான நிலையம், சமதரையான செழிப்பான விவசாய நிலம், நீர் வளம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

1987ல் நடைபெற்ற 'லிபறேசன் ஒப்பறேசன்' இன் போது வலிகாமம் வடக்கு மக்கள் முற்றாக இடம்பெயர நேர்ந்தது. பின் இந்திய ஒப்பந்தம் அமுலாகி இந்தியப் படை வந்து இறங்கியதும் ஓரளவு மக்கள் திரும்பத் தம் மண்ணில் கால் பதிக்க முடிந்தது. அந்த அமைதி நின்று நிலைக்கவில்லை. அவ்வப்போது அலை அடிப்பதாய் இராணுவ நகர்வும் மக்கள் இடப்பெயர்வும் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

1990ஆம் ஆண்டு ஜூன், அது ஒரு நிரந்தர இடப்பெயர்வாக அமைந்தது. பாண்டவருக்கு 12 ஆண்டுகள், இராமனுக்கு 14 ஆண்டுகள் வனவாசம் என்கிறது இதிகாசம்.

அவற்றை எல்லாம் தாண்டி வனவாசம் அனுபவித்து வரும் வலிகாமம் வடக்கு மண்ணின் மக்களுக்கு இன்னமும் மீட்சி கிடைக்கவில்லை. அந்த மண் மீட்பிற்கான போராட்டங்கள் தனி மனித ரீதியாகவும், குழுக்கள் அணிகளாகவும், அரசியல் நிர்வாக மட்டத்திலும் நடத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

ஒரு தசாப்த காலத்தைத் தாண்டிய பெயர்வை தராசின் ஒரு தட்டில் வைத்துக் கொண்டு மறுதட்டில் பொதுவான யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையை வைத்துப் பார்க்கும் போது பெருத்த வேறுபாட்டை அவதானிக்க முடிகின்றது. அதாவது அரசியல், சமூக, கலாசார மாற்றங்கள் பாரிய இடைவெளியைக் காட்டி நிற்கின்றன.

இந்த இடைவெளி ஒரு நனவிடை தோய்தலுக்கு வழி வகுக்கின்றது. திறந்த பொருளாதாரம், பூகோளமயமாதல் என்பன ஊடறுத்துப் பாயாத அந்த சமூகத்தில் வாழ்ந்த மனிதர்களை எண்ணிப் பார்க்க முடிகிறது. அவர்கள் தான் இந்தக் கதைகளின் நாயகர்கள். இவர்களுடைய வாழ்வில் அரசியல், எழுச்சி, சத்தியம் என்பன பொதிந்து இருக்கின்றன. கூடவே 'சமூகம்' பற்றிய கட்டுக் கோப்பு, கடப்பாடு, அணுகு முறைகள் இருக்கின்றன. இந்த அசைவியக்கத்தின் சுவையான அனுபவங்கள் ஒரு வரலாற்றைப் பதிவு செய்ய முயல்கின்றது எனலாம்.

இதில் வரும் கதைகள், சம்பவங்கள் ஒரு நடைச்சித்திர மாகவே வரையப்படுகின்றன. இவை யாரையும் புண்படுத்தும் அல்லது அவமானப்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்படவில்லை. அன்றைய சமூக வாழ்வு யதார்த்தத்தில் எமது முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்ற தரிசனத்தை புதிய சந்ததியிடம் சுட்டிக் காட்டும் நோக்குடனேயே எழுதப்படுகின்றன.

களப்படுத்தலில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக இந்தக் கதை நிகழ் களமாக மாவிட்டபுரம் எனும் கிராமத்தை மையப்படுத்துகிறேன். மாவிட்டபுரம் கோயிலுக்குக் கிழக்காகச் செல்லும் வீதியில் இந்த மண்ணின் முகவரி அன்று இருந்தது. 'பழை' என்பது அச் சிற்றூர்.

வீமன்காமம் மகா வித்தியாலயம், ஞானவைரவர் கோவில், புளியடி வைரவர் கோவில், புகையிரத நிலையம், காங்கேசன் சீமெந்து ஆலைக்குப் பொருள்களை மாற்றவெனப் பரந்து விரிந்து

கிடக்கும் தண்டவாள இரட்டைக் கோடுகள், தோட்ட வெளிகள், பனை வடலிகள், புல் வெளிகள், நாகதாளி, பூநாறி, இக்கிரிப் பற்றைகள், வீதியோரம் வளைந்து கிடக்கும் மூலிகைச் செடிகள் என்று தனக்கொரு அடையாளத்துடன் செழித்துக் கிடக்கிற மண் அது. ஆயினும் முற்றுமுழுதாக அழிந்து போயிருக்கும் அனைத்து வலிகாமம் வடக்கு மண்ணுக்கும் இக்கதைகள் சமர்ப்பணம் ஆகட்டும்.

கதையில் வரும் சம்பவங்கள் அனைத்தும் 1970ற்கும் 1980ற்கும் இடைப்பட்ட கால நிகழ்வுகளையே உருப்படுத்து கின்றன. பிரதான பாத்திரங்கள் உண்மையானவை. எனினும் அவர்தம் குடும்பத்தவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் புனை வான பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இழக்கப்பட்டுக் கிடக்கின்ற மண்ணின் வாழ்வியல் பதிவு களை இது ஆவணப்படுத்துமெனில் அதுவே ஒரு வரலாற்றை எழுதக்கிடைத்த மகிழ்வைத் தரும்.

**- மாவை வரோதயன் -**

# 01. நுளம்பு நாகரத்தினம்



''அக்கா தண்ணியத்தா நேரமாகுது'' ரத்தினம் அவசரப்பட்டார். ''எப்பன் பொறு, முதுகண்டுப் பால் சுண்டக் காய்ச்சினாத்தான் தேத்தண்ணிக்கு ருசி'' ராசக்கா தொடர்ந்தாள். ''குடுத்தனுப்புற சாமான தலை வாசலில எடுத்து வைச்சிட்டுப் போ; பேந்து அவன் வந்தாப் பிறகு என்னால தேடேலாது'' அது அக்காவின் கட்டளை. ''இண்டைக்கு தக்காளிக் காய் ஆய்வு தான் கிடக்குது, பெரிய கடகம் ரெண்டும் கொண்டு போறன், குஞ்சுக் கடகம் ரெண்டு உந்தா கிடக்குது, தேவைப்பட்டாச் சொல்லி அனுப்புறன்''. ''இந்தா தண்ணியப் பிடி''.

மாசிப் பனியை விரட்டும் கொதி நிலையில் பசும்பால் தேநீர் பித்தளை மூக்குப் பேணிக்குள் தளதளக்கிறது. குசனிக் குந்தில் இருந்தபடி ரத்தினம் ஒற்றைக் கையால் மூக்குப் பேணியை வாங்கி அண்ணாந்து தேநீரை வாய்க்குள் வார்க்கின்றார்.

தோட்டத்துக்குப் போகும் அவசரத்தில் தேநீரைக் குடித்துவிட்டு, எடுத்த சுருட்டுக் கட்டில் சுருட்டொன்றைப் பற்ற வைத்துக் கொண்டு, மீதியை மடிக்குள் செருகிவைத்தபடி ரத்தினம் புறப்படுகின்றார்.

ஏற்கனவே மடித்துக் கட்டிய நாலு முழ வேட்டி, அது எப்பொழுதும் செம்பாட்டு நிறமாகவே இருக்கும். எழுந்து நின்றால் ஆறடி உயரமான ஆள், பரந்த தேகம், கால் பாதங்கள் செருப்பைக் கண்டது கிடையாது. ஆகக் கறுப்பும் இல்லாமல் வெள்ளையும் இல்லாத நிற மேனியில் மயிர்கள் கறுப்பும் வெள்ளையுமாய் படர்ந்து கிடக்கும். தலைமயிர், மீசை. தாடி எல்லாம் அவை மொத்தமாக மழிக்கப்படும் வரை தொடர்ந்து வளரும். இந்த அதிகாலைப் பனிக் குளிருக்குள்ளும் ஒரு மேலாடை இன்றி, ஒரு துண்டுச் சால்லையை தலைப்பாகையாகக் கட்டிக் கொண்டு இரத்தினம் அண்ணர் தோட்டத்துக்குப் போகும் அழகே அழகு.

தலைவாசலில் நின்ற சைக்கிளைத் திருப்பி, கடகங்களை கரியரில் வைத்துக் கட்டினார். மண்வெட்டியை வலது பக்கத் தோளில் வைத்தபடி இடது கையால் ஹான்டிலைப் பிடித்து நிலத்தில் நின்றபடியே சீற்றில் இருந்து சைக்கிளைச் செலுத்தத் தொடங்கினார். அதிகாலை ஐந்து மணி, பனி மூட்டத்தில் ஒழுங்கை இருட்டாகிக் கிடக்கிறது, வெளிச்சம் இல்லை. இரத் தினம் அண்ணர் புகைக்கும் சுருட்டுத்தான் வழிகாட்டிப் போகிறது.

இந்த ஊரில் நாகரத்தினம் அண்ணர்தான் முதன்மையான விவசாயி, விவசாயம் தான் அவரது முழு நேரத் தொழில், அடுத்தது ஊர்விவகாரம், அதற்குள்தான் அரசியலும் அடங்கும்.

நடுத்தர வயதைத் தாண்டிய முதுமையும், அனுபவமும் தான் அவரது ஆளுமையின் ஆதாரங்கள். புகையிரத நிலையத்தின் பின்னால் சூத்திரக் கிணற்றை அண்டி ஐயாயிரம் கண்டுத்தறை தோட்டம் இருக்கிறது. அங்கு தக்காளி, கத்தரி, வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு, மரவள்ளி என்று போகம் அறிந்து பயிரிடுவார். வீட்டுக் கிணத்தை அண்டி உள்ள ஒரு இருபது பரப்பு நிலத்தில் வாழை வைத்திருக்கிறார். அதைவிட ஒரு இரண்டாயிரம் கண்டுத்தறை கல்லுக் கிளறி, வாய்க்கால் இழுத்து வைத்திருக்கிறார். அதில் மானாவாரியில் மரக்கறி போடுவார்.

எல்லாம் மிசின் இறைப்புத்தான். சொந்தமாய் ஒரு 'வூல்சிலி' மெசினும் அல்க்கத்தீன் பைப்பும் இருக்கிறதால யாருடைய உதவி யையும் எதிர்பார்க்கிறதில்லை. தனி மனிதனாக உழைக்கிறார். பெரும்படி வேலைகளுக்கு ஆள் பிடித்து கூலி கொடுத்து வேலைகளைச் செய்விப்பார். மற்றும் தொட்டாட்டு வேலைகளுக் குத் தான் நிரந்தரமாக ஆள் அவருக்கு இருக்கு.

இப்போது ஸ்ரேசனடி தோட்டத்தில தக்காளிப்பழம் பறிக்கும் வேலை நடக்கிறது. இதுக்கு ஆள் பிடிக்கிறது வீண் செலவு என்று சரசு சொல்லுவாள். தானே விடிய வந்து பத்து மணி

ஆகிறதுக்குள்ள ஆயிரம் கண்டுத் தறையிலையும் காய் ஆய்ஞ்சு குவிச்சுப் போடுவாள். உதவிக்கு பெடியனும் நிற்பான்.

ரத்தினம் அண்ணர் தோட்டத்தில் போய் இறங்கி, சுருட்டையும் பத்தி முடித்து, கடகக் கட்டை சைக்கிளால் இறக்கும் போது சரசுவும் மகன் சந்திரனும் வந்து விட்டார்கள். ''சுணங் காமல் ஆய்வம், வெய்யில் ஏறினால் இதுக்குள்ள நிற்கேலாது'' சரசு அவசரப்படுத்தினாள். வேலை சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது.

நேரம் காலை ஏழுமணி தாண்டியிருக்கும். ரத்தினம் அண்ணரின் வீட்டு ஒழுங்கைக்குள் சந்திரன் காரோடு வருகிறான். அவனுக்கு வயது ஏழு இருக்கும். சுறுசுறுப்பான பையன் ''ப்ரூம்.... ப்ரூம்... க்றீச்......'' படலையடியில் பிறேக் போட்டு நின்றவன் அடுத்த சைகையைக் கொடுக்கிறான். ''பீப்.... பீப்....'' உள்ளே ராசு மாமியிடம் இருந்து பதில் கிடைக்காததால் குரல் கொடுக்கிறான்.

''பீப்.... பீப்.... தேத்தண்ணி கொண்டரட்டாம், நேரம் போச்சுது மாமி! பள்ளிக்கூடம் போக வேணும்''. ''எடேய், ஆரையடா மாமி எண்டனி? கெட்ட கேட்டுக்கு ஒரு பள்ளிக்கூடம். ...ஊரைக் கூட்டாம நில்லடா வாறன்...''. மாமி உள்ளே இருந்து நெருப்பெடுத்தார். சந்திரன் முன்னெச்சரிக்கையாக காரை றிவேர்ஸ் செய்து படலை யில் இருந்து இருபதடி தூரம் பின்நோக்கி வந்து நிற்கிறான்.

ராசு மாமி படலையடியில் தரிசனம் ஆகிறாள். பித்தளைச் செம்பு, வட்டக் கோப்பை மூடி, கழுத்திலே பனை நார் சுற்றிக் கட்டிய கைபிடி, அதற்குள் தேநீர்.

கூடவே ஒரு உமல், பனை ஓலையில் பின்னி ஒரு கை பிடியும் உள்ளது. அதற்குள் குழல் பிட்டும் சம்பலும் மூன்று பேருக்கு; கொண்டு வந்த செம்பையும் உமலையும் படலையடியில் வைத்து மாமி பின் வாங்கிச் செல்கிறாள். சந்திரன் முன்னேறிச்

சென்று அவை இரண்டையும் தன் இரண்டு கைகளிலும் எடுத்தபடி, ஸ்ரேறிங்கைப் பிடிக்காமலே காரை ஓட்டிப் போகிறான். இடையில் இருப்பது ஒரு வேட்டித் துண்டு மட்டுமே. இந் நேரம் அது அவிழ்ந்தால் அதோ பாடுதான்.

சரசு வேறு யாருமல்ல, ரத்தினம் அண்ணர் காதலித்துக் கைபிடித்த மனைவிதான். சந்திரன் அவர்களின் ஒரே மகன். சரசு யாழ்ப்பாண சமூகத்தின் சாபக்கேடுகளில் ஒன்றான சாதிய ஒடுக்கு முறைக்கு உட்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவள். தோட்ட வேலைக்கு வந்த இடத்தில் ரத்தினம் அண்ணருடன் காதல் மலர்ந்தது. ராசக்கா, தம்பி ரத்தினத்தின் திருமணத்தை ஏற்க வில்லை. ரத்தினம் துணிந்து செயற்பட்டார். ஊர் எல்லையில் ஒரு இரண்டு பரப்புக் காணியை பழைய வீட்டுடன் வாங்கி அதில் சரசுவை குடியமர்த்தினார். குடும்பமும் நடத்தினார்.

ஆனால் ராசக்கா வலு காரியமான ஆள். தனது தோட்ட வேலைகளைக் கவனிப்பதற்காக ரத்தினத்தை அணைத்து நடந்தாள். அவரின் மனைவியை எட்டக் கட்டினாள். ராசக்காவின் கணவன் உயிருடன் இருந்த போதும் அவர்களது தோட்ட வேலைகளை ரத்தினமே கவனிப்பதுண்டு.

ரத்தினம் பயிர் செய்யும் தோட்டக் காணிகளில் முக்கால் வாசியும் அக்காவின் சொத்தாக இருப்பதால் ரத்தினத்தால் தனித்துச் செல்ல முடியவில்லை. அக்காவின் கணவன் இறந்த பிறகு அக்காவுக்குத் துணை இல்லை என்பதால் ரத்தினமும் அக்காவுடனேயே தங்கிவிட நேர்ந்தது. சரசுவும் மகனும் தமது வீட்டில் தனியாகத்தான் இருக்கிறார்கள்.

ரத்தினம் அண்ணருக்கு சனி, ஞாயிறு, போயா நாட்களில் மச்சம் மாமிசம் சாப்பிடும் ஆசை வந்தால் சரசு வீட்டுக்குப் போவார். மற்றும்படி செலவுக்குக் காசு கொடுப்பதுடன் சரி.

ரத்தினம் அண்ணருக்கு விவசாயத்தைப் போலவே ஊர் விவகாரமும் மற்றொரு உயிர் மூச்சு. ஊருக்குள் யாரும் சண்டை

பிடித்தால் அங்கு நெஞ்சை நுளைத்து விலக்குப் பிடிப்பது முக்கியமான பணி. கை ஓங்குகிற பக்கம் ரத்தினம் அண்ணரிடம் வாங்கிக் கட்டவும் நேரிடும்.

அதைவிட முக்கியமான விசயம் அவரது அரசியல் ஈடுபாடு. ஊரில் சிலர் இவரை வீ.பி. ரத்தினண்ணை என்றும் அன்பாக அழைப்பார்கள். இலங்கை அரசியலில் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் செல்வ நாயகத்தார் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிடுவார். அவரை எதிர்த்து வி.பொன்னம்பலம் போட்டியிடுவார். அந்த நேரம் வி.பிக்கு மேடை போட்டு ஊருக்குள்ளே கூட்டம் வைத்துக் கொடுத்த பெருமை ரத்தினம் அண்ணரைச் சாரும். தன்னுடைய வாழைத் தோட்டத்தின் வேலி வெட்டி பக்கத்தில் பாதைப் பக்கமாய் இருந்த பூநாறிப் பற்றைக் காணியை துப்பரவாக்கி, லைற் என்ஜின் பிடித்து, ஊர் ஆட்களைக் கூட்டி ஒரு உற்சாகமான கூட்டம் நடந்ததெண்டால் அதற்கு ரத்தினம் அண்ணர்தான் காரணம்.

கூட்டம் போட்டது மட்டுமல்லாமல் அவர் கொம்யுனிசக் கொள்கைகளைப் பரப்புவதிலும் முக்கியமானவர். தோட்ட வேலை முடிந்து வந்தால் வீட்டுக்கு வீடு ரத்தினம் அண்ணரின் அரசியல் வியாக்கியானம் நடக்கும். அவரது கொள்கை விளக்க உரைகள் ஊரவர்க்கு ரீங்கார ஒலியாகக் கேட்கும். தமது தூக்கத்தைக் குலைப்பதாகவும் இருக்கும். ரத்தினம் அண்ணர் கதைக்கும் பாணியும் முணு முணுப்பதாக அமைவதாலோ என்னவோ ஊரவர் அவரை ‘நுளம்பர்’ என்றும் செல்லமாக அழைக்கத் தொடங்கி விட்டனர். அதனால் அவர் முன்னிலையில் நோய்காவி நுளம்பு பற்றிக் கதைப்பதும் முடியாத காரியமாகி விட்டது.

விலக்குப் பிடிக்கப் போற இடங்களில், அல்லது வியாக் கியானம் கதைக்கிற இடங்களில் ஏதும் வில்லங்கங்கள் வந்தால் ரத்தினம் அண்ணர் கையை நீட்டிப் போடுவார்.

பின்பு விடயம் பொலிசுக்குப் போய்விடும். பொலிஸ் விசாரணைக்காகத் தேடி வரும். கோயில் முன் வீதியால் வந்து பள்ளிக்கூடம் கழிய தம்பக தம்பி ஒழுங்கை, அதைத் தாண்டி வர புளியடி ஒழுங்கை. அதில் இரண்டு வளைவு கழிய இடது பக்கத்தில் ராசக்காவின் வீடு. ஒழுங்கையில் இருந்து நூறு அடி உள்ளே சென்றாலே படலை வரும். படலையில் இருந்து நூறு அடி தூரம் உள்ளே போனால்தான் தலைவாசல் இருக்கிறது.

பொலிஸ், ரத்தினம் அண்ணரைத் தேடி வருவதனால் பள்ளிக்கூடம் கழிய இருக்கிற சந்தியில் விசாரிப்பார்கள். யாரும் பொய் சொல்லமாட்டார்கள். ரத்தினம் அண்ணர் இருக்கும் வீட்டுக்குச் செல்லும் வழியைக் காட்டுவார்கள். வேலிப் பொட்டுக் குள்ளால் ஆள் அனுப்பி ரத்தினம் அண்ணரை உசாராக்கி விடுவார்கள்.

இனி என்ன, பொலிஸ் ஜீப் சுற்றி வளைத்து வந்து பார்க்கும் போது 'வீட்டில் ஆள் இல்லை' என்று எழுதிக் கொண்டு போய் விடுவார்கள். ரத்தினம் அண்ணர் அண்டையில்பாட்டுக்கு சரசுவுடன் இரவில் தங்கிவிடுவார்.

பிறகென்ன பழையபடி அக்கா வீடு, தோட்டம், அரசியல், ஊர் விவகாரம் என்று ரத்தினம் அண்ணர் முழுநேர உழைப்பாளி ஆகிவிடுவார்.

தேநீரையும் பிட்டையும் தோட்டத்தில் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு, கொஞ்சப் பிட்டையும் சாப்பிட்டு விட்டு சந்திரன் தன் வீட்டுக்கு ஓடிவிடுவான். உடுப்பை மாற்றிக் கொண்டு பள்ளிக்கூடம் போவான். சரசுவும் ரத்தினம் அண்ணரும் தேநீரைக் குடித்துவிட்டு தக்காளிப்பழம் பறிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபடுவார்கள். சரசு கடகத்தில் சேகரித்த பழங்களை ரத்தினம் அண்ணர் கொண்டு போய் குடிலுக்குள் சேகரிப்பார்.

கொழும்புக்குப் போற பழங்கள், செங்காய்ப் பழமாக ஆய வேணும், வெய்யில் ஏறமுதல் சரசு அன்றய இலக்கை எட்டும்

அளவிற்கு பழங்களை ஆய்ந்து கொடுத்து விடுவாள். பின் இருவரும் குடிலுக்குள் இருந்து பிட்டும் சம்பலும் பகிர்ந்து சாப்பிடுவார்கள். சாப்பாடு முடிய ஆட்டுக்கு ஐந்தாறு முள்முருக்கம் குழைகளை ஒடித்துக் கட்டிக்கொண்டு சரசு தன் வீட்டுக்குப் போவாள். மகன் சந்திரன் பள்ளிக்கூடத்தால் வரமுதல் மதிய உணவு தயாரித்து இதர வேலைகளைக் கவனிப்பாள்.

இதற்குள் ரத்தினம் அண்ணர் கோயிலடிக்குப் போய் கொழும்பு லொறி அலுவல்களைப் பார்த்து வந்து வீட்டில் உள்ள வேலைகளைக் கவனிப்பார்.

மத்தியானச் சாப்பாடு சாப்பிட்ட கையோடு கொஞ்சம் ஆறி இருந்து மீண்டும் தோட்டத்துக்குப் போவார்கள்.

அப்போது நேரம் மாலை மூன்று மணியைத் தாண்டி யிருக்கும். ரத்தினம் அண்ணர் கொழும்பு லொறி வரும் வரைக்கும் காவல் இருப்பார். சரசு மாட்டுக்குத் தீனி தேடும் வேலையாக உழவாரத்தோடு மரக்கறிச் செடிகளுக்குள் புகுந்து விடுவாள்.

சரசு தனது மாட்டுக்கும் ராசக்காவின் மாட்டுக்கும் சேர்த்து புல்லுச் செருக்குவாள். இறுதியில் புல்லுக்கட்டை இரண்டாகப் பிரித்துக் கட்டி ஒன்றைத் தான் தன் தலையில் சுமந்து செல்வாள். மற்றையதை ரத்தினம் அண்ணர், அக்காவின் மாட்டுக்கென சைக்கிளில் எடுத்துச் செல்வார்.

நாக்கை வெளியே நீட்டி, மூக்கில் முட்ட வைத்து கைகளை பின்னால் செலுத்தி, பெருவிரல் இரண்டையும் மடித்துக் கட்டிய வேட்டிக் கட்டுக்குள் செருகியபடி நின்றால் நிச்சயம் ரத்தினத்தார் ஏதோ பலமான யோசனையில் நிற்கிறார் என்பது அர்த்தம். இப்போதும் அப்படித்தான் நிற்கிறார். நல்ல வேளை அவரைச் சோதிக்க வைக்காமல் லொறி வந்து விடுகிறது.

'எஸ்.என்.' சீல் அடித்த வெற்று கள்ளிப் பெட்டிகள் லொறியில் இருந்து இறங்குகின்றன. சற்று நேரத்திற்கெல்லாம்

குவியலாய்க் கிடந்த தக்காளிப்பழங்கள் கள்ளிப் பலகைப் பெட்டிக்குள் அடைத்து நிறுவை பண்ணப்படுகின்றன. அச்சவாரம் கைமாற பெட்டிகள் லொறிக்குள் ஏறுகின்றன. அலுவல் முடித்து கொழும்பு லொறி புறப்பட ரத்தினம் அண்ணரும் விடை பெறுகிறார்.

''சரசு இந்தா இதில பத்து ரூபா இருக்குது, பொழுது படுமட்டும் நிக்காத, நான் ஒருக்கால் பிரக்கிராசியைப் பார்க்க வேணும் நான் போட்டுவாறன்.''

அக்கா வீடு வந்த ரத்தினண்ணை புல்லுக்கட்டு, கடகம், மண்வெட்டி எல்லாம் இறக்கி வைக்கிறார். குளித்து வேட்டியை மாற்றுகிறார். இப்போது அவர் உடுத்தியிருப்பது நல்ல வெள்ளை வேட்டி, அலுமாரிக்குள் கிடந்த வெள்ளை சேர்ட்டையும் எடுத்துப் போடுகிறார். தலையை சீப்பால் வாரி, தாடியையும் வருடிவிட்டபடி சைக்கிளில் ஏறிப் புறப்படுகிறார்.

''அக்கா நான் உதில பிரக்கிராசியாரிட்ட போயிட்டு வாறன்'' கை மணிக்கூட்டில் நேரத்தைப் பார்க்கிறார். நேரம் மாலை ஆறுமணி.

(ஜுன் - 2006)

# 02. சுருட்டு சங்கரப்பிள்ளை



அவசர நடை, நடையின் வேகத்தில் கதை, நாலுமுழ வெள்ளை வேட்டி, தோளில் சால்வை (பாடசாலை நாட்களில் அது நஷனலாக இருக்கும்) ஒட்ட வெட்டிய பழுத்த கேசம், நெற்றி நிறையத் திருநீறு, மெலிந்த உடல், சற்றே கூனிய முதுகு, வாயில் தேவார பண்ணிசையின் முணுமுணுப்பு.... இது சங்கரப்பிள்ளை வாத்தியாரின் அடையாளம்.

பள்ளிக்கூடத்தில் அவருக்கு வேறு வேறு அடையாளங்கள் உண்டு. 'சுருட்டர்' 'சுருட்டுச் சங்கரி' அதில் சில. அவருக்கு இழுப்பு வியாதி இருந்தது (ஆஸ்த்மா). மழை காலத்தை சமாளிக்க மிகவும் சிரமப்படுவார். அதனால் மழைகாலம் வந்தால் எங்களுக் குக் கொண்டாட்டம். ஆனாலும் வாயில் சுருட்டும், பொக்கு பொக்கு என்று வரும் புகையும் ஒரு பொது அடையாளம். அதனால்தான் சுருட்டு அவரது பெயருடன் ஒட்டிக் கொண்டது.

நடேஸ்வராக் கல்லூரி கனிஷ்ட வித்தியாலயத்தில் அனேகமான வகுப்புக்களுக்கு அவர்தான் சமயபாட ஆசிரியர். சில வேளை உயர் வகுப்புக்களிலும் நுழைந்து படிப்பிப்பார். அவர் பாடம் நடத்த வரும் வகுப்புக்களின் அடுத்த வகுப்புக்களில் ஆசிரியர் வராவிட்டால் அதோ கதிதான். சங்கரப்பிள்ளை வாத்தியார் உசாராகிவிடுவார்.

''எல்லோரும் சமயபாடக் கொப்பியை எடு! வினா விடை எழுதலாம்...'' என்று தொடங்கினால் இரண்டு மூன்று வகுப்பறைக் கரும்பலகைகள் கேள்விகளால் நிரம்பி வழியும். ஒன்று முடிய அடுத்தது, அடுத்தது முடிய மற்றது. அதுவும் முடிய முந்தியது.... என்று நூற்றுக்கும் மேற்பட்ட கேள்விகள் எழுதப்படும்.

''திருஞானசம்பந்தர் பாடிய முதல் தேவாரம் எது?'' என்று தொடங்கி திருமுறைகள், பிரபந்தங்கள், குரு பூசை, திதி எல்லாம் கேள்விகளாக வளரும். அவர் கேள்வி எழுதிச் செல்லும் வேகத்தில் நாங்கள் கொப்பியில் கேள்வி எழுதி உடனுக்குடன் விடையும் எழுத வேண்டும்.

ஒரு கரும்பலகையில் கேள்வி நிறைந்ததும் பின் புறமாக வகுப்பறையைச் சுற்றி வருவார், பின்னால் நின்று எங்கள் கொப்பிகளை நோட்டம் விடுவார். ஏதும் கேள்விகளுக்கு விடை எழுதப்படாமல் இடைவெளி தெரிந்தால் சங்கடம் ஆகிவிடும். அச்சத்தால் எங்கள் கைகள், முதுகை, தொடையை, தலையை சொறியத் தொடங்கிவிடும்.

''என்ன கடிக்குதே?'' என்ற கேள்வியுடன் இடைவெளிக்குரிய கேள்வியைக் கேட்பார். பதில் தாமதமானால் பிரம்பு முதுகைப் பதம் பார்க்கும். அடிவிழ எங்கள் வாயில் விடை வரும். விடை வரத் தவறினால் அடி கூடி அவரே விடையைச் சொல்லுவார். யாரும் யாரையும் பார்த்து எழுத முடியாது.

கேள்வி எழுத சமயக் கொப்பி இல்லை என்றால் ஏதாவது ஒரு கொப்பியில் எழுதியாக வேண்டும். எழுதிய கொப்பிகளை சிறிது கால அவகாசத்துடன் சேகரிக்கத் தொட்ங்கி விடுவார்.

மறுநாள் நெஞ்சு 'திக்.. திக்' என்று இருக்கும். திருத்திய கொப்பிகளைக் கொணர்ந்து மொனிற்றரிடம் கொடுத்துவிட்டுப் போய் விடுவார். பின்பு எங்காவது வழியில் காணும் போது கேட்பார். 'குமரன் நேற்று சோதனையில எத்தின மார்க்ஸ்? ' நான் தயங்கித் தயங்கி 'எண்பத்தைஞ்சு' என்பேன். அடுத்த கணம் முதுகு புளிக்கும். 'மிச்சம் பதினைஞ்சும் எந்தப் பெண் டாட்டிக்குக் குடுத்தனி?' என்று சுழரச் சுழர அடி மழை பொழியும். தப்பித்து ஓடுவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது.

அவரும் நாங்களும் ஒரே கிராமத்தில், பழையூரில் வசித்ததால் அவர் எம்மை அதீத உரிமையுடன் தண்டிப்பதுண்டு. தண்டனை பெறுவது நாங்கள், திருந்துவது அடுத்த மாணவர்களாக இருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை காலை விடிகிறது என்றால் ஒரு வித படபடப்பு, பரபரப்பு இருக்கும். ஏழரை எட்டு மணியென்றால் மனுசன்

வந்துவிடுவார். பாடசாலையைத் தட்டித் திறந்து ‘‘குமரன், ஜீவன் இன்னும் வெளிக்கிடயில்லையே! கெதிப்படுத்துங்கோ! அந்தா அதில இருக்கிற அலரி, பொன்னுச்சி, நித்திய கல்யாணி பூவெல்லாம் ஆஞ்சு கொண்டு வாங்கோ!’’ கட்டளைகள் பிறப்பித்த படி விரைவார். எங்களைப் போல மாணவர்கள் இல்லாத அயல் வீடுகளில் அவர் தானாகவே பூக்களைப் பறித்துக் கொள்வார். அவர்களிடம் பிடி அரிசி, தேங்காய் சேர்ப்பதும் அடுத்த பணி.

எமது கிராமத்து வீடுகளில் சங்கரப்பிள்ளை வாத்தியார் ஒவ்வொரு உமல் கொடுத்து வைத்திருக்கிறார். அம்மாமார் தினமும் உலையில் அரிசி போடும் முன் இந்த உமலிலும் இட்டுச் சேமிக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை காலையில் வாத்தியார் வந்து ஒரு உரப்பையில் அவற்றைச் சேகரித்துச் செல்வார்.

மற்ற வீடுகளுக்குப் போன வாத்தியார் திரும்பி வரும் வரை நாங்கள் வாசலில் தயாராக நிற்கிறோம். எங்களுடன் அம்மா எங்கள் வீட்டு உமலுடன் நிற்கிறார். சமய பாடப் புத்தகம், கொப்பி, பேனை, பென்சில் ஒரு கையிலும் பறித்த பூக்களை கடதாசிப் பையில் போட்டு மறு கையிலுமாக தும்பியை வாலில் பிடித்து, வண்ணத்துப்பூச்சியை விரட்டி, விரட்டி பொத்திப்பிடித்து விளையாடி எங்கள் பயணம் தொடரும்.

‘‘கெதியா வாங்கோ... கெதியா வாங்கோ....’’ அவசரப் படுத்தியபடி அவர் முன்னால் நடப்பார். ஒரு கையில் உரப் பை, மறு கையில் உமல் நிறையப் பூ. அந்த உமல் பிடியை முழங்கைக்குள் மாட்டி இடுப்புக்கு மேல் உயர்த்திப் பிடித்தபடியே நடப்பார். திரும்பிப் பார்க்கும் போது எங்களில் யாராவது மாட்டிக் கொண்டு விடுவோம்.

‘‘ஜீவன் ஏன் விபூதி பூசேலை! வீட்டில பஞ்சமே! நீறில்லா நெற்றி பாழ்....’’ என்பார். ஜீவன் பயந்து போய் நெற்றியைத் தடவிப் பார்க்கையில் இருந்த விபூதியும் மீதம் அழிந்து விடும்.

''பூசின்னான் சேர்! அழிஞ்சு போச்சுது'', ''உண்டண்ண அள்ளிப் பூசினா ஒருக்காலும் அழியாது. நாகரிகம் பிடிபடுகுது போல...''.

அதற்கு மேல் நாங்கள் யாரும் வாய் திறக்க மாட்டோம். விளையாட்டுக்கள், சேட்டைகளை நிறுத்தி வாத்தியாரின் வேகத் துக்கு ஈடுகொடுத்துப் பின் தொடர்ந்து போவோம்.

ரெண்டு கட்டை தூரம் பொடி நடைதான், சம்பந்தரின் பனை வடலி, ஊராக்களின் தோட்டவெளி எல்லாம் கடந்து போக வயல் வெளிக்குள் ஒரு சோலை தெரியும்.

அரச மரமும் மருத மரமும் இணைந்த ஒரு பசுமைக் கூடாரம். அடியில் கூத்தியாவத்தைப் பிள்ளையார் கோவில். முன்னால் குளம். மருதமரக் கிளைகளும் அரசமரக் கிளைகளும் கைகளை நீட்டி குளத்து நீரில் கோடு கீறி, காய்களை எறிந்து நீரில் வளையங்கள் போட்டு விளையாடிக் கொண்டிருக்கும். அவைதான் எங்களுக்கு ஊஞ்சலும், உல்லாசமும்.

வாத்தியார் மடப்பள்ளியில் அரிசி, தேங்காயை வைத்து விட்டு எங்கள் அணிவகுப்பை நடத்துவார். வயது, திறமை அடிப்படையில் முதலில் சரியைத் தொண்டில் ஈடுபடுத்தப் படுவோம். விளக்குமாறு, தும்புக்கட்டை, உழவாரம், மண்வெட்டி, குப்பைவாரி எல்லாம் ஒரு அரைமணி நேரம் வரையில் இயங்கும்.

பின்பு குளத்து நீரில் கால், முகம் கழுவி ஞான வழிபாடு, மண்டபத்துள் நாங்கள் பாடசாலை வகுப்புகள் அடிப்படையில் இணைந்து குழுக்களாக ஒழுங்கமைத்துக் கொள்வோம். மூன்றாம் வகுப்புக்கு உட்பட்டவர்கள் ஒரு குழு, ஐந்தாம் வகுப்புக்கு கீழ் வேறு குழு, பத்தாம் வகுப்புக்கு உட்பட்டவர்கள் இன்னொரு குழு என ஒன்று சேர்வோம்.

எங்கள் கிராமத்தில் இருந்தும் தையிட்டிக் கிராமத்தில் இருந்தும் ஒரு இருபத்தைந்து மாணவர்கள் வரையில் அங்கு

சேருவோம். அந்த மூன்று வகுப்புக்களுக்கும் சங்கரப்பிள்ளை வாத்தியார்தான் ஒரே ஒரு முகாமை.

தேவாரம் பாடி வகுப்பை ஆரம்பித்ததும் அன்றைய பாடத்தை வாத்தியார் தொடக்கிவைப்பார். நாங்கள் தொடர்ந்து வாசித்து கேள்விகளுக்கு விடை எழுத வேண்டும். திருக்குறள், தேவாரம், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை மனனம் செய்ய வேண்டும். வகுப்பு முடியும் போது பாட மாக்கியதை ஒப்புவித்து ஆக வேண்டும்.

வாத்தியார் ஓடி ஓடி மடப்பள்ளியில் தேங்காய் துருவி, பொங்கலுக்கு உலை வைத்து அரிசி கழுவிப் போட்டு, பால்விட்டு பிரசாதம் தயார் செய்வார். வாத்தியார் மடப்பள்ளிக்குப் போகும் நேரம் பார்த்து நாங்கள் நடிகமணிகளாக மாறுவோம்.

கூத்தியாவத்தை கிராம முன்னேற்றச் சங்க மண்டபம் எங்கள் அரங்காகும். சும்மா இருக்கும் மேடையில் நாங்கள் ஏறுவோம். கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு அரிச்சந்திர மயானகண்டம், சத்தியவான் சாவித்திரி நடித்துப் பார்ப்போம். புதிய நாடகம் போட எண்ணி 'அமைச்சரின் முடிவு' பயிற்சி செய்வோம். குமரன் தளபதி, நான் அரசன், ஜீவன் மந்திரி. வாத்தியார் வர ஓடி வந்து அமர்ந்து பாடம் படிப்போம்.

அந்தக் காலத்திலேயே எங்களூரில் கூத்தியாவத்தை கம்பன் கழகம் ஒன்று இருந்தது. தமிழக அறிஞர்கள் வந்து உரையாற்றிய வரலாறும் இருந்தது. மானாவாரிப் போகம் தவிர மற்றைய காலங்களில் அங்கு நெல்லு விதைப்பு நடைபெறுவது குறைவு, குளத்து நீரைப் பொறுத்து சிறுபோக வேளாண்மை நடக்கும். மற்றும்படி அந்த மண்டபமும், வயல் வெளியும் கலை அரங்காகத்தான் திகழுமாம்.

வாத்தியார் மீண்டும் மடப்பள்ளி போக நாங்கள் மேடையில் ஏறுவோம். பத்தரை மணியளவில் சமயபாட வகுப்பு முடிந்துவிடும்.

இனி, கிரியை வழிபாடு. வாத்தியார் சமைத்த சாதத்தை பிள்ளையாருக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் படையல் செய்வார். அவரவர் தாம் கொண்டு வந்த அர்ச்சனைப் பொருட்களை, பூக்களை இறைவனுக்கு சமர்ப்பிக்க வேண்டும். மூத்த அக்காமார் தேவாரம் பாட நாங்கள் சேர்ந்து பாட வேண்டும். பஞ்ச புராணம் பாடி முடிய கற்பூர தீபம் காட்டி பூசை முடிவுறும்.

அடுத்தது யோகம். எல்லோரும் மண்டபத்தில் சென்று வரிசையாக அமர வேண்டும். வாத்தியார் சகலருக்கும் பிரசாதம் பரிமாறுவார். அதற்கென்றே குளக்கரையில் பூவரசமரங்கள் இலைகளைப் பெரிய இலைகளாக விரித்து வைத்துக் கொண்டிருக்கும். அந்த இலைகளைப் பறித்து வந்தே எங்கள் பிரசாத போசணம் நிகழும்.

இனி பாத்திரங்கள் எல்லாம் கழுவி அடுக்குகள் முடிந்து வாத்தியார் புறப்பட நாங்களும் வீடு நோக்கி அவரைப் பின் தொடர்வோம்.

இத்தகைய பணிக்காக அவரைப் பலர் ''அன்னதானச் சங்கரி'' என்றும் வியந்து கூறுவதுண்டு. 'அறநெறிப் பாடசாலை' என்ற பெயர் வைக்காமல், அரச நிறுவனங்களின் செல்வந் தர்களின் நிதி எதனையும் எதிர்பாராமல் எமது ஊர் மாணவர் களின் சமயக் கல்விக்கும், ஒழுக்கத்திற்கும், தமிழுக்கும் கலைக் கும் அடித்தளம் இட்ட ஒரு முன்னோடி சங்கரப்பிள்ளை வாத்தியார். அவர் ஊரார் பிள்ளைகளை ஊட்டி வளர்த்த ஒரு ஞானி. இன்று கல்விக்கூடங்களை இழந்து நிற்கும் அந்த வலிகாமம் வடக்கு மண்ணின் ஒரு மைந்தன்.

(செப்டெம்பர் 2006)

# 03. கண்பரிகாரி கனகம்மாக்கா



**அ**திகாலையில் சேவல் கூவ மறந்தாலும் கனகம்மாக்கா எழுந்து விடுவார். அடுப்படியைத் துப்பரவாக்கி, சாம்பல் அள்ளி, கேத்தலை வைத்து அடுப்பை மூட்டி அன்றாட கடமைகளைத் தொடங்குவார். முற்றத்து வில்வ மரத்தடியில் ஒரு சிறிய பிள்ளையார் ஆலயம். அதற்கு பூ வைத்து, வழிபட்டு சூரிய நமஸ்காரம் செய்து வந்த பின்னும் பொழுது சரியாகப் புலர்ந்திருக்காது.

கோடியில் பசுக்கன்று 'அம்மா...' என்று குரல் கொடுக்கும். ''பொறணை, பொறணை... ஆச்சிக்குப் பசி வந்திட்டுது''. பால் செம்பில் தண்ணீர் மொண்டு கொண்டு கனகம்மாக்கா பசுமாட்டுத் தொழுவத்துக்குப் போவார். கன்றை அவிழ்த்துப் பாலூட்ட விட்டு, பசுமாட்டில் பால் கறந்து வந்து அன்றைய தேநீர்ப் பணிகள் ஆரம்பமாகும். அப்போதுதான் கனகம்மாக்காவின் மகள் தூக்கம் கலைந்து எழுந்து வருவாள்.

''பிள்ளை இந்தா! கொய்யாவுக்கு தேத்தண்ணியைக் கொண்டு போய்க் குடு! கொண்ணை எழும்பிட்டானோ எண்டு பார்! கண்டறியாத லொறி ஓட்டம், சாமம் சாமமாய்த் திரியிறது, விடியிறதும் தெரியாமக் கிடக்கிறது! இளந்தாரி வயசில...'' பித்தளைச் சட்டியில் கலந்த பால் தேநீரை அவரவர் மூக்குப் பேணிக்குள் வார்த்து ஆற்றியபடி கனகம்மாக்கா சுறுசுறுப்பாக இயங்குகிறார்.

கனகம்மாக்கா பெண்வழி பரம்பரையாக வரும் கண் பரிகாரி. குடும்பத்தின் இந்தத் தலைமுறைக்கான பிரதிநிதி. கணவன் அருளம்பலம் இப்போது ஓய்வு பெற்ற ஆசிரியர். அவருக்கு படிப்பதும், படிப்பிப்பதும், வளவில் உள்ள மரம், செடி, பயிர் பாத்திகளுக்கு தண்ணீர் இறைப்பதும் தான் பொழுதுபோக்கு.

மகன் பரஞ்சோதி படிப்புச் சரிவரவில்லை என்று லொறிகார நண்பர்களுடன் சேர்ந்து லொறி ஓடப்பழகி அதுவே தொழிலாகக் கொண்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்து சின்ன வெங்காயம், வேதாள வெங்காயம், உருளைக்கிழங்கு, செத்தல் மிளகாய், புகையிலை வருமட்டும் கொழும்புச் சந்தைகள் காத்துக் கிடக்கிற காலம். லொறி காரர்களுக்கு அப்படி ஒரு காலம். உள்ளூர் தோட்ட வெளிகளுக்கு ஓடி லொறி லோட் அடிக்கிறதுக்கு 'லைசன்ஸ்' இல்லாதவர்கள் முண்டியடிப்பார்கள், பரஞ்சோதி கொழும்புக்கு ஓடுகிற ஆள். இரவிரவாகத்தான் ஓட்டம். முன்னுக்கு 'சிவப்பு லைற்' தெரிஞ்சால் பொறுக்காது, ஓடி முந்துவது தான் பிராக்கு. இனி பின்னேரம் கொழும்புக்குப் புறப்படும்வரை வீட்டில் பகல் தூக்கம்தான்.

மகள் கலாவதி ஒருவாறு எஸ்.எஸ்.ஸி. வரை படித்துவிட்டு மனைப்பொருளியல், அழகுசாதனத்துறையில் நாட்டம் கொண்டி ருக்கிறாள். இனிக் கண் பரிகாரி பரம்பரையின் அடுத்த பிரதிநிதி அவள்தான். அவளுக்கும் வாகடம், மருந்துகள், மூலிகைகள், நோய்கள், குணங்குறிகள் பற்றி ஓரளவு தெரிந்திருந்தாலும் அம்மாவின் பணியைத் தொடர்ந்து செய்யும் அளவுக்கு அக்கறை இல்லை.

இது பங்குனி வெய்யில் உச்சத்தில் எறிக்கிற காலம். சித்திரை பிறக்கும் முன்னமே ஊரில் கண் நோய் பரவ ஆரம்பித்துவிட்டது. பொழுதுபுலர்ந்த கையோடு கண்ணுக்கு மருந்துபோட ஆட்கள் வருகிறார்கள். வந்தவர்கள் தலைவாசல் திண்ணையில் அமர்ந்திருக்கிறார்கள்.

தலைவாசல் கண்வைத்தியத்திற்கென்றே ஒதுக்கப்பட்ட மண்டபமாக இருக்கிறது. நான்கு பக்க மூலையிலும் கொங்கிறீற் தூண், சுற்றவர சீமெந்தினால் கட்டிய குந்து. இரண்டு பக்கம் கடவைகள். கடவை இல்லாத ஒரு பக்கத்தில் பழைய மர அலுமாரி, சந்தனக் கல்லு, பாத்திரங்கள், எதிர்ப்புறத்தில் தனியே மருதமரத்தில் செய்த கட்டில், மேலே பனை ஓலையால் வேய்ந்த கூரை, மொத்தத்தில் காற்றோட்டமான தலைவாசல்.

பாளை விட்டுச் சிரித்த பனைகளில் நொங்கு முற்றி இப்போது பழம் வரத் தொடங்கிவிட்டது. பனம் பழத்துக்கு மொய்க்கிற கொசுக்கள் வீட்டு வளைகளிலும், கூரைகளிலும் தொங்கும். பனை ஈர்க்கு நீட்டங்களிலும் சணல் கயிற்று முடிச்சுக் களிலும் உறி முனைகளிலும் கூடி மொய்த்து ஓய்வெடுக்கின்றன.

''இந்தக் கொசுச் சனியன்கள்தான் பிள்ளை கண்ணோய கொண்டு காவுறதுகள். ஒராளின்ர, கண்ணில இருக்கிற விச நீரைக் கொண்டு போய் இன்னொராராளின்ர கண்ணில வைச்சுப் போடுங்கள். உந்தச் சாப்பாட்டில மொய்க்கிற இலையான் மாதிரி!''

''அதொண்டும் செய்யாது, எப்பன் நேரத்துக்கு கண் எரியிற மாதிரி இருக்கும். ஆனால் இந்த மருந்து கண்ணுக்குக் குளிர்மை. சூடுதான் கண்ணுக்குக் கூடாது. குளிப்பு முழுக்கு ஒழுங்காய் இருக்க வேணும்''

''கையால தோண்டாத பிள்ளை, வெள்ளண ஒழும்பின உடன கிண்ணத்தில் தண்ணிய எடுத்து நந்தியாவட்டம் பூவால கழுவு. பூளையும் கழுவுப்படும், கண்ணுக்கும் சுகமாய் இருக்கும்...''

காலையில் வந்து தலைவாசலில் அணிவகுத்து இருந்த கண் நோய் கண்டவர்களின் கண்களுக்குள் தான் தயாரித்த மருந்துகளை விட்டபடி நோய், தற்காப்பு பற்றிய விளக்கங் களையும் கனகம்மாக்கா விளக்கியபடி இருந்தார்.

பூஞ்சோலையான பதினைந்து பரப்பு வளவில் மூன்று அடுப்புக் கட்டிகளை வைத்தது போல் கனகம்மாக்காவின் இல்லம். வீதியில் இருந்து வருபவர்களுக்கு முகம் கொடுக்க தலைவாசல், அதன் பின்னால் வலது புறமாக வீடு, இங்கு ஒரு அறையுடன் திண்ணை, விறாந்தை உள்ளது. அறைக்குள் பழைய காலத்து மரப்பெட்டகம், மரஅலுமாரி, பழைய ரங்கூன் தேக்கி லான கட்டில் எல்லாம் உண்டு. வாசலில் இரணைச் சட்டகக் கதவு, ஒன்பது அங்குல நீளத்தில் அதற்கு சாவி, ஒரு திண்ணையில்

வாத்தியாரின் படிப்பகம், மறுபக்கத்தில் மகனின் சயனப் பிரிவு இருக்கும்.

கலர் மரங்களாலான ஆறு தூண்கள், சுற்றிவர செம்மண் சுவர், யன்னல்கள், கதவோடு சாணத்தால் மெழுகிய நிலம், உட்சுவர் பனை ஓலையால் வேய்ந்த கூரை என்பன அந்த வீட்டின் சிறப்பு.

வீட்டின் இடதுபுறமாக குசினி. அதுவும் மண்ணால் கட்டி, திண்ணை வைத்து, அடுப்படி அமைத்து, தாவாரம் போட்டு சாணத்தால் நிலம் மெழுகிப் பனை ஓலையால் கூரை வேய்ந்த குடிசை. வெய்யில் ஒளி பரவவும், புகை வெளியேறவும் இடைவெளி வைத்துக் கட்டப்பட்டுள்ளது. தாவாரத்தில் கொத்தி அடுக்கிய விறகுகளுடன், காய்ந்த பனம் பாளை, கொக்கறை, கங்கு மட்டைகள், ஊமல்கள் சேர்ந்து கிடக்கும்.

பின்னால் ஆட்டுக் கொட்டில், பசுமாட்டுத் தொழுவம் இருக்கிறது. தலைவாசலில் இருந்து கிணத்தடிக்குப் போகும் பக்கமாக மால் அமைக்கப்பட்டிருந்த இடம். இதுவும் மண்சுவருடன் கூரை வேய்ந்த மடம் போன்ற அமைப்புத்தான். முன்னால் குந்தினால் வரையறை செய்து உள்ளே குட்டிக் குட்டித் திண்ணை கள் நீட்டி நிமிர்ந்து படுக்க ஏற்றதாக இருக்கும். பூமரங்கள் எறியும் வாசமும், வாழைத்தோட்டத்துக் குளிர்மையும் இங்கு எப்போதும் இதம் தருவதாக இருக்கும்.

இப்போது போக்குவரத்துச்சபை பஸ்கள் ஓடுவதால் தூர இருந்து வரும் நோயாளிகள் தங்குவது குறைவு. முன்பு என்றால் பளை, முகமாலை, மட்டுவில், சாவகச்சேரி, கொடிகாமம் பகுதி ஆட்கள் வண்டில் மாடு கட்டி வருத்தக்காரரைக் கொண்டு வருவார்கள். பத்துப் பதினைந்து நாள், மாதக் கணக்காகத் தங்கி கண் சுகமாக்கிக் கொண்டுதான் திரும்புவார்கள். சுழிபுரம், பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் ஆட்களும் அப்படித்தான்.

தூர இருந்து வருபவர்கள் சும்மா வரமாட்டார்கள். நெல்லு, சாமை, குரக்கன், பயறு, எள்ளு, தேங்காய், காய்கறி... என்று வண்டில் நிறைய ஏற்றி வந்து கண்பரிகாரி வீட்டில் இறக்கி வைத்துவிட்டுத்தான் வருத்தம் பற்றிக் கூறத் தொடங்குவார்கள். நோயாளிகளுக்கும், கூட இருப்பவர்களுக்கும் கண்பரிகாரி வீட்டில் தான் சாப்பாடு. வந்தவர்களுக்கு வருத்தம் சுகமாகி வாழ்த்திச் சென்ற பின்னும் வீட்டில் தானியம் குறைவுபடாது இருக்கும்.

ஊரில் உள்ளவர்களுக்கும் கனகம்மா அக்கா தான் முதல் நிலை வைத்தியர். செங்கண் மாலை, வயிற்றோட்டம், காய்ச்சல், விசக்கடி, தொய்வு, சருமவியாதி, வெட்டுக்காயம், வாதக் குணங்கள்... எதுவென்றாலும் தான் அறிந்த வைத்திய முறை களைக் கொண்டு சுகப்படுத்தி விடுவா. முடியாது என்று கண்டால் கதிரித்தம்பியிடமோ, பசுபதி, இராமசாமியிடமோ காட்டுங்கள் என்று அனுப்பிவிடுவா. ஆனால் கண்ணைப் பொறுத்த வரையில் இவரை விட்டால் வேறு ஆள் இருக்க முடியாது. அப்படி ஒரு கைராசி.

எவ்வளவுதான் வேலைப்பழு இருந்தாலும் கனகம்மாக்கா ஓடி ஓடி கடமைகளை உசாராகச் செய்வா. உதவிக்கு ஆள் பிடிப்ப தானாலும் எந்தப் பணியை யாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற உளவியல் நுட்பமும் அறிந்து வைத்திருக்கிறார். பேசும் மொழியின் ஆற்றல், லயம்தான் அவரது மேலான மருத்துவம். கனகம்மா அக்காவுக்கு இப்போது ஐம்பது வயதும் தாண்டியிருக்கும். எப்போதும் உள்ளூர்க் கைத்தறிச் சேலைகளையே கொசுவம் விட்டு உடுப்பார். மெல்லியதாக நரைத்தமுடி எப்போதும் அள்ளி முடிந்தபடி இருக்கும்.

காலையில் அதிகமாகப் பழஞ்சோறுதான் சாப்பாடு. பழங் கறியும் இருக்கும். சில வேளைகளில் பச்சை மிளகாய்ச் சம்பல், ஊறுகாய் இருக்கும். ஓடி ஓடிச் சமையல் வேலைகளையும், இதர வீட்டு வேலைகளையும் கவனித்தபடி வந்திருக்கும்

நோயாளிகளையும் அவர்களுக்குரிய நிலையில் கவனித்துக் கொள்வார்.

எண்ணெய் வகைகள் எல்லாம் கனகம்மாக்காவே காய்ச்சிக் கொள்ளுவார். யாவற்றுக்கும் எள்ளெண்ணெய்தான் மூலாதாரம். பயன்படுத்தப்படும் மூலிகைகளின் அளவில் பயன்படும் வகையில் மாறுபடும், செஞ்சந்தனம், மஞ்சள், சந்தனம், களிம்பு என்பன அவரது பிரதான பூச்சு மருந்துகள். எல்லாவற்றுக்கும் மேலாக வீட்டு வைத்தியமும் சொல்லித் தருவார்.

காலைச்சாப்பாடு முடிந்த கையோடு ஆடு, மாடுகளை அவிழ்த்துக் கட்டப் போய்விடுவார். அருகில் தம்பகதம்பி பனை வெளிதான் அவற்றுக்கு மேய்ச்சல் தரை. கனகம்மாக்காவின் வளவுக்குள்ளும் பனைகள் கறுத்து நெடிதுயர்ந்து செழித்து நிற்கின்றன. கூடவே மாமரம், பலாமரம், தோடை, எலுமிச்சை, நெல்லி, மரங்களுடன் மூலிகைச் செடிகளும், மலர்ச் செடிகளும் எப்போதும் இருக்கும்.

பனம் பழம் கிடைக்கும் காலத்தில் கனகம்மாக்காவிற்கு ஒரு வேலை கூடும். பனம் பழங்களைச் சேகரிப்பது. மாடு சூப்ப விடுவது. பின்பு பனம் விதைகளைச் சேகரித்து பனம் பாத்தி போடுவது. தனியாளாக தோட்ட மண்வெட்டியால் பாத்தி சரிக்கட்டி ஒன்றரை அடி உயரத்தில் செம்மண் மேடையிட்டு, முளைவிட ஏதுவாய் பனம் விதைகளை அடுக்கி விடுவார். கார்த்திகை மாதம் வர அங்கே செங்கால் நாரைச் சொண்டு களாய் பனங்கிழங்குகள் விளைந்து கிடக்கும். அதை அலவாங்கால் கிண்டுவதும், கிழங்கு பிடுங்குவதும் அவவின் பணியாகவே இருக்கும்.

மதியச் சாப்பாடு சமைக்கும் நேரத்திலேயே மரக்கறிக் கழிவு, அரிசி வடித்த கஞ்சி, தவிடு, பிண்ணாக்கு, தேங்காய்ப் பூ கலந்து களிநீர் சேகரித்து கொண்டு போய் ஆடு, மாட்டிற்கு வைத்துவிட்டும் வருவார். மத்தியானச் சமையல் முடிந்ததும்,

வீட்டாருக்குப் பரிமாறி, தானும் உண்டு வெய்யில் தாழட்டுக்கும் என்று திண்ணையில் சற்று நேரம் சாய்ந்து கொள்வார்.

அயர்வு தெளிந்து கால் முகம் கழுவி, கூந்தலைக் கலைத்து வாரி அள்ளி முடிந்து புறப்படுவார். பெரிய நார்க் கடகம், அதற்குள் ஒரு குஞ்சுக் கடகம், உழவாரம், புல்லுச் சத்தகம், நார்க்கட்டு உள்ளே இருக்கும். இங்கே இரண்டு பணிகள் ஒருசேர நடக்கும். ஒன்று பசுமாட்டுக்கும் கன்றுக்கும் இராச் சாப்பாட்டுக்குப் புல்லுச் செருக்குவது, மற்றது மூலிகை சேகரிப்பது.

''எட சின்னவன், ஒருக்கால் மாமியோட வாறியே மோனை! வருசம் பிறக்குது, மருந்துகள் காய்ச்ச வேணும், மருந்துச் சாமான்கள் பிடுங்கக் கையுதவி இல்லை ராசா!'' பள்ளிக்கூடம் விட்டு வந்து என்ன விளையாட்டு எங்கே விளையாடலாம் என்ற யோசனையில் நிற்கும் என்னைப் பிடித்துவிடுவார். நான் அம்மாவிட்டக் கேட்க வேணும் என்று நழுவுவேன். அம்மா என் கையில் கடகத்தையும் உழவாரத்தையும் தந்து ''ஓம் அப்பன், மாமியோட போய் எங்கட மாட்டுக்கும் புல்லுச் செருக்கிக் கொண்டு வா...'' என்று அனுமதித்து விடுவார்.

அனேகமாகக் கனகம்மா மாமிக்கு நான்தான் மூலிகை சேகரிக்கும் உதவியாளன். தனது வீட்டுத் தோட்டத்தில் இல்லாத கையாந் தகரை, சாறணை, தயிர்வளை போன்ற செடி வகைகள், பட்டை வகைகள், வேர் வகைகள் போன்றவற்றை கூத்தியா வத்தையில் உள்ள தங்கள் தோட்டத்திலும், போகும் வரும் வழியில் உள்ள ஊரார் வீடுகளிலும் தான் சேகரிப்பார். அவற்றை அவர் அடையாளம் காட்ட, அவர் சொல்லும் விதத்தில் சேகரித்து வாழை நாரால் கட்டி குஞ்சுக்கடகத்துள் போடுவது எனது பணி.

அது முடிந்து வந்து வளவில் உள்ள முள் முருக்கு, முட் கிழுவை, சீமைக்கிழுவை மரங்களில் ஆட்டுக்கு இராத்தீனி தேடுவார். அதன்பின் ஆடு, மாடுகளை அவிழ்த்து வந்து

கொட்டிலில் கட்டி கால் முகம் கழுவக் கிணற்றடிக்குப் போவார். அதன்பின்பும் முற்றத்துக் கோவில் வணக்கம், பால் கறத்தல், விளக்கேற்றல், இரவுச்சாப்பாடு... என்று பொழுது சாயும்.

தூர இடங்களில் இருந்து வரும் நோயாளர்கள் அனேகமாக மாலை நேரங்களிலேயே வருவார்கள். அதைவிட விசக்கடி, விபத்து போன்ற அவசர சிகிச்சை பெற வருபவர்கள் எந்த நேரத்தில் வந்தாலும் கனகம்மாக்கா கைகொடுத்து உதவுவார்.

அதைவிட அந்த அயலில் உள்ள வீடுகளுக்கு கனகம் மாக்காதான் ஆலோசகர். பெண் பிள்ளைகள் பருவம் அடைந் தாலும் அதனை உறுதிப்படுத்தவும், மேற்கொண்டு பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும், ஒரு பெண் கர்ப்பவதி ஆனாலும், முதியவர் ஒருவர் படுக்கையில் கிடந்தாலும் கனகம்மாக்காவிடம் கேட்டுத் தான் ஊரவர் எதையும் செய்வார்கள். ஊரவர்களும் கைம்மாறாகத் தங்கள் தங்கள் தோட்டங்களில் விளையும் மரக்கறிகள், பழங்கள், கிழங்கு வகைகளை அவ்வப்போது கனகம்மாக்கா வீட்டிற்கும் கொடுத்து வருவார்கள். கனகம்மாக்காவின் மகள் கலாவதி அயல்வீட்டுப் பிள்ளைகளுக்கு மாலை நேரத்தில் வீட்டுப்பாடம் சொல்லிக் கொடுப்பார். வாத்தியார் அவற்றைக் கவனித்துக் கொண்டு இருந்து வழிப்படுத்துவார். இன்னும் கிராமத்துக்குள் மின்சாரம் வரவில்லை. அரிக்கன் லாம்பும், கை விளக்குகளும் தான் இருட்டோடு போராடும் சாதனங்கள்.

அயல் கிராமத்து அப்பு ஒருவர் கண்ணுக்கு மருந்து விட வந்திருக்கிறார். கண்பார்வை வர வர மங்கலாய்க் கிடக்குது என்று ஆள் உதவியுடன் வந்திருக்கிறார். அவரைப் பரிசீலித்து, தலைவாசல் வாங்கில் படுக்கவைத்து கனகம்மாக்கா கண்ணுக் குள் மருந்து விடுகிறார். ‘‘உது வயது போகேக்க பெலன் குறையேக்க உப்பிடித் தான். ரெண்டு கிழமைக்கு மருந்து விட்டால் மங்கல் குறையும். அப்படியே எப்பன் நேரம் படுத் திருங்கோ, மருந்து கண்ணுக்கை சுவறவேணும்....’’

‘‘கண்பரிகாரி மாமி, கண்பரிகாரி மாமி, அம்மா உங்களை ஒருக்கால் கூட்டி வரட்டாம். ஆச்சிக்கு கடுமையாக இருக்கு...” றோட்டுக்கரை வீட்டுச் சிறுமி அவசரமாக ஓடி வந்தாள். கனகம்மாக்கா மகள் கலாவதியைக் கூப்பிட்டு, வந்திருக்கும் பெரியவரின் பணிவிடையைக் கூறிவிட்டு சிறுமியுடன் அவசரமாகப் போகிறாள். றோட்டுக்கரை வீட்டில் இருந்து அவலக்குரல் அதிர்ந்தது.

(டிசெம்பர் - 2006, பெப்ரவரி - 2007)

# 04. மேசன் மகாலிங்கம்



**அ**மைதியாக உறங்கிக் கிடந்த பளைக் கிராமம் அந்த நாதம் கேட்டு விழித்துக் கொண்டது. நேரம் அதிகாலை ஆறு மணி. காற்றின் அதிர்வுகள் கொண்டு வரும் தாள ஒழுங்கை வைத்தே இது மாலியின் கை வண்ணம் என்று அடித்துக் கூற முடியும்.

‘‘தம்பகத் தம்பி ஒழுங்கைப் பக்கமாகத்தான் கேட்குது. வைரமுத்தண்ணை வீட்டிலதான் போல...‘‘ ‘‘சொன்னாப் போல கிழவி கடுமையாக்கித் தானே படுக்கையில கிடந்தது, எங்களுக்கும் சொல்லுகினையோ தெரியேல....’’ ‘‘அதுக்குத்தானே பறை மேளம் அடிக்கினம், அயலுக்குள்ள போகத்தானே வேணும்... எண்டாலும் வந்து சொல்லாமல் என்னெண்டு...!’’

வீட்டுக்குள் விவாதம் அதிக தூரம் வளர்வதற்கு முன் வாசலில் சைக்கிள் மணி ஓசை கேட்கிறது. இரண்டு இளைஞர்கள் ‘‘வைரமுத்து மாமா வீட்ட ஆச்சியின்ர இழவுக்குச் சொல்லியிருக்குது. இண்டைக்குப் பின்னேரம் பிரேதம் எடுக்கினம்’’. வந்தவர்கள் மூச்சுவிடாமல் மரண அறிவித்தலை வாசித்துவிட்டு அதே வேகத்தில் சைக்கிளைத் திருப்பிக்கொண்டு போகின்றார்கள்.

இப்போது மாலியின் பறை இருதய அடிப்புடன் இணைந்து ஒலிக்கிறது.

‘‘வைர முத்தர் வீட்டில இழவு.
வந்திட்டுப் போங்கோ... வாங்கோ வாங்கோ’’
‘‘கிழவி கிழவி கிழவி போனா
காலன் வந்து கூட்டிப் போனான்...’’

என்று வரிகள் மூளையில் ரைப் செய்கின்றன. ஒரு மிருகத்தின் தோலில் மாலியின் பிரம்பு நாதம் எழுப்புகின்றது. மாலிதான் பிரதான வாத்தியக்காரர், அதாவது பெரிய பறை மேளம், இரண்டு பக்கமும் அடிக்கக் கூடியது. கூடவே அரைக்கோள வடிவமான பக்க மேளம். அதில் அடிக்கும் பிரம்புகளின் நுனியில் ‘8’ போல பிரம்பு வளைத்துக் கட்டப்பட்டிருக்கும். அதனை மாலியின் இளைய

மகன் வாசிக்கிறார். இதே போல் ஒரு பெரியதும் ஒரு சிறியதுமான இன்னொரு செற் மேளம் கூட அங்கே வாசிக்கப்படுகின்றது. அது வசாவிளான் பகுதி. அவர்களும் மாலியின் உறவுக்கார சகபாடிகள்தான்.

'மாலி' என்றால் மகாலிங்கம் என்ற பெயரின் சுருக்கம். நம் ஊரவர்கள் வைத்தது. புழக்கத்துக்குச் சுகம் என்று காரணம் கூறினாலும் 'இவனுக்கு ஏன் பெரிய பெயர்?' என்பதுதான் உள்ளார்ந்த காரணம். ஆனாலும் மாலி தன் பெருமையில் சற்றும் குறைந்தவர் அல்ல! ''உவையள் எப்ப பாருங்கோ தவில் வாசிக்க வந்தவை? என்ர பூட்டன் பறை வாசிச்சாத்தான் பாருங்கோ அந்த நாளில மாவிட்ட புரத்தில கொடி ஏறும், தேர் அசையும். இப்ப என்ன? கவுணாவத்தை என்ன, காட்டு வைரவர் என்ன நாங்கள் அடிச்சால்தான் வேள்வி சிறக்கும். எங்கட நயினாற்ர பளையில் பொங்கலுக்கும் நாங்கள் வாசிச்சாத்தான் பானை சரிக்கும்...." என்று அடுக்கிக் கொண்டே போவார்.

பறை மேள இசைஞானம் அவரது பரம்பரை ஊடாக வந்தது. கல்வி வளர்ச்சி, வாழ்க்கைத் தரம், சாதிய ஒழிப்புப் போராட்டம் என்று மனிதாபிமான வளர்ச்சிக்கான மாற்றங்கள் சமூகங்களிடையே நுழைகின்ற போது மாலியின் உறவினர்கள் பலர் தொழில் நிமித்தமும், சமூகக் காரணங்களுக்காகவும் பறை வாசித்தலை மெல்ல மெல்லக் கைவிட்டு விட்டனர். ஆனால் மாலி அதற்கு இன்னமும் இடம் கொடுக்கவில்லை.

'காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலை தொடங்கப் பட்டமையானது வலிகாமத்தில் ஒரு பாரிய தொழிற்புரட்சியை, சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. வர்ணாச்சிரம தர்மம், அடிமை குடிமை என்று இருந்த சாதிய அமைப்புக்கள், குடியிருப்பு முறைமைகள் மெல்ல மெல்ல தளர்வடையத் தொடங்கின. தொழிலாளர்களாகவும் சில முக்கியமான பதவிகளுக்கும் தெற்கில் இருந்து சிங்களவர்கள் கொண்டு வரப்பட்டு விடுதிகளில்

குடியமர்த்தப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நிபுணத்துவத் துறை சார்ந்தவர்களும் தொழிலாளர்களும் உள்வாங்கப்பட்டார் கள். இதில் வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

சீமெந்து ஆலையில் 'தொழிலாளர்' என்று வேலை பெற்றுப் போனவர்கள் சமனாக நடத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளானார்கள். தொழிற்சாலைக்கு வெளியே உள்ள சாதிய பாரபட்சங்களை உள்ளே கடைப்பிடிக்க முடியாது. இதனால் தாழ்த்தப்பட்ட சமூகத்து இளைஞர்கள் பலரும் 'அடிமை குடிமை' நிலையில் இருந்து 'தொழிலாளர்கள்' தரத்துக்கு, அலுவலர் தரத்துக்கு அங்கீகரிக்கப்பட்டனர்.

அதைவிட இன்னொரு அசைவும் ஊருக்குள் நிகழத் தொடங்கியது. சீமெந்து இலகுவாக கிடைக்கும் பொருள் ஆனது. வலிகாமத்தில் பணப் பயிர்களின் உற்பத்தி வளர்ச்சியுடன் பணம் சார்ந்த பொருளாதார ஏற்றமும் உள்நுழைந்தது. திண்ணை, கொட்டில், தலைவாசல் என்றிருந்த மண் குடிசைகள் கல் வீடு களாக மாறத் தொடங்கின. இங்கு தான் மகாலிங்கம் போன்ற வர்கள் மேசன் தொழிலில் ஈடுபட உந்து சக்தி ஆயின.

ஆரம்ப காலங்களில் மகாலிங்கமும் (கூலி) முட்டாளாகத் தான் கட்டடத் தொழிலாளி ஆக வேலை பார்க்கத் தொடங்கினார். நாளடைவில் சுய ஆர்வம், முயற்சி என்பவற்றால் 'மேசன்' ஆகி விட்டார். மேசன் என்ற தகுதி மட்டுமல்ல, ஒரு ஒப்பந்தக் காரருக்குரிய தோரணை அவரிடம் இருக்கிறது. ஆனாலும் அவர் தொழிலாளர்களோடு தொழிலாளராக வேலை செய்து கொண்டு தான் இருப்பார்!

ஒரு ரகசியம்; என்னவென்றால்; ஊருக்குள் உயர்ந்த சாதி என்று சுட்டிக் காட்டிக் கொள்பவர்கள் கூட தொழில் நோக்கத் துக்காக மேசன் மகாலிங்கத்திடம் முட்டாளாக தொழில் பார்க்கும் நிலைமையும் ஏற்படுவதுண்டு. ஆனால் மாலி அதையெல்லாம்

தொழில் ரீதியான அணுகு முறையாகவே அனுசரித்துக் கொள்ளுவார்.

தொழில் என்று வந்துவிட்டால் மாலி அதனை தெய்வப் பணியாக மதிப்பவர், தாமும் உசாராகி மற்றவர்களையும் உசாராக தொழிலாற்ற வைப்பார். மாலி சாந்தகப்பையுடன் சாரத்தில் ஏறிவிட்டார் என்றால் சாந்து ஒழுங்காக வரவேணும், கையை நீட்டிற நேரத்தில் மட்டப் பலகை, தூக்குக் குண்டு வரவேண்டும். இல்லாவிட்டால், ''என்ன ராசு இண்டைக்கும் பழஞ்சோறே திண்டனீ! கோதாரி விழுந்த நீ தயிரோடையும் திண்டிருப்பாய், அதுதான் மொய்ப்பில நிற்கிறாய். எப்பன் கையை ஆட்டிச் சாந்தைக் குழையன்! மண்வெட்டிக்கு ஒண்டும் நோகாது...!'' என்று நூதனமாய்த் திட்டுவார். மாலிக்கு சாந்து, கலவை சரியாய் இருக்க வேணும், வீண் விரயம் பிடிக்கவே பிடிக்காது. வேலைச் சுத்தம்தான் அவரது செங்கோல்.

இப்படியாக இழவு வீடு வந்து, பறை அடிக்க வேண்டி வந்தால் தனது கட்டட நிர்மாண வேலைகளுக்கு பாதிப்பு வராத வகையில் பார்த்துக் கொள்ளுவார். அதற்கு உரிய ஆள் அனுப்பி வேலைப் பகிர்வு பண்ணி கட்டட வேலையும் கச்சிதமாக நடக்கும்.

''இஞ்சார் உனக்குத் தெரியுமே. தெல்லிப்பழையில செல்வ நாயகத்தார் வீட்டுக்குக் கிழக்காலி வளத்தில உடையாற்ற மரு மோன்ர வீடு கட்டின்னான். பாத்தனியே! இடைக்காட்டில எலக்றிக்கல் சுவாமிநாதற்ற வீடு நான் தான் கட்டினனான், கேட்டுப் பார்! கனக்க ஏன் உங்க குரும்பசிட்டியில கம்பளை மணியத்தின்ர வீடு ரெண்டு மாடி சும்மா அரண்மனை மாதிரி, இந்த மாலிதான் கட்டினவன்... உந்த என்ஜினியர்மார் ஒவ்வொண்டு சொல்லு வாங்கள், நான் கம்பி கட்டி பிளாற் இழுத்தனென்டால் வீடு எத்தின காலத்துக்கும் நிண்டு பிடிக்கும். பறங்கிக்காரன் வந்து குண்டு போட்டாலும் அசையாது. தலை முறை தலைமுறையாய்க் கிடந்தெழும்பலாம்'' என்று தன் பெருமையை முரசறைவார்.

இழவு வீட்டில் பறை வாசிப்பும் அப்படித்தான். தண்ணீர் குடிக்க, வெற்றிலை போட இடைக்கிடை ஓய்வு எடுத்துக் கொள்வார்கள். பனை வடலி ஓலையை மூரியடியில் வெட்டி, நிலத்தில் பரவி அடுக்கினால் அதுதான் வாத்தியகாரருக்கான கம்பளம். தண்ணீர் குடிப்பதற்கு ஆளுக்கு ஒரு 'பிளா' செய்து கொள்வார்கள். வளவுக்குள் நிற்கும் மாமரமோ வேப்பமரமோ தான் முழுநாளும் கூரை. இழவு வீட்டின் இன்னொரு பக்கத்தில் கமுகு தறித்துப் பாடை கட்டுவார்கள். பாதியாய்ப் பிளந்த அடிக் கமுகுதான் தூக்குத் தடி. மீதி மரத்தைப் பிளந்து சிலாகைகள் சீவிச் சகடைபோல் கட்டிச் சோடிப்பார்கள். ஒரு பக்கம் தென்னங் குருத்து வெட்டி தோரணம் செய்வார்கள். பந்தல் போட்டு, வெள்ளை கட்டி கிரியைகளுக்கு ஆயத்தங்கள் நடக்கும்.

எல்லா வேலைகளுக்கும் மாலியின் கை தான் அடிநாதம். கிரியைகள் முடிந்து பிரேதம் எடுக்கின்ற நேரம் பறையின் சுருதி மாறும். பாடை வாசல் கடந்து சந்திக்கு வரப் பறை ஒலியில் மாற்றம் தெரியும். சுடலை போகும் வரையில் அது செல்கின்ற திசையைக் காற்றுச் சுமந்துவரும். பறையின் சங்கீதம் சொல்லும் பிரதான சந்தி என்றால், பிரேதமானவர் விலாசமான ஆள் என்றால் வாத்தியத்தின் விலாசமும் ஓங்கி ஒலிக்கும். பறை மேளச் சமா என்றே கூறலாம்.

மாலி சாதாரணமாகவே ஆறு அடி வரை உயரமான ஆள், கறுத்த உயர்ந்து பரந்த தேகம். எண்ணெய் வைத்து மேவி இழுத்த தலை, சேட்டுப் போட்டு அறியாத தேகம். வெள்ளை வேட்டி சால்வை தான் அவரது சீருடை, சால்வையைத் தோளில் போட்டு மேளத்தின் வார் அந்த சால்வையில் சொருகி நிற்கும். முன் நீண்டு மேலெழுந்த பெரிய தொந்தியில்தான் மேளம் பொஸிஸன் எடுக்கும். கையில் இருக்கும் பிரம்பு தாளத்துக்கேற்ற தூரம் போய் வந்து தோலில் விளையாடும், பறை மேளச் சத்தம் மைல் கணக்கில் கேட்கும்.


இரண்டு மணிக்கு மேலே வெளிக்கிட்ட பிரேதம் காட்டு வைரவர் சுடலைக்குப் போக இரண்டு மூன்று மணித்தியாலமும் பிடிக்கும்.

சுடலைக்குப் போன பிரேதம், சிதையைச் சுத்தி வந்து கொள்ளி வைக்கும் வரை மாலி குழுவினரின் கை ஓயாது. சிதைக்குக் கொள்ளி வைத்து முடிந்து தான் குடிமைக் கூலி கொடுப்பார்கள். கூடவே சம்பிரதாயத்துக்காக கொடுக்கின்ற விடயங்களும் கிடைக்கும்.

எல்லாம் முடிந்து, சக வாத்தியக்காரர்களின் கொடுப் பனவுகள் கொடுத்தனுப்பி மாலி தன் வீடு வரப் பொழுதுபடும். வீடு வந்து குளித்து ஆடை மாற்றி திண்ணையில் சாய்ந்து தன் அன்றைய சேவை பற்றிய ஒரு சுய மதிப்பீட்டை மேற் கொள்வார். கையில் பித்தளை மூக்குப் பேணியில் வெறுந் தேத்தண்ணியுடன் மனைவியார் வர, மாலி அன்றைய புதினங்களைப் பகிர்ந்து கொள்ளுவார். ‘‘மாரி வரக்கு முன்னம் வீட்டுக்கூரை மேய வேணுமுங்கோ...!’’ மனைவி ஞாபகப்படுத்த மாலியின் நெஞ்சில் பெருமூச்சு எழும். எத்தனை மாடி வீடுகள் கட்டியென்ன, பறை மேளத்தில் விலாசம் காட்டியென்ன, பெருமை பேசியென்ன மாலி இன்னமும் மண் வீட்டில்தானே வசிக்கிறார்.

(மார்ச் - மே 2007)

# 05. மாங்கண்டு மதியாபரணம்



''அங்கை என்ன செய்யிறாய்! பொழுது விடிஞ்சு வெயிலும் வரப்போது! தண்ணியக் கொண்டாவன்!'' சார்மனைக் கதிரைக்குள் இருந்தபடி புகையிலைத் துண்டுகளை அடுக்கி அடுக்கிச் சுருட்டியபடி மதியாபரணத்தார் குரல் கொடுத்தார். ''கொதிதண்ணி; ஆத்தியெல்லே தரோணும், பிறகு அதுக்கும் கத்துவியள்''; மனைவி தேநீர்க் கோப்பையுடன் தலை வாசலுக்குள் வருகிறார். ''நீ ஆத்திக் கொண்டு வருமட்டும் சந்தைக்காரர் நிக்கிறாங்களே!'' சுருட்டிய சுருட்டினை உதட்டுள் வைத்து உருட்டி உருட்டிப் பதம் பண்ணிக் கொண்டிருந்தார் மதியாபரணத்தார்.

''உந்தச் சுருட்டைப் பேந்து சப்புங்கோ! இப்ப தண்ணியப் பிடியுங்கோ! சுடுகுது'' நீலநிறப் பொட்டுக்கள் போட்ட வெள்ளை நிறத் தகரக் கோப்பையிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது. ''இஞ்ச கொண்டா!''. ''அப்பத்துக்குப் போட்டனான். பால் புழிய வேணும்...'' இடது கையால் தனது கொண்டையைத் தட்டியபடி தனது வேலைப் பட்டியலை மதியாபரணத்தாரின் மனைவி வாசித்துக் கொண்டிருந்தார்! ''சின்னவன் ஆசைப்பட்டவன், சுண்ணாகச் சந்தையில நண்டு ஏதும் வாய்ப்பாய்க் கிடந்தால் வாங்கியாங்கோ!''.

''நேரம் போவிட்டுது. நான் வாறன்'' உதடுகளுக்குள் பதப்படுத்தி காதுக்குள் செருகி வைத்திருந்த சுருட்டைப் பொக்கு, பொக்கு என்று பற்ற வைத்துக் கொண்டு, வெள்ளைத் துவாய்த் துண்டை தோளில் போட்டபடி மதியாபரணத்தார் வாசலால் இறங்கினார்.

''இஞ்சார், உவன் ராசனை வரச் சொன்னனான் கொட்டடிக்க! வந்தா தண்ணி வென்னியக் குடு, தகரத்தை வீணாக்காமல் பெரிய கொட்டுகளாய் பாத்து அடிக்கச் சொல்லு''.

வேட்டித் தலைப்பை மேலெடுத்து சைக்கிள் சீற்றுக்குள் செருகி, ஏறி அமர்ந்து வலது காலால் பெடலை பின்னாகத் தட்டி மேலெடுத்து பாதி பாதி வட்டமாக மிதித்து பலன்ஸ்

எடுத்து மதியாபரணத்தாரின் சைக்கிள் ஓடத் தொடங்கும். உரப் பையில் வெட்டித் தைத்த கைப்பை இரண்டு, கான்டிலில் எப்பவும் தொங்கிக் கொண்டிருக்கும்.

கொழும்பில் இருந்து வந்த மெயில் ரெயினும் மாவிட்டபுரம் ஸ்ரேசனில் நின்று விட்டு புறப்படும் போது இப்படி ஒரு உந்து கோலோடுதான் புறப்படும். அதிகமாக மதியாபரணத்தாரும், கொழும்பு ரெயினும் இந்த சந்தர்ப்பத்தில் எதிர் எதிராகச் சந்திப்பார்கள். ஆறு தண்டவாளப் பாதைக்கு மேற்குப் புற மாகத்தான் மதியாபரணத்தாரின் வீடு உள்ளது. சீமெந்து ஆலைக்கு ஜிப்சம், களிமண், கல் கொண்டு செல்லப்படுவதும் சீமெந்து ஆலையில் இருந்து கிளிங்கர், சீமெந்து வெளியே கொண்டு செல்லப்படுவதும் இந்தப் புகையிரதப் பாதை வழியாகத்தான். ஆனால் மெயில் காங்கேசந்துறைக்குப் போய் ஓய்வெடுக்கும், மதியாபரணத்தார் சுண்ணாகம் சந்தைக்குப் போவதுடன் நாளை ஆரம்பிப்பார்.

ஒரு மரச் சோலை அசைந்து வருவது போல இருக்கும் பழைய றலி சைக்கிள். அதில் பெயின்ட் கழன்று கறள் பிடித்துக் கனகாலம். ஆனாலும் பெரிய கரியர், உறுதியான சைக்கிள். குறைந்தது பத்துக் கொட்டு மரக்கன்றுகளைப் பின்னால் கரியலில் கட்டுவார்.

காலநிலை, சூழல், சந்தை வாய்ப்பைப் பொறுத்து கொட்டுக் கட்டுதலின் எண்ணிக்கை மாறுபடும். மாங்கன்று, பலாக்கன்று, கொய்யா, நெல்லி, எலுமிச்சை, தோடை என்று சந்தைக் கேள்விக்கு ஏற்றமாதிரி மரக் கன்றுகளின் வகையும் மாறுபடும்.

மாவிட்டபுரம் கோவில் தெற்கு வீதியில் மதியாபரணத்தார் போகும் போது சூரன் போர் நினைவுக்கு வரும். தெற்கு வீதியால் தான் சூரனை வீதிக்குள் கொண்டு வருவார்கள். துரைச்சாமிக் குருக்கள் வீட்டு மாமரத்தில் குழைக் கொப்பு முறித்து, சூரன் அதற்குள் மறைந்து செல்வது ஒரு சுவையான காட்சி. மதியா

பரணத்தார் அந்த மர நிழலில் அமர்ந்தபடி சைக்கிளை ஓட்டிக் கொண்டு சுண்ணாகம் சந்தைக்குப் போகிறார். வாயில் இருக்கும் சுருட்டு தெல்லிப்பழைச் சந்தி வரை நின்று பிடிக்கும். அதற் கிடையில் சூரியன் வந்து பதனத்தில் ஓரளவு வெப்பம் வந்து விடும்.

விடியற் காலமை எழும்பி, சீனியைக் கையில போட்டு, தொட்டு நக்கித் தேநீரைக் குடித்து விட்டு ஓடோடி வந்து பாணுக்கு வரிசையில நிற்பவர்களை ஒரு தடவை பார்த்து விட்டு ஊண்டி மிதிக்கிறார்.

சுண்ணாகம் சந்தையில் கொழும்பு வியாபாரிமார் லொறி களுக்கு வெங்காயம், செத்தல் மிளகாய், மரக்கறி கட்டுவார்கள். மூட்டை கட்டி அடுக்கி மிச்ச இடத்துக்கு மதியாபரணத்தாரின் உற்பத்தியைத் தேடி வாங்கி ஏற்றுவார்கள். யாழ்ப்பாணத்தில் மாரிமழை இல்லாத காலம் என்றாலும் தெற்கில் மழைக்காலமாக இருக்கும். மரக்கன்றுகளுக்கு அங்கு டிமான்ட் இருக்கும். அதுவும் 'யாப்பனே அம்ப' என்று அவர்கள் கறுத்தக் கொழும்பானாய்த் தேடி வாங்கி ஏற்றிப் போவார்கள்.

சில வியாபாரிமார் காலி, அம்பாந்தோட்டைப் பக்கம் இருந்து மெயில் ரெயினில் வந்து மாவிட்டபுரத்தில் இறங்குவார்கள்.

மதியாபரணத்தார் சந்தையால் வருமட்டும் காத்து நின்று தேவையான பழமரக்கன்றுகளை கொள்வனவு செய்வார்கள். இரவு மெயில் ரெயினில் ஏற்றித் தெற்குக்கு கொண்டு செல்வார்கள்.

சந்தையிலும் சரி போக்குவரத்திலும் சரி மதியாபரணத் தாருடன் யாரும் சேட்டை விட மாட்டார்கள். ஆறரை அடி உயரம், அகன்ற மார்பு, அந்தக் காலப் படங்களில் வரும் ராமராவ் போன்ற ஒரு கவர்ச்சிகரமான ஆள். அடிப்பதென்றாலும் நின்ற இடத்தில் நின்று சுழற்றி விடக் கூடிய நீளமான கை, வைரம் பாய்ந்த விரல்கள், சேட்டுப் போட்டறியாத தேகம். நெஞ்சு,

முதுகு எல்லாம் மயிர்களால் நிறைந்திருக்கும். கதையும் கட் அன்ட் றைட் தான். மிஞ்சினால் கையை நீட்டி விட்டிடுவார்.

அவரது வீட்டுப் படலையில், ரெயில் றோட்டைப் பார்த்தபடி கறுப்பு வெள்ளையில் ஒரு பெயர்ப்பலகை இருக்கும். 'இங்கு நல்ல ரக ஒட்டு மாங்கன்றுகள், பழமரக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.' 'மா, பலா, வாழை, மாதுளை, கமுகு, செவ்விளநீர், தென்னம் பிள்ளைகள், நெல்லி, தோடை, எலுமிச்சை, விளாத்தி...' என்று அந்தப் பட்டியல் நீளும். உண்மையில் யாழ் மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு பழ மரக்கன்று உற்பத்தியாளர் இவர்தான். ''சும்மா அல்ல. இரண்டு தடவை விவசாய மன்னனாக வந்தனான். றேடியோ சிலோனில பேட்டி காண வேணும் எண்டு ரெயில்வே வொறணட் அனுப்பிக் கூப்பிட்டவை, ஒருக்கால் உவர் நமசிவாயத்தார், அந்த அந்த றெக்கோட் பெட்டியும் கொண்டந்து என்னோடை கதைச்சு பதிஞ்சு கொண்டு போய், பேந்து றேடியோவில போட்டவர்'' என்று தனது முக விலாசம் பற்றி மதியாபரணத்தார் பெருமைப்பட்டுக் கொள்வார்.

கிட்டத்தட்ட இருபத்தைந்து பரப்பு அளவில் அவரது வளவு. செம்பாட்டுப் பூமி, கிழக்கு வளத்தில் வீடு. தலைவாசல் மட்டும் சீமெந்தால் தூண் போடப்பட்டு குந்து கட்டி, ஓடு போட்டிருக்கு. வீடு, குசினி, மண்சுவர், மண்திண்ணை, பனையோலையால் கூரை வேய்ந்திருக்கு. தெற்கு வளமாக மையப் பகுதியில் உயரப்பாங்கான இடத்தில் கிணறு. பூவரசம் ஆடுகால். பனைமரத் துலா. இருபது முழத்துக்கு மேல் நீளமாக துலாக்கொடி. மெசின் வைத்து இறைத்தால் எந்த மூலைக்கும் தண்ணீர் பாயும். முன்பு அது பட்டை இறைப்புச் செய்த கிணறு. இப்போது கட்டுத் தூர்ந்து போய்க் கிடக்கிறது.

வளவைத் துண்டு துண்டாகப் பிரித்த மாதிரி பழமரச் செய்கைகள் இருக்கும். மா, பலா, வாழை, தென்னை, கமுகு, மாதுளை, தோடை, எலுமிச்சை, நெல்லி, அரு நெல்லி என்று

நிரந்தரமாகவே பயன்தரும் மரங்கள் ஆங்காங்கு செழித்து வளர்ந்து, பூத்துக் காய்த்துக் கொண்டிருக்கும். கத்தரி, வெண்டி, மிளகாய், மரக்கறிச் செடிகளும், பாகல், புடோல், பூசணி, வத்தகைக் கொடிகளும் மரங்களில் படர்ந்து கிடக்கும்.

மாமரம் என்று சொன்னால் கறுத்தக் கொழும்பான், பாண்டி, வெள்ளைக் கொழும்பான், சேலம் (கிளிச்சொண்டு), அம்பலவி, செம்பாட்டான் என்று விசேட இனங்கள் அத்தனையும் பெரு மரங்களாக இருக்கும். அவைதான் ஒட்டுவதற்குக் கிளைதரும் சிபி மரங்கள்.

பதியம் வைக்கும் பகுதிகள் காலத்துக்கு ஒன்றாக ஒவ்வொரு இடத்தில் சுழற்சி முறையில் மாற்றப்பட்டிருக்கும். ஒவ்வொரு வயது மரங்கள் ஒவ்வொரு இடத்தில் கூட்டமாக இருக்கும். அவைதான் அடித்தண்டுகளையும், வேரையும் கொடுப்பன. வேரொடு பெயர்ந்து வலம் வந்து வேறு ஊர்களில் விளைவு செய்வன.

நிலத்தைக் கொத்துவது, பண்படுத்துவது, பாத்தி கட்டுவது எல்லாம் கூலி ஆட்கள்தான். கொட்டு எனப்படும் பதியம் வைப்பதற்கான பாத்திரங்களை தகரத்தில் செய்வதற்கு அந்தத் தொழில் தெரிந்தவர்கள் வந்து நாட் சம்பளத்துக்குச் செய் வார்கள். அதற்கான பாவித்த தகரக் கொள்கலன்களை வண்டிற் கணக்காகக் கொணர்ந்து இறக்குவார். பதியங்களை ஒட்டுவது, பதியங்களைக் கிளப்பிக் கொட்டுகளில் வைப்பதற்கும் அவ்வத் துறையில் நிபுணத்துவமானவர்கள் வந்து செய்வார்கள். ஆனாலும் இவை எல்லாத் துறையிலும் மதியாபரணத்தார் கைதேர்ந்தவர். கைராசிக்காரர். தானே தனியனாக கன்றுகளை ஒட்டியும், பதியம் வைத்துப் பராமரித்தும், விற்பனையும் செய்பவர். இப்போது முதுமை காரணமாக தொழிலாளர்களிடமும் கொடுத்து விடுகின்றார்.

''ஐந்து பெண்களைப் பெற்றவன் ஆண்டி ஆகுவான் எண்டுவினை, நான் ஏழு பெத்தனான். அரசனாத்தான் இருக்கிறன்''

என்பார். இரண்டு ஆண் மக்களுடன் மொத்தம் ஒன்பது பிள்ளை கள். அவரது கடைக்குட்டி மகனுக்கு என்னைவிட இரண்டு வயது கூட இருக்கும். ஆனாலும் அவர் என்னை ''மச்சான்'' என்றுதான் கூப்பிடுவார்.

நான் எனது சிறுபிள்ளைத் தனத்தில் ''என்னை ஏன் மச்சான் என்று கூப்பிடுறீங்கள்!'' என்று கேட்பேன்! ''என்ர மோளவைக்கு நீ மச்சான் தானே அதுதான்!'' என்று கூறுவார்.

பதியம் வைப்பதற்காக விதைக்கும் மாம்பழங்களை வண்டில் நிறையக் கொண்டு வந்து தன் வளவுக்குள் கொட்டுவிப்பார். அவை அதிகம் சாதாரண புளி மாம்பழங்களாக இருக்கும். ''இஞ்சார் மச்சான்! மாம்பழம் கொண்டந்து போட்டிருக்கு, ஆளுக்கொரு கத்தி கொண்டாந்து வெட்டித் தின்னுங்கோ. ஆனால் கொண்டு போகக் கூடாது. சூப்பிப் போட்டு கொட்டையை குவியலில போட்டுட்டுப் போக வேணும் சரியே!'' ஆட்டுக்குக் குழைவெட்டப் போற நேரம் மதியாபரணத்தார் என்னைக் கூப்பிட்டுத் தகவல் சொல்லுவார். பிறகென்ன அடுத்த நாள் பள்ளிக்கூடத்திலையும் அதே நினைப்புத் தான். வீட்ட வந்த உடன அக்கம்பக்கம் எல்லாருக்கும் சொல்லி, ஆளுக்கொரு கத்தியோட போனமெண்டால் அலுக்கு மட்டும் மாம்பழம் சாப்பிடலாம்.

வேனிற் காலம் என்றால் மதியாபரணத்தாரின் வளவில் அத்தனை மரங்களும் கனிகள் சுமந்து நிற்கும். கிளி கலைப்பதும், அணில் கலைப்பதும் அங்கு காவல் புரியும் வீமனுக்குப் பெருத்த வேலையாகப் போய்விடும். வீட்டில நிற்பவர்கள் யாராவது அடிக்கடி மரங்களில் தகர டப்பாக்களை கோயில் மணி அடிப்பது போல் அடித்துக் கொண்டிருக்க வேண்டும். மதியாபரணத்தார் ஒரு பதத்தில் வைத்து மரத்தோடு காய்களைத் தீர்த்து விலை பேசி விற்றுவிடுவார். ஆனாலும் பாண்டி மாமரத்தில் களவாக ஏறி காய்களைப் பறித்துத் தின்பதில் எங்களுக்கு ஒரு சுகம்

இருக்கும். அதற்குள் அந்த வீமனிடம் இருந்து தப்புவதும் ஆபத்தானதுதான்.

மதியாபரணத்தாருக்கு இன்னொரு பொழுது போக்கும் இருக்குது. வேள்விக் காலம் வந்தால் ஆளைப் பிடிக்க ஏலாது. ஆட்டுக் கடாக்களை குறிவைத்துக் கொண்டே திரிவார். தலை, குடல், இரத்தம், இரண்டு பங்கு இறைச்சி அவருக்கு. மீதி இறைச்சிப் பங்குகளை எப்பிடியும் விற்று, போட்ட முதலை எடுத்துப் போடுவார்.

வேள்வி இல்லாத நாட்களிலையும் பல்லுக் கடுத்தால் இதே பிராக்குத்தான். எங்காவது ஆட்டுக் கடாவை விலை பேசி, ஊரில், உறவுகளில் பங்குகளுக்கு ஆள் பிடித்து, ஒரு சனிக்கிழமை நாளாய்ப் பார்த்து இறைச்சி அடிப்பார்.

வெள்ளிக்கிழமை இரவு நித்திரை வராது. சனி விடியற்புறம் மூன்று மணியளவில் எழும்பி வெட்டுற ஆளை எழுப்புவார். கிடாயை வளவு மூலையில் உள்ள மாமரத்தடிக்கு கொண்டு போய் கழுத்து வெட்டப்படும். பின்பு கயிறு போட்டுத் தூக்கி மாமரக் கிளையில் தொங்க விட்டு உரித்து, வெட்டி, பங்கு போடல் நடக்கும். காலை ஏழு மணி ஆகும் போது முழு வேலையும் முடிஞ்சிருக்கும்.

பனை வடலி ஓலை வெட்டி பரப்பி பங்கு பிரித்து, பிளா போலச் செய்து மடித்துக் கட்டி உரப் பையுள் போட்டுக் கொண்டு புறப்பட்டால் எட்டு மணிக்குள் விநியோகமும் முடிந்து விடும். அயல் அண்டை வீட்டு நாய்கள் எல்லாம் மதியாபரணத்தாரின் வளவுக்குள்தான் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு உலாவும்.

அன்று அவரது வீட்டில் ஆட்டு இறைச்சியில் பல வகையறாக் களாக உணவு இருக்கும். இரத்த வறுவல், மூளைப் பொரியல், எலும்பு சூப், குடல் கறி, எலும்புக் குழம்பு, இறைச்சிப் பிரட்டல்

கறி... என்று கமகமக்கும் இந்த உணவுச் செழிப்பு ஊருக்குள்ளும் இருக்கும்.

பங்கு கொடுத்து முடிந்து வந்து அவர் கள்ளடிக்கத் தொடங்கி விடுவார். அப்போது கடித்துக் கொள்ள குடல் கறி, இரத்த வறுவல் கட்டாயம் வேணும். மூளைப் பொரியல், வெங் காயம் மிளகாய் போட்டு, முட்டைப் பொரியல் போல கலகலப்பாக இருக்க வேணும். அதுக்குப் பிறகு எண்ணெய் தேய்த்துக் குளித்துச் சாப்பிட்டுப் படுத்தால்... அது ஒருவித யோகம் தான்.

சந்தைக்குப் போனவருக்கு மரக்கன்றுகளை விற்று முடியப் பத்து பதினொரு மணியாகும். கையிற் கிடைத்த காசுடன் அப்படியே பஸ்ரான்ட் பக்கமாகப் போய் மீன் சந்தையில் விளைமீன், நண்டு, இறால் என நல்ல ஐற்றமாகப் பார்த்து வாங்குவார். அப்படியே திரும்பி வரும் வழியில் மல்லாகம் தவறணையில் கள்ளு ஒரு பிடி பிடிப்பார்.

அடித்த கோட்டுக்குள் சைக்கிள் ஓட்டப் போட்டி வைத்தது போல், சைக்கிள் அமைதியாக ஓடி ஓடி வீடு வந்து சேரும்.

கொண்டையில் தட்டியபடி மனைவியார் வாசலுக்கும், வீட்டுக்குமாக நடப்பார். ‘‘பெடியள் பள்ளியால வரப்போகுதுகள், இந்த மனுசனக் கறி கொண்டு வரச் சொன்னன், இன்னும் வந்த பாடில்லை...”

‘‘என்னப்பா! எத்தின மணி பையுக்க மச்சம் நாறிப் போயிருக்கும். ஆடி ஆடி வாறியள்”, ‘‘இஞ்சார் நல்லதாய்ப் பாத்துதான் வாங்கினனான், நாறினாப் பூனைக்குப் போடு, போ போ! ஆக்கு கெதியா, எனக்குப் பசிக்குது!”

மனைவியை கறிப்பையுடன் உள்ளே அனுப்பி விட்டு தான் கொண்டு வந்த கள்ளுப் போத்தலுடன் நெல்லி மர நிழலுக்குப் போவார். சாரத்தை மாத்திக் கொண்டு, சாய்மனைக்

கதிரையையும் தூக்கிக் கொண்டு போனால் மாலை நாலுமணி வரை அந்த ஓய்வுதான். அதற்குள் மதியச் சாப்பாடும் ஆகிவிடும்.

வெய்யில் தாழச் சாய்மனைக் கதிரையால் எழுந்தால், சூரியன் மறைந்து நிலவு காலிக்கும் வரை தோட்ட வேலையில் சுறுசுறுப்பாக இருப்பார். மெசினை இயக்கி பயிர்களுக்குத் தண்ணீர் விடுவது, பசளை போடுவது, ஒட்டுத் தவறியவற்றை மீள ஒட்டுவது, நோய் கண்டவற்றை அகற்றுவது, கொட்டுக்குள் பதிய வைப்பது, ஆணி வேர் வெட்டி விடுவது, கொட்டுகளுக்குத் தண்ணீர் விடுவது என்று வேலைகள் விரியும்.

மாலை நேரம் என்பதால் பிள்ளைகளும் பாடசாலை முடிந்து வந்து நிற்பார்கள். ஆளுக்கு ஆள் வேலைகளைப் பகிர்ந்து போட்டி போட்டு இயங்குவர். வீட்டில் வளர்க்கும் ஆடு, மாடுகளுக்கு புல் பிடுங்குவது, இலை குழை வெட்டுவது, காய்கறி, பழவகை தேடுவது என்று மதியாபரணத்தாரின் ராசதானி சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும்.

(ஜுன் - ஓகஸ்ட் 2007)

# 06. சகலகலா சுந்தரமூர்த்தி



**மா**விட்டபுரம் கோவில், கோவிலின் மேற்கு வீதி, அதுதான் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பிரதான வீதி. அங்குதான் கோவிலின் இராஜ கோபுரம் வான் நோக்கி எழுந்து கிடக்கிறது. வலது பக்கமாகக் கோபுரத்துடன் போட்டி போட்டு வளர்ந்த ஒற்றைத் தென்னை. அதற்கு நீர் வார்க்கவென்று ஒரு கிணறு. அதில் இருந்து நீர் இறைக்க இரட்டை ஆடுகால், இரண்டு துலாக்கள் அவையும் கோபுரத்துடன் போட்டி போட்டு நிமிர்ந்து நிற்கும். இடது புறமாக ஒரு கேணி, பாசி படர்ந்து உள்ளே பயங்கரமாக இருக்கும். ஆனால் அதற்கு ஆதாரமாகப் படிக் கட்டுகள் இருக்கும்.

கேணிக்கு நேர் முன்னாக முச்சந்தி. அதில் மேற்கு வளமாகப் போகும் பாதை கீரிமலையைச் சுட்டுகின்றது. நேரே சென்றால் சேந்தான் குளம், மாதகல், இளவாலை, பண்டத்தரிப்பு, சுழிபுரம், காரைநகர் வரை செல்ல முடியும். அந்த முச்சந்தியில் இடது புறமாக மருந்துக்கடை. பெயர் மருந்துக்கடை என்றாலும் சில்லறைச் சாமான், சரக்குச் சாமான், இரும்புச் சாமான், தட்டு முட்டுச் சாமான், தளபாடம்.... என்று அந்தக் கடையில் இருக்கும். பூவரச மர நிழலும் இருக்கும். அதற்கு எதிர்ப்புறமாக ஒரு பழைய கிட்டங்கிக் கட்டடம். அதன் இடது கை மூலையில் சுந்தர மூர்த்தியின் சலூன். மரப்பலகை குத்தி நிறுத்திச் சாத்திய கடைவாசலில் பாதி மூடி இருக்கும். கதவுப் பகுதியில் கற்கண்டுக் கண்ணாடி போட்ட ஆடுகதவு மட்டும் அது ஒரு சலூன் என்பதைக் காட்டும். எட்டிப் பார்த்தால் தலைகள் மட்டும் தெரியும், தள்ளித் திறந்து உள்ளே சென்ற பின் தானாக தலைகளை மறைத்துக் கொள்ளும்.

உள்ளே ஒரு பாராளுமன்றம், ஒரு வாசிகசாலை, ஒரு பள்ளிக் கூடம், தொழிற்கூடம் இயங்கிக் கொண்டு இருக்கும். மாவிட்டபுரம் சந்தியில் சலூன் வைத்திருந்தாலும் சுந்தரமூர்த்தி வசிப்பது மாவிட்டபுரத்தின் தெற்கு எல்லையில் உள்ள மதவடியில். உயரம் ஐந்து அடி இருக்கும். கட்டையான உறுதியான தேகம், கம்பி

போலத் தலைமயிர் கொஞ்சம் நீண்டு வளர்ந்திருக்கும். அதை மேவி இழுத்திருப்பார். அது ஆளை உயரமானவராகக் காட்டும். பளயகாட் சாரம் உடுத்து அதனை கறுப்பு நிற அகலத் தோல் பட்டியில் இடுப்புடன் இறுக்கியிருப்பார். மேலே நீளக் கை சேட், கையை மடிக்காது எதிர் வளமாக மேலே இழுத்து விட்டிருப்பார். சேட்டின் மேற் பொத்தான் இரண்டு, மூன்று எப்போதும் பூட்டப் படாமலே இருக்கும். வேலை நேரத்தில் ஒரு காலைத் தூக்கி கதிரையின் கீழ்ச் சட்டத்துள் செருகிக் கொண்டு ஒற்றைக் காலில் நின்றபடியே விரைவாக இயங்குவார். இந்த ஒற்றைக் கால் நிலை கால் மாற்றல் முறையில் நடக்கும். பகற் பொழுதில் அனேகமாக அவர் நின்ற நிலையிலேயே தொழில் செய்வதால் அது அவருக்குப் பழகிப் போயிருந்தது.

வெற்றிலை போட்டுச் சிவந்த வாய், அகலமான உதடு, கரகரத்த குரல், கணீர் என்ற பேச்சு, சி.எஸ். ஜெயராமன், சௌந்தரராஜன், சீர்காழியின் பாடல்களை எப்போதும் முணு முணுத்துக் கொண்டிருக்கும் வாய். அந்தப் பாடல்களின் சுருதிகளை ஏற்றி இறக்கி, நீட்டிக் குறுக்கி, ஆலாபனை செய்து தலை அசைவுடன் ரசித்துப் பாடுவார். றேசிங் - அரைச் சைக்கிள் தான் அவரது வாகனம். ஹான்டிலில் எப்போதும் ஒரு புல்லுப் பை தொங்கிக் கொண்டிருக்கும். அதன் கைப்பிடிக்கு ஆதாரம் கொடுப்பதாக தோலில் தைத்த வார் ஓடித் தைக்கப்பட்டிருக்கும். அதற்குள் மேலதிகமான சவரக்கத்தி, கத்திரிக்கோல், சீப்பு, கைமெசின் செற் ஒன்று இருக்கும். கூட வெத்திலைப் பெட்டியும் ஈழநாடு பேப்பரும் இருக்கும்.

காலை ஒன்பது மணி போல சலூனைத் திறந்தால் வாடிக் கையாளர்கள் வரிசையில் வந்து கொண்டிருப்பார்கள். வந்தவர் களைத் திரும்பிச் செல்லவிடாது காத்திருக்க வைப்பதில் சுந்தரி சாணக்கியம் மிக்கவர். சுந்தரமூர்த்தி என்று அழைப்பதில் சங்கடம் உள்ளவர்கள் அவரைச் 'சுந்தரி' என்று அன்புடன் அழைக்கின்றனர்.

வந்தவர்கள் வந்த ஒழுங்கில் கவனிக்கப்படுவார்கள். ஒருவரின் தலையையோ தாடியையோ சரி செய்து கொண்டே வருபவர் களையும் இருப்பாட்டி ஒவ்வொருவருக்கும் கதை கொடுத்துக் கொண்டிருப்பார். அவரவர் துறை சார்ந்து அவரது கேள்விகள் அமையும். இலங்கை வானொலியில் பேட்டி நிகழ்ச்சி நடத்து பவர்கள் சுந்தரியிடம் கேட்டுப் படிக்க வேணும்.

‘‘உதில கிழக்கு வீதியில சுமைதாங்கிக் கல்லுக்கு முன்னாலி பூநாறித் துண்டு ஆற்றை? உடுங்குடையாற்றையே?’’ ‘‘இல்லை, ஏன்?’’ ‘‘நேற்று ஒரு பொடிப்புள்ளை அதுக்கை நிண்டு வலு மும்மரமாய் துப்பரவு பண்ணிக் கொண்டு நிண்டார்... அதுதான்!’’ ‘‘அது உவர் துரைசிங்கத்தின்ரை மாமியாற்றை!’’ ‘‘அவை இப்ப கொழும்பிலையில்லோ?....’’ என்று உரையாடல் வளரும். அது காணி, உறுதி, தோம்பு, துரவு என்று ஆர்வமுடைய ஒருவருடனானதாக இருக்கும்.

‘‘எப்ப கொழும்பாலை வந்தனீங்கள்!’’ ‘‘விடியத்தான்’’ ‘‘ஏதும் அலுவலோ!’’ ‘‘தெரியாதே அப்புவின்ர துவசம் நாளைக்கு!’’ ‘‘அது தானே! வேலை நாளில இஞ்ச ஏன் வாறீங்கள் எண்டு பாத்தன்! இப்ப உந்த உச்ச வரம்புச் சட்டம் வந்திட்டெண்டால் எங்கட ஆக்களுக்கும் வில்லங்கம் வருமோ?’’ ‘‘ஏன்’’ ‘‘இல்ல, உங்க வன்னியில ஏக்கர் கணக்கில வைச்சிருக்கிற ஆக்கள் முழுசிக் கொண்டு திரிகினை. அதுதான் கேட்டனான்!’’ என்று ஒரு நிர்வாக அதிகாரியுடன் கதை போடுவார்.

‘‘மாஸ்ரர், இப்ப இந்த நியூ மற்ஸ் அவசரப்பட்டுக் கொண்டந் திருக்கிறியள். அது பெடி பெட்டையளுக்கு தலைக்குள்ள பூரப் பஞ்சிப்படுகுது!’’ ‘‘ஏன்?’’ ‘‘இல்லை. எரித்மற்றிக் எங்களுக்குப் பழகின விசயந்தானே! அதைக் கொஞ்சம் கூடப் போட்டு அதுக்குள்ளால அல்ஜிபிறா அதுகளக் குடுத்தால் எப்பன் தலைக்கு ஏறும் எண்டு பாக்கிறன்’’ என்று ஒரு கல்வி அதிகாரியுடன் கதை கொடுப்பார்.

யாரும் பண்டிதர்கள் வந்துவிட்டால் ‘‘என்ன இருந்தாலும் வாலிக்கு அம்பு எறிய முதல் ராமர் கொஞ்சம் யோசிச்சிருக்க வேணும்!’’ ‘‘ஏன் அப்பிடிச் சொல்லுகிறீர்?’’ ‘‘இல்ல ஆற்றை இடத்தில நிக்கிறன் எண்டெண்டாலும் யோசிச்சுப் பாத்திருக்க வேணும்!’’ என்று போடுவார்.

‘‘இஞ்ச இந்த முறை பூங்காவனத்துக்கு என்ன செய்யப் போறியள்? இப்ப சின்னமேளம் கொண்டுவாற வேலை அவ்வளவு வாய்ப்பில்லை! தட்சணாமூர்த்தி, பத்மநாதன் கோஸ்ரியோட நிக்காமல் இந்தியாவாலையும் கொண்டர வேணும்’’ இது திரு விழாச் செய்யும் லொறிக்காரருடன் போடும் போடு!

‘‘இஞ்ச பேந்து எப்ப மட்டக்களப்புக்குப் போறியள்’’ ‘‘ஏன்?’’ ‘‘இந்த முறை தேர் தீர்த்தத்துக்கு ஒரு அஞ்சாறு கலன் தயிர் வேணும்’’ ‘‘தண்ணீர்ப் பந்தலுக்கோ!’’ ‘‘ஓ - நாங்கள் வழமையா மோர் தானே போடுறனாங்கள். மட்டக்களப்புத் தயிரில போட்டால் தான் சிறக்கும். உவர் சி.ரி.பி. சிவசேகரத்தார் இப்ப மட்டக்களப்பு றூட் தான் ஓடுறார். காசு தாறன். கடிதம் குடுத்து விடுறன், போட்டு அனுப்புமன்! புண்ணியமாப் போம்!...’’ இது மட்டக்களப்பில தொழில் புரியும் அரச உத்தியோகத்தருடனான உரையாடல்.

‘‘என்ணெண்டாலும் கோயில் எண்டது எல்லாருக்கும் பொது வாய் இருக்க வேணும்!. இனி சாதிக்கொரு கோயில் கட்ட வெளிக்கிட்டால் ஊரில வீடு வாசல் கட்ட, விவசாயம் செய்ய நிலம் இல்லாமல் போயிடும். கந்தசாமியார் ஆர்? அவர்தான் தெய் வானையையும் கட்டினவர், வள்ளியையும் கட்டினவர். ரெண்டு பேரையும் இந்தக் கோயிலுக்குள்ள தானே வச்சுக் குடித்தனம் நடத்துறார்! பேந்தேன் அதுக்குள்ள போறாக்கள மறிப்பான்?’’ என்று சமதர்ம அரசியலாளர்களுடன் கதையைத் தொடுப்பார்.

இப்படி எவர் வந்தாலும் அவரது துறை சார்ந்து உரையாடி அவரை இருப்பாட்டி வைத்து தொழிலை சுத்தமாகச் செய்யும் வல்லமை சுந்தரமூர்த்திக்குத் தான் வரும்.

''தம்பி பாங்கிலை வேலை எண்டுறீர்! ஆயிரம், லட்சம் எண்டு கையில பிளங்கும் என்ன?'' என்று சவரக் கத்தியால் கழுத்தடியில் வழித்தபடியே கேட்பார். வந்த வாடிக்கையாளர் எச்சிலை விழுங்க முடியாமல் திண்டாடுவார்.

பள்ளி மாணவர்கள் முடிதிருத்த வந்தால் மாட்டிக் கொள்வார்கள். படிக்கும் பாடசாலையில் தொடங்கி, வகுப்பு, வகுப்பாசிரியர், விரும்பும் பாடம், கடந்த தவணைப் பரீட்சையில் பெற்ற புள்ளி என்று விபரம் கேட்டு போதாக் குறைக்கு அந்தப் பாடங்களில் கேள்வியும் கேட்பார். பெற்றோருடன் வந்த பிள்ளையின்பாடு பெரும் சங்கடமாகப் போய்விடும்.

இன்னொரு விடயம்; ஊரில் நடக்கும் அத்தனை விடயங் களும் சுந்தரமூர்த்திக்குத் தெரிந்திருக்கும். காதல், கள்ளத் தொடர்பு, காணித் தகராறு, குடும்பப் பிணக்கு, பிறப்பு, இறப்பு என்று அனைத்தும் அறிந்தவர். அதுபோல் நாட்டு நடப்பும் உலக நடப்பும் அத்துப்படி. சலூனிற்குள் எப்போதும் வீரகேசரி, தினபதி, தினகரன், ஈழநாடு பேப்பர் நான்கும் இருக்கும். அவர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம்.

இப்போது அவருக்குப் புதிய ஒரு பிரச்சினை வந்துள்ளது. தனது அறிவுக் கூர்மை, சமூக ஈடுபாட்டின் அளவிற்கு மகனின் ஊக்கம் போதாததாகப்படுகின்றது. பாடசாலை விடுமுறை, சனி. ஞாயிறு என்றால் பெடியனுக்குச் சித்திரவதை தான்.

தனது றேசிங் சைக்கிளில் மகனையும் ஏற்றிக் கொண்டு சலூனுக்கு வந்து விடுவார். ''மூதேவி எட்டாம் வகுப்புப் படிக்குது. ஒரு மண்ணும் தலைக்குள்ள இல்லை. கடவுள் களி மண்ணத்தான் வைச்சு விட்டிருக்கிறார்! இரு, இரு களி மண்ணைக் கழுவித் தாறன்!'' என்று கழுவுவார்.

சலூனுக்குள் உள்ள அறையில் ஒரு மேசை கதிரை போட்டு மகனுக்குப் படிப்பித்தல் நடக்கும். ''டேய் பிலத்தெல்லே வாசிக்கச் சொன்னனான். ஐயர் மந்திரம் சொன்ன மாதிரிப் புறுபுறுக்கிறாய்!

சத்தமாய் வாசி! இஞ்ச எனக்குக் கேட்க வேணும்" "டேய் தும்புத் தடியக் கொண்டு வா! கூட்டு! தண்ணியை எடுத்து வை, மெசினத் துடைச்சு வை, கத்திரிக்கோலைத் தீட்டு, கத்தியைத் துடை.." என்று கட்டளை போட்டபடியே இருப்பார்.


"ஏன் காணும் படிக்கிற பிள்ளைய இதுக்க கொண்டந்து வைச்சு முறிக்கிறீர்?" என்று யாரும் அனுதாபப்பட்டால், "நான் அப்புவிட்டக் குட்டு வாங்கித்தான் தொழில் படிச்சனான். பள்ளிக் கூடமும் போனனான். எஸ்.எஸ்.ஸியும் பாஸ் பண்ணினனான். இவை இப்ப படிச்சாத்தானே நாளைக்கு தலைநிமிர்ந்து நடக்கலாம்... உத்தியோகம் பாக்கத்தான் கூடாட்டிலும் நாலு பேரை வைச்சுத் தொழில் நடத்தவாவது படிக்க வேண்டாமே! இப்படி இருக்காட்டி இவங்கள் படிக்க மாட்டாங்கள்; விளையாட்டுக் கூடிப்போச்சு! பாப்பமன் என்ன நடக்குது எண்டு!...." என்று நியாயப்படுத்துவார்.

அது போலவே தொழில் பழக வரும் இளைஞர்களுக்கும் தொழில் பழக்கி விடுவார். அவர்கள் தவறு இழைக்கும் பட்சத்தில், அதற்கென்று இருக்கும் தோல்பட்டியால் சடார் என்று ஒரு அடி தண்டனையாக விழும். அது தொழிற் சுத்தம் கருதிய வீச்சு. உண்மையான ஈடுபாடு உடைய இளைஞர்கள் அதனையும் ஏற்றுக் கொண்டு தொழில் கைப்படிய வந்தவுடன் சம்பளம் போதாது என்று புறங்காட்டிப் போய்விடுவர்.

காலையில் சலூன் திறந்தால் மாலையாகிப் பொழுதுபடக் கடை மூடும் வரை இயந்திரமாக இயங்குவார். கண் பார்க்கும், கை செய்யும், வாய் பேசும், செவி கேட்கும், மூளை சிந்திக்கும். உரையாடலால் உறவாடுவார்.

(செப்டெம்பர் - ஒக்டோபர் 2007)

# 07. பெரியவ பொன்னம்மா!



**அ**ந்த 'டொக்கு டொக்கு!... சத்தம்தான் எங்களுக்குப் பள்ளியெழுச்சி. பாட்டி பாக்கு வெற்றிலை இடித்துக் கொண் டிருக்கின்றா. நேரம் எப்படியும் ஆறு மணியிருக்கும் மெயில் ட்ரெயின் வந்த சிலமனையும் காணவில்லை. அதிகாலையில் எழும்பி, கவுரியை அவிட்டு தொழுவத்தின் தாவாரக் காலில் கட்டி, கன்றை அவிட்டு, ஊட்ட விட்டு, பித்தளைச் செம்பில் பால் கறந்து, தேநீர் ஆக்கிக் குடித்துவிட்டுத்தான் பாட்டி வெற்றிலை பாக்கு இடிக்கின்றார்.

நாங்கள் பள்ளிக்கூடம் போக வெளிக்கிட சீமெந்துப் பக்டெரியில் முதலாவது சங்கு ஊதும். அது ஏழு மணிக்கு. அப்போது பாடசாலை நோக்கிப் புறப்பட்டாக வேண்டும். அப்பதான் அடுத்த சங்கு எட்டு மணிக்கு ஊதும் போது நடேஸ்வராக் கல்லூரி வாசலில் நுழைய முடியும்.

ஆனால் பாட்டியின் நேர அட்டவணை இன்னும் வேகமானது. பாட்டியிடம் பால் வாங்க வருபவர்கள் இனித்தான் வருவார்கள். அந்த இடைவேளையில் தான் பாக்கு வெற்றிலை இடிப்பு நடக்கிறது. சுவரோடு சாய்ந்து கால்களை நீட்டி உட்கார்ந்து கொள்வார். தனது வலது பக்கத்தில் பாக்குரலை வைத்து வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு எல்லாம் அளவாகப் போட்டு இடிக்கத் தொடங்குவார். மரத்தில் செய்த எட்டு அங்குல உயரமான சின்ன உரல், ரெயில்வே தண்டவாளம் பொருத்தும் உருக்கு ஆணிதான் உலக்கை. கலவை வாய்க்குப் பதமாக வருமட்டும் இடதுகை சுட்டுவிரலால் துழாவித் துழாவிப் பதம் பார்த்து இடித்தல் நடக்கும்.

கலவையில் மூன்றில் ஒரு பங்கைக் கிள்ளி, உள்ளங் கையில் எடுத்து அண்ணாந்து வாய்க்குள் கொட்டிய பின் தான் அன்றைய மீதிக் கடமைகள் உசாராக நடக்கும். உரலில் இருக்கும் மீதியை இடைக்கிடை வந்து போட்டுக் கொள்ளுவா.

மாட்டடியில் சாணகம் அள்ளுவதில் தொடங்குவா. கங்கு மட்டையின் நடுப்பாகத்தில் வெட்டிய தட்டையான பகுதிகள் இரண்டு. அவற்றை இரண்டு கைகளாலும் பிடித்துக் கோலினால் சாணகம் சளியாமல் அள்ளுப்படும். அவற்றைத் தகரப்பாத்திரம் ஒன்றில் சேர்த்து பக்கமாக வைப்பார். அடுத்து கவுரி சப்பிக் களைத்து மீதமாக விட்ட உணவுப் பொருட்களைக் கூட்டி அள்ளி குப்பைத் தட்டிக்குள் போடுவார். இனி மாட்டடி கூட்டி, முற்றம் கூட்டி பெரும்பாக வேலைகள் முடியும்.

அதன் பின்பு அடுப்பிற்குள் இருந்து ஒரு கரித்துண்டு எடுத்து பல்லு விளக்கத் தொடங்குவா. உலைப்பானையையும். பெரிய வாளியையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போய், குளித்து, உலைப்பானை கழுவித் தண்ணீர் எடுத்து, வாளியிலும் நிறையத் தண்ணீர் கொண்டு வருவா.

கிணறு பங்குக் கிணறுதான். பாட்டியின் வீட்டில் இருந்து இருநூறு யார் தூரம் போக வேணும். ஆறு பூவரச மர ஆடுகாலில் பனை மரத்தில் செய்த துலா. துலாக் கொடியைப் பிடித்து இழுத்து தண்ணீர் அள்ளித் தலையை ஆட்டி ஆட்டி வாளித் தண்ணீரைத் தலையில் வார்த்துக் குளிப்பார். பாட்டிக்கு வயது எழுபத்தைந்து என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். குறுக்குக் கட்டை மெல்லத் தளர்த்தி ஆடுகால் பூவரசில் முதுகைத் தேய்த்துக் கொள்வார்.

குளித்து முடிந்து ஈர உடுப்போடேயே வீட்டுக்கு வருவார். வீட்டு விறாந்தையில் கொடியில் தொங்கும் வெள்ளைக் கைத்தறிச் சேலையை எடுத்து மாற்றிக் கொள்ளுவார்.

எங்காவது பிரயாணம் போவதென்றால் மட்டுந்தான் மேல் சட்டை போடுவார். இல்லையேல் உடுக்கும் சேலைத் தலைப்பு தான் முந்தானை, மாராப்பு எல்லாம். லோட்டாவில் தண்ணீர் மொண்டு செவ்வருத்தம் பூ ஆய்ந்து நடு முற்றத்தில் நின்று சூரிய நமஸ்காரம் செய்வார். பின்புறமாக குஞ்சம் போல்

கொய்யகம் விட்டு உடுத்த சேலைக்கு மேலால் முதுகு தெரியும். அதனை நரைத்த கூந்தல் விரிந்து கிடந்து மறைக்கும். சூரிய வழிபாடு முடிய வீட்டிற்குள் சென்று உள்ளே உள்ள சுவாமிப் படத்துக்கு வணக்கம் செலுத்தித்தான் குசினிக்குள் நுழைவார்.

இனித்தான் காலைச்சாப்பாடு. சோற்றுப் பானையில் இருந்து சருவச்சட்டிக்கு மாற்றிவிட்டு பழஞ்சோறு குளிர் குறைந்து சற்று வெது வெதுப்பாக இருக்கும். சருவச்சட்டிக்குள் நேற்றைய பழங்கறிகள் அளவுபார்த்து இறங்கும். இருந்தால் ஊறுகாயும் தயிரும் சேரும். இல்லையேல் வெட்டிய சின்ன வெங்காயமும், பச்சை மிளகாயும் உப்பும்தான். பாட்டியின் கைவிரல்கள் சோற்றைப் பிசைந்து பதம் பண்ணித் திரணைகள் ஆகும். பேரப்பிள்ளைகளை ஒவ்வொருவராக அழைப்பார். அவர்களோடு குரல் கேட்டுப் பப்பியும் வந்து வாசலில் வாலாட்டிக் கொண்டு நிற்கும்.

பேரப்பிள்ளைகள் ஓரிருவர் பூவரசம் இலையை ஆய்ந்து, சட்டையின் பின்புறத்தில் துடைத்தபடி வரிசையில் வந்து முண்டியடிப்பர். அவர்களுக்கு ஏற்றாற் போலத் திரணைகளின் அளவை மாற்றிப் பகிர்ந்து கொடுத்துத் தானும் ஒரு திரணையை கடைசியாக உண்டு, எஞ்சியதைப் பப்பிக்குப் போட்டு விட்டுத் திண்ணைக்கு வருவார்.

காலையில் இடித்து வைத்த வெற்றிலை பாக்கின் மீதியை எடுத்து வாயில் போடப் போனவருக்கு சிலவேளையில் ஏமாற்றம் காத்திருக்கும்.

எங்களில் யாராவது அதை அள்ளி வாய்க்குள் போட்டுக் கொண்டு போயிருப்போம். ''போக்கறுவார் இடிச்ச வெற்றி லையைக் கூடக் கிடக்க விடாதுகளாம்...'' என்று திட்டிக் கொண்டு மீள இடிக்க வேண்டி வரும்.

இனிப் பாத்திரங்கள் கழுவி, அடுப்பில் உலை வைத்து விட்டு கவுரியையும் கன்றையும் அவிழ்த்துக் கொண்டு மேயக்

கட்டப்போய் விடுவார். சம்பந்தற்ற பனை வெளி, இரயில் பாதை, பக்கத்து கலட்டி வெளி எங்கும் மாற்றி மாற்றி கட்டுவார்.

வெள்ளிக்கிழமை என்றால் குளிப்பதற்கு முன்பான வேலைகள் அதிகம். வீடு, திண்ணை, குசினி, அடுப்படி மெழுக வேணும். முற்றத்திற்கு சாணகம் தெளிக்க வேணும். இந்த நாட்களில் யாரும் வந்து சாணகம் கேட்டால் கொடுக்க மாட்டா. மற்ற நாட்களிலும் லேசில் கொடுக்க மாட்டா, கொடுத்தால் எருவுக்கு சாணகம் சேராது என்பதே காரணம்.

எருக்கும்பி எப்பொழுதும் வலு துப்பரவாக இருக்கும். குப்பைத் தட்டியும் அப்படித்தான். தோட்டக்காரர் யாரும் விலை பேசி வந்தால் சந்தைப் பெறுமதியை விட வண்டில் கணக்கில் பத்து இருபது கூட்டியே சொல்லுவார், குறைந்த விலைக்கு கொடுக்கமாட்டார்.

சமையல் வேலை நடக்கும் போதே கவுரிக்கு தேவையான கழிநீர் வாளி போசாக்கு பெற்று விடும். அரிசி கழுவிய நீர், மரக்கறி வெட்டிய துண்டுகள், தேங்காய்ப்பூ, இலை வகை என்பவற்றோடு கொஞ்சம் தவிடும் பிண்ணாக்கும் கலந்து கொண்டு போவார்.

கவுரிதான் அவவின் செல்லப்பிள்ளை. இந்த வீட்டில் தான் கவுரி பிறந்தது. தாய்ப்பசு வருத்தம் வந்து சாக கவுரிதான் பாட்டியின் ஆதாரமாக இருந்து வருகின்றது. இதுவரை ஐந்து ஆறு கன்றுகளுக்கு மேல் ஈன்றிருந்தாலும் இன்னமும் அழகாக, திடகாத்திரமாக இருக்கிறது. பாட்டியைப் போல வெள்ளையும் மண்ணிறமுமான மேனி, சாம்பல் நிறமான முகம், நெற்றியில் வெள்ளை நிறத்தில் நீளப் பொட்டு, உயர்ந்த பருத்த தசைப்பிடிப்பான மேனி, சிலிர்த்த மயிர்கள், அழகான பெரிய கண்கள், மேலெழுந்து வளைந்த ஒரு சோடிக் கொம்பு, கவுரி அழகுதான். மாட்டுப் பொங்கல் நாளில் இன்னும் அழகாக

இருக்கும். 'கேப்பைச் சாதியிலும் நல்ல சாதி' என்று பாட்டி கவுரியைப்பற்றி பெருமையாக பேசுவார்.

பாட்டியின் சமையல் அதிகமாக மரக்கறிச் சாப்பாடுதான். வளவுக்குள் இருக்கும் முருக்கங்காய், வாழைப்பூ, முசுட்டை இலை, பூசணிக்காய், பிசுக்கங்காய், பாகற்காய், முருங்கையிலை என்பனதான் பிரதான இடத்தைப் பிடிக்கும்.

சமையல் முடிந்ததும் வாழையிலையில் பரிமாறிச் சாப்பிட்டுக் கவுரியையும் அவிட்டுக் கட்டி, கன்றுக்கும் சாப்பாடு போட்டு விட்டு வந்துதான் பாட்டி ஓய்வெடுப்பார். ஒரு வாய் இடித்த வெற்றிலை பாக்கைப் போட்டுக்கொண்டு வெய்யில் தாழுமட்டும் பன்ன வேலையில் ஈடுபடுவார்.

பரணில் சார்வுகள் அடுக்கிக்கிடக்கும், பதமான சார்வாகத் தேர்ந்து எடுத்து வெட்டி ஓலைகளை அடுக்கி வார்ந்து ஈர்க்குகளை வேறாக்கி ஓலைப் பெட்டிகளைத் தயார் பண்ணுவார்.

நீத்துப்பெட்டி, பெட்டி, மூடல் பெட்டி, தட்டுப்பெட்டி, கொட்டைப் பெட்டி, ஊமல், குஞ்சுக்கடகம், சுளகு, பாய், தடுக்கு, கைபிடிபோட்ட பை என்று பனை ஓலை ஈர்க்குக் கொண்டு இழைக்கப்படும் அத்தனை கைவினைப் பொருட்களும் பாட்டியின் கை வண்ணத்தில் உருவாகும். தன் பிள்ளைகள், மருமக்கள் வந்து கேட்டால் இலவசமாகச் செய்து கொடுப்பார். வெளியார் என்றால் காசு வாங்கித்தான் கொடுப்பார்.

பனை ஓலைச் சாரல் பெற்றுக் கொள்ள அவர் படும் பிரயத்தனத்தைக் கூறியே ஆகவேண்டும். பாட்டியின் வளவுக்குள் ஐந்தாறு பனை மரங்கள் கறுத்து நெடித்துயர்ந்து நிற்கின்றன. அதில் சிலவற்றைக் கள்ளுச்சீவவென்று விட்டுள்ளார். முத்து ராசாதான் காலையும் மாலையும் கள்ளுச்சீவ வருவார். ஓலைச் சார்வு தேவையைப் பொறுத்துப் பாட்டி முத்துராசாவின் வரவுக் காகக் காத்திருப்பார். கள்ளுச்சீவக் கொடுத்ததிற்காகப் பாட்டி

பனைக் காசு வாங்குவதில்லை. மாறாக வீட்டுக்கூரை வேய ஓலை, மாட்டிற்கு ஓலை, சார்வு வெட்டிக் கொடுக்கும் பணியைச் செய்யவேண்டும் என்பது ஒப்பந்தம். அவ்வப்போது அப்பத்திற்க்கு மா புளிக்க விடுவதானால் அதற்குத் தேவையான பனங்கள்ளை யும் பாட்டி வாங்கிக்கொள்வார்.

ஆனால் முத்துராசா இளைஞன். தொழிலில் வேகம் அதிகம். நேரத்துக்கு கள் எடுத்து, சேர்த்து, நேரத்துக்கு தவறணைக்குக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். ஊருக்குள் பல இடங்களிலும் அதிக பனைகளில் சீவலுக்குப் போயாக வேண்டும்.

பாட்டிக்கு ஓலைச் சார்வு வெட்டுவதானால் கள் இறக்கும் பனை தவிர்ந்த வேறு பனைகளில் ஏற வேண்டும். நேரம் போய் விட்டால் கள்ளுப் பழுதாகி தொழில் பாழாகி விடும் என்ற அவசரம். பாட்டிக்குத் தெரியாமல் ஒளித்து வந்து தான் அலுவல் நடக்கும்.

''தம்பி உங்கின பெரியவ நிக்கிறாவே?'' முத்துராசா எங்களிடம் தான் ஒற்று அறிவார். பின், இடுப்பு பட்டியைக் கழற்றிப் பாளையை ஒரு கையிலும், முட்டிகளை மறு கையிலும், இலுக்கு வடத்தை தோளிலுமாகப் போட்டுக் கொண்டு சீவல் பனையை நோக்கி நடப்பார். இல்லையேல் பாளைப் பெட்டியில் இருக்கும் பாளைக் கத்தியையும், தட்டுப் பொல்லும் முத்துராசா நடக்க நடக்க கடக்கு கடக்கு என்று சத்தம் போட்டுக் காட்டிக் கொடுத்துவிடும். பாட்டியும் ''உவன் முத்துராசா சீவ வரயிக்க நான் தேடினனான் எண்டு சொல்லு'' என்று எங்களிடந்தான் ஆட்காட்டச் சொல்லுவார். பாட்டி தனது வேலையில் பிராக்காய் இருந்தால் முத்துராசா சத்தம் கேளாமல் போய் பனையில் ஏறிவிடுவார். ஏறிப் பனையைத் தட்டி பதம் பண்ணுகையில் பாட்டிக்குச் சத்தம் கேட்டுவிடும். ''கள்ள வடுவா சார்வோலை

வெட்டித்தராமல் இண்டைக்கு போகவிடன்" என்று புறுபுறுத்தபடி பாட்டி பனையின் கீழாகவே நின்றுவிடுவார்.

அப்படி வெட்டிய சார்வு ஓலைகளைக் காயவிட்டு மூரி நீக்கி வெட்டிச் சிலாகைகளுக்கு அகலம், தரம் பார்த்துச் சிறு சிறு கட்டுக்களாக்கிச் சேர்த்துவைப்பார். தேவையைப் பொறுத்து வார்ந்து பதப்படுத்தி வர்ணம் தீட்டிப் பாவிப்பார்.

எங்களுக்கும் பள்ளிக்கூடத்தில் ஏழாம் வகுப்பில் பூரணம் அக்காதான் பன்ன வேலைப் பாடம் படிப்பிப்பார். அவாவின் பன்ன வேலைப் பாடம் அதிகமாக செயல் முறையாகத்தான் இருக்கும். பிரதான மண்டபத்துள் மேடைக்குக் கீழாக உள்ள இடம்தான் பன்னவேலைக்கூடம். சுமதி, இந்துமதி, வேலுப்பிள்ளை, ஞானி, ஜிலேந்திரன் பன்ன வேலை வகுப்பில் ஒழுங்கு. ரீச்சரிடம் காட்டிக் காட்டி வகுப்பு நேரத்திலேயே ஓலை பின்னும் வேலை களைச் செய்வார்கள். சிவகரன், நான், ஜனகன், இன்னும் சிலருடன் சேர்ந்து மேடையில் ஏறினால், ஏ.ரி. பொன்னுத்துரை மாஸ்ரர் மேல் வகுப்பு ஆட்களுக்குச் சொல்லிக் கொடுத்த நாடகத்தை நடித்துப் பார்ப்போம்.

ஆனால் நான் வீட்டிற்கு வந்து பாட்டியிடம் கேட்டுப் பன்ன வேலையைப் பழகுவதுண்டு. அது கைகூடாவிட்டால் பாட்டி பின்னி வைத்ததை இரவலாக வாங்கிச் சென்று பூரணம் அக்காவிடம் காட்டிச் சோதினைக்கு புள்ளிகள் பெறுவதும் உண்டு.

காம்பிச் சத்தகமும் கையுமாக பாட்டி உட்கார்ந்து பன்ன வேலை செய்யும் அழகைப் பார்த்துக் கொண்டு இருக்கலாம். இழைக்கும் பொருளுக்கு ஏற்ப அதன் உறுதி, பலம் மாறுபடும். பொத்தல் வேலையின் அளவும் மாறுபடும். ஓலைப்பட்டி நீளமான புழுப்போல எழுந்து வளைந்து காம்புச்சத்தகம் காட்டிய இடை வெளிக்குள்ளால் புகுந்து வெளியேறும். அந்த வேலையின் இறுக்கத்திற்கு ஏற்பத் தலையும் ஆடி ஆடிப் பொருளின் உறுதியை உணர்த்தும்.

இனிப் பின்னேரக்கையாக ஒரு தேநீர் போட்டு குடித்து எழும்பினால் கவுரிக்கும் பசுக் கன்றுக்கும் தீனி தேட வேண்டும். கடகத்தையும் உழவாரத்தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டால் ஒரு மணி நேரத்துக்குள் இரண்டு கடகம் புல்லு செருக்கி கொண்டு வந்து விடுவார். வைக்கோலும் கலந்து போட்டால் மாட்டுக்கு இரவுப் பாட்டிற்குப் போதும். சில வேளைகளில் பச்சைப் பனை ஓலை கிழித்துப் போடுவார்.

மூரி நீக்கிய ஓலையை அதன் மடிப்புகளோடு கைக்கு அளவாகப் பிடித்து எடுத்து ஒவ்வொன்றாக இடது கைப் பெருவிரல் நகத்தால் ஈர்க்கு நீக்கிக் கிழித்துச் சட்டங்களாக அடுக்கி அவற்றைக் கால் விரல் இடுக்கில் இறுக்கிய புல்லுச்சத்தகத்தின் சொண்டு முனையில் வைத்து அழுத்தி நார் நாராகக் கிழித்து எடுப்பார். பனை ஓலை கிழித்துப் போடுகிற நாளில் பால் உண்டெண்ண வரும் என்பது பாட்டியின் அனுபவம்.

பொழுதுபட முதல் பாட்டிக்கு நிறைய வேலைகள் இருக்கு. மாடு கன்று அவிழ்த்துக்கட்டி பால் கறந்து மாட்டிற்கு இரவுச் சாப்பாடு போட்டு கால் முகம் கழுவிச் சாமி கும்பிட்டு பால் காய்ச்சித் தேநீர் ஆத்தி தானும் குடித்துப் பேரப்பிள்ளைகளுக்கும் பகிர்ந்து, விளக்குக் கொழுத்தி வைத்த பின்பு தான் இரவுத் தேவைக்கான பாக்கு இடித்தலுக்காய் அமருவார்.

அதுதான் எங்களுடைய நேரம். பாட்டியிடம் கதை கேட்கப் போய் விளக்கைச் சுற்றி வட்டமாக அமர்ந்து கொள்வோம். சில வேளைகளில் அந்த நேரத்திலும் பாட்டி தனது பன்ன வேலையில் ஈடுபட்டபடி எங்களுக்கு கதை சொல்லுவார்.

ராசா ராணிக் கதை, பேய் பிசாசுக் கதை, இராமாயணம், பாரதக் கதை, கடவுளார் கதைகள் என்று தொடரும். அவை அலுத்து விட்டால் நாங்கள் பாட்டியிடம் சொந்தக் கதைகளைக் கேட்போம்.

'பாட்டா எப்படி இருப்பார்' என்று நாங்கள் ஒரு கேள்வி கேட்டால் போதும். ''அப்ப இருபாலையில் தான் எங்கட வீடு. எங்கட அப்பு வண்டில் மாடு வைச்சு சவாரி ஓடுவார், உழவுக்கும் போறவர். அவருக்கு ஊரிப்பட்ட வயல். எந்த நேரமும் வீட்டில நெல்லும் மரக்கறியும் பயறு, எள்ளு, குரக்கன் எண்டு குவிஞ்சு கிடக்கும்."

''உவை இஞ்ச பளையில இருந்து சவாரி மாடு பாக்கிற பிராக்கில் அப்பாவிட்ட வருவின. வந்து மூத்த அண்ணையோடு சினேகிதம் ஆகிட்டினை. மூத்த அண்ணை தான் இவைக்கு நாம்பன் மாடு காட்டக் கூட்டிக் கொண்டு திரியிறது. அப்படி வந்து போகேக்க கண்டு கேட்டிச்சினை. ஆள் இனி, சித்தப்பா மாதிரி, சிவலை, உயரம், நல்ல வடிவான ஆம்பிளை. வேட்டிக் கட்டும் சால்வையும், வாட்ட சாட்டமான ஆம்பிளை தானே, அப்புவும் மறுக்காம கட்டி வைச்சிட்டுது".

''கலியாணம் கட்டேக்கை உங்களுக்கு எத்தினை வயது பாட்டி?" ''அப்ப என்ன ஒரு பதினைஞ்சு பதினாறு தான் இருக்கும்." ''அப்ப நீங்கள் பள்ளிக்கூடம் போகேல்லையே?" ''அந்த நாளில் என்ன படிப்பா? கோப்பாயில நாவலற்றை பள்ளிகூடம் தானே. ரெண்டு கட்டை நடந்து தானே போக வரவேணும். எப்பாலும் மூத்த அண்ணை வண்டில் கொண்டு வந்தால் அதில போவம். இல்லாட்டி நடைதான். பேந்து நாலாம் வகுப்போடை அப்பு நிப்பாட்டிப் போட்டுது. அவர் தோட்ட வேலைகளுக்கு கையுதவி செய்து கொண்டு அங்கினை இருந்ததுதான்"

''அப்ப என்னெண்டு பாட்டி இந்தப் பன்னவேலை படிச்சனீங்கள்?" ''உதெல்லாம் ஒரு படிப்பே? வீட்டில தேவைக்கு அம்மா, அக்காமார் செய்யேக்கை பாத்துப் பழகினது தான்" என்று எங்கள் பேட்டிகள் வளரும்.

வெள்ளிக்கிழமை என்றால் பாட்டி, பொழுதுபட மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குப் போவா. கூடவே போவோம். திருவிழாக்

காலம் என்றால் ஒவ்வொரு நாளும் போவா. கடலை கச்சான் என்று எங்கள்பாடு ஒரே கொண்டாட்டந்தான். தீர்த்தத் திருவிழா என்றால், ஆடி அமாவாசைக்கு கீரிமலைக்குப் போவோம். அதுவும் நடந்துதான் போய் வருவோம்.

சித்திரை வருடப்பிறப்புக் காலத்தில் சீமெந்துப் பக்ரறி முத்த வெளியில் கூத்து, நாடகங்கள் போடுவார்கள். கூத்துப் பார்ப்பதிலும் பாட்டி வலு ஆர்வம். நேரகாலத்துடன் வேலைகளை முடித்து விட்டு, அவ இழைத்த பாய்களில் இரண்டையும் சுருட்டிக் கட்டி எடுத்துக் கொண்டு புறப்பட்டால் மறுநாட் காலைதான் நாங்கள் வீடு திரும்புவோம். பாட்டி விடிய விடிய நாடகம், கூத்துப் பார்ப்பார். நாங்கள் பாட்டியைச் சுற்றி முத்தவெளிப் பனிக்குள் படுத்துக் கிடப்போம்.

பாட்டியில் இன்னொரு விசேஷம் இருக்கிறது. அதுதான் புளிக்கஞ்சி, மற்றது ஒடியற் கூழ். தடிமல் காய்ச்சல் என்றால் புளிக்கஞ்சி, வயிற்றுப் பிரச்சினை என்றால் ஒடியற் கூழ்.

வளவுக்குள் உள்ள முசுட்டை, கொவ்வை, முல்லை, தூதுவளை, முருங்கை இலை எல்லாம் ஆய்ந்து துப்பரவாக்கி புளி, அரிசி, சேர்த்துச் சீரகம், பூடு அரைத்து இறாலும் போட்டு புளிக்கஞ்சி காய்ச்சினால் அதன் சுவையே தனி. பிலா இலையில் கரண்டி செய்து வட்டமாக இருந்து குடிப்போம். மறுநாள் தடிமன் பறந்து விடும்.

ஒடியற் கூழ் என்றாலும் அப்படித்தான். பாட்டிக்கு அனுமானம் சரியாக வேணும். மிளகாய், மல்லி, சரக்குச் சாமான் உண்டெண இருக்க வேணும். தூள் மீன், நண்டு, இறால் கட்டாயம். ஒடியல் உடனே இடித்து அரித்து மாவாக்கித்தான் கூழ் காய்ச்சுவா.

பனம் உற்பத்திகள் எப்பவும் பாட்டியிடம் இருப்பில் இருக்கும். வருசா வருசம் பாத்தி போட்டு கிழங்கு கிண்டுவா. பனங்கிழங்கை

விற்க மாட்டா. ஒடியலாகவும், புழுக்கொடியலாகவும் மாற்றிச் சேமிச்சு வைச்சு விடுவா. சாப்பாட்டுத் தேவைக்கும் சொட்டைத் தீனுக்கும் அது உதவும்.

பாட்டிக்கு விவசாயமும் தெரியும். மாரிகாலம் தொடங்கும் போது காணிக்குள் பயிற்றை பயிரிடுவார். பத்துப் பரப்புக் காணி. முதல் மழை ஈரத்துடன் அங்கங்கு கொத்திப் பயிற்றம் விதைகளை நாட்டி விடுவார். அவை போன வருட அறுவடையில் சேகரித்த விதைகளாக இருக்கும். பயிற்றை முளைத்து வளரும் போது தடி கட்டி வாழைநாரில் வரிச்சு இழுத்து விடுவார். இறைப்புத் தேவையில்லை, உரம் தேவை இல்லை. பெய்யும் மழையில் பயிற்றை கொடிவிட்டுப் பூத்துக் காய்க்கும்.

பகலில் கிளித் தொல்லை. சூய், சூய் என்று அடிக்கடி கலைத்து காப்பாற்றி விளைவு எடுப்பா. அதுவும் மக்கள், மருமக்கள் என்றால் இலவசம். பிறத்தி ஆட்களுக்குக் காசு. அறுவடை அதிகமானால் மட்டும் கோயிலடியில் மரக்கறி விற்கும் லச்சுமிக்கும், தெய்வானைக்கும் கொடுப்பார். இல்லையேல் உறவுக்குள் பகிர்ந்து முடிந்து விடும்.

இத்தனைக்கும் பாட்டி தன்னந் தனியாகவே சீவிக்கின்றார். நாலு ஆண்களும் இரண்டு பெண்களுமாக ஆறு பிள்ளைகள். பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கின்ற காலத்தில் பாட்டா நோயாளியாகி விட்டார். பாட்டா கிராம விதானையாராக இருந்த துடன் ஊரில் அதிகமான காணி பூமியும் இருந்தது. கண்பார்வை இழந்து போனபின் காணிகளை விற்றே சீவியம் நடந்தது. இடையில் பாட்டா நோய்வாய்ப்பட்டு இறந்து போக, பிள்ளைகள் வளர்ந்து, படித்து உத்தியோகமாகி, திருமணமாகி ஆங்காங்கு செல்லப் பாட்டி தனியன் ஆனார்.


எஞ்சிய பத்துப் பரப்புக் காணி, வீடு, வளவு, மாடு, கண்டு, பனை வடலி இவைதான் பாட்டியின் ஆதனங்கள். பிள்ளைகள் அவ்வப்போது பாட்டியைப் பார்க்க வருவார்கள். தனது தேவை

களை அதிகமாகக் காண்பித்து பாட்டி அவர்களிடம் கறந்து விடுவார். அதே வேளை தன்னிடம் இருக்கும் புளி, புளுக் கொடியல், பினாட்டு எதென்றாலும் கொடுத்து அனுப்புவார்.

கிடைக்கும் பணத்தைப் பாட்டி கண்டபடி செலவழிக்க மாட்டார். சேமித்துச் சேகரித்து வைப்பார். திருவிழாக் காலத்தில் வரும் பேரப்பிள்ளைகளுக்குச் செலவழிப்பதிலும் கூத்துப் பார்க்கப் போவதிலும் காசைக் கைவிடுவார்.

(நவம்பர் - டிசம்பர் 2007)

# 08. பரந்தன் பாலசிங்கம்



''ஆறு மனமே ஆறு, அந்த ஆண்டவன் கட்டளை ஆறு...'' பாலன் கொஞ்சம் குரலெடுத்துப் பாடியபடி எங்கள் வீட்டின் பின்புறமாக வருகின்றார். ''என்ன பாலன் இண்டைக்குப் பாட்டோட வாறார்!'' அம்மா குசுனிக்குள் இருந்து கேட்டதும் ''ஹி... ஹி... சும்மா தனி வழிக்கு... உப்பிடித்தான்...'' என்று கூறியபடி பாலன் தலைப்பாகையாகக் கட்டியிருந்த கைத்தறித் துவாயை அவிழ்த்து முகத்தையும் மார்பையும் துடைத்தபடி வேப்பமர வேரில் அமர்கின்றார்.

எங்கள் வீட்டின் பின்புறமாக ஒரு பத்தி இறக்கி விடப்பட்டிருக்கிறது. அதன் நிலம் சாணகத்தால் மெழுகியிருக்கும். பத்தியின் வாசற்பக்கமாக ஒரு பருத்த வேப்பமரம் நிமிர்ந்து கிளைபரப்பி நிற்கிறது. அந்த வேப்பமரத்தின் வேர்கள் மூன்று நில மட்டத்தின் மேலாகப் பருத்து பத்திக்குள் ஒரு பக்கமாக கிடக்கின்றன. அவை ஒரு குந்து போல, கதிரை போல சாய்ந்து அமரக் கொஞ்சம் வசதியாக இருக்கும். அந்த இருக்கைதான் பாலனுக்குப் பிடித்த இடம். அவரது வாயில் பாடலின் தொடர்ச்சி முணுமுணுப்பாக வளர்கிறது.

''என்ன பாலன் இண்டைக்கு வேலை ஒண்டும் இல்லையே?'' இது அம்மா. ''இல்லையுங்கோ! ஸ்ரேசனடித் தறையிக்கை உவர் முன்னாலி வீட்டுக்காறற்ர வெங்காய நடுகை நேற்று முடிஞ்சுது. தறை கொத்தி சாறி, பாத்தி பிடிச்சுக் குடுத்தனான். நாளைக்கு, உங்க தலையிட்டி வைரவ கோயி லடியில சாறக் கிடக்குது.... இனி முந்தியப் போல இல்ல, உடம்பு ஒண்டுக்கும் இடம் குடுக்குதில்ல. சும்மா இருக்க விசர் பிடிக்கும்... அதுதான் இதில வந்திட்டுப் போவம் எண்டு...'' பாலன் நீண்ட விளக்கம் கொடுத்தார்.

''உந்தக் குடியால தானே அழியிறியள். அதை நிப்பாட்டுங் கோவன் உடம்பு நல்லா இருக்கும்....'' அம்மாவின் அதட்டலுக்கு ஒரு வறட்டுப் புன்னகை மட்டும் பாலனின் பதிலாக வெளிவருகிறது.

‘‘என்ன தேத்தண்ணி தரவோ, ஏதன் சாப்பிடப் போறியோ!’’ அம்மாவின் கேள்விக்கு ‘‘என்னெண்டாலும் தாருமன்!’’ பாலன் பதில். ‘‘புட்டுக் கொஞ்சங் கிடக்கு தரட்டே!’’ ‘‘புட்டோ!’’ ‘‘ஒரெப்பன் பழஞ்சோறெண்டால் திறம். வகிறு வேக்காடாக் கிடக்கு...’’ அது பாலனின் விண்ணப்பம். ‘‘எப்பன் இரு வாறன்’’. அம்மா பழஞ் சோற்றைத் தயார் செய்து, வெங்காயம், பச்சை மிளகாய் துப்பரவாக கழுவி எடுத்து, தயிர், பழைய கறி சேர்த்துக் குழைத்து எடுத்து வருவதற்கிடையில் பாலன் வாழை மரத்தில் ஒரு தகட்டு இலையைக் கையால் கிழித்து தயாராக பத்திக்குள் வந்து அமர்ந்து கொள்கிறார்.

பாலனின் சொந்தப் பெயர் பாலசிங்கம். ஊரில் பல பாலன்கள் இருக்கின்றனர். கடைப் பாலு, கறுவல் பாலு, சிவலைப் பாலு என்று இருப்பதால் அவர்களில் இருந்து இவரைப் பிரித்தறிய இவரைப் ‘பரந்தன்’ என்ற அடைமொழியால் அழைக்கின்றனர். பாலனின் சொந்த ஊர் பரந்தன். திருமணம் முடித்துக் குடியேறியதால் அவர் வீமன்காமம் வாசியாகிறார்.

பாலன் எழுபத்து மூன்றாம் ஆண்டு வரை பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் தொழிலாளியாக வேலை செய்தார். கடமை நேரத்தில் வலிப்பு நோய் ஏற்பட்டதால் சுகயீன விடுகையில் அவர் வேலையில் இருந்து நீங்க வேண்டியதாயிற்று. நட்டஈடாகக் கிடைத்த தொகைப் பணத்தைக் கொணர்ந்து வீமன்காமத்தில் குடியிருந்த காணிக்குள் கல் வீடு ஒன்றைக் கட்டப் புறப்பட்டார். அத்திவாரம் வெட்டி, பத்திரிப்புக் கட்டி, தூண் எழுப்பி, சுவர் எழுப்புகையில் கையில் இருந்த காசு முடிந்து கை கடிக்கத் தொடங்கி விட்டது.

வீட்டில் சும்மா இருக்க முடியாது என்று பாலன் கூலி வேலை செய்து சீவனம் நடத்தத் தொடங்கினார். வலிப்பு வரலாம் என்ற பயத்தால் மரங்களிலோ, கட்டடங்களிலோ ஏறி வேலை செய்ய முடியாதென்பதால் ஊரில் தோட்ட வேலை, வேலி அடைப்பு போன்ற வேலைகளைச் செய்து வருகின்றார்.

நோயாளியானாலும் பரவாயில்லை. ஊரோடு வாழக் கிடைத்ததே என்று வந்து, இரண்டு வருட காலத்துள் பாலனின் வீட்டில் ஒரு சோகம் நடந்தது. குழந்தைப் பாக்கியம் கிடைக்க இருந்த வேளையில் மனைவிக்கு ஏற்பட்ட கடுமையான சுகவீனம் காரணமாக தாயும் சேயும் இறக்க நேர்ந்தது. இப்போது பாலன் தனிமரமானார்.

முன்பு உழைத்த களைப்புக்கு, உடல் அலுப்புக்குக் குடிப்பதாக கள்ளுக் குடித்து வந்த பாலன் இப்போது கவலை மறக்கக் குடிப்பதாக அதிகம் குடிக்கத் தொடங்கினார். கிடைத்த வேலையைச் செய்வது; வேலைத் தலத்தில் கிடைத்ததைச் சாப்பிடுவது; கூலியாகக் கிடைத்த பணத்தைக்கொண்டு சென்று குடிப்பது பாலனின் இக்கால வாழ்வாகிவிட்டது.

ஆறரை அடி உயரமான ஆள். சிவந்த அகலமான மேனி. வெய்யிலுக்குள் நின்று அதிகம் வேலை செய்வதால் கறுத்த தேகம் ஒரு வித செப்பு வர்ணத்தில் தகதகத்துத் தெரியும். சேட் என்று எதையும் அணிவதில்லை. இடுப்பில் ஒரு செம்பாட்டுப் புழுதி படிந்த சாரம். எந்த நேரமும் மடித்து சண்டிக் கட்டாக கட்டப்பட்டிருக்கும். இடுப்பில் சாரம் விலகாமல் இருக்க மடித்துக் கட்டியதோடு படுமுடிச்சுப் போட்டு விட்டிருப்பார். பெரிய விழிகள், வாக்குக் கண். எங்கு பார்க்கிறார் என்று தெரியாது. நைதான தலைமுடி, அதிலும் உச்சிப் பகுதியில் வழுக்கை விழுந்திருக்கும். சாயம் போன ஒரு கைத்தறித் துவாய் தான் தலைப்பாகை. தோளில் போட்டால் அது சால்வை. முகம், மேல் கழுவினால் அது துடைக்கும் துவாய்.

நாலாம் வகுப்பில் நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயத்தில் திருச்செல்வம் மாஸ்ரர் சூழல் பாடம் படிப்பிப்பார். 'குளக்கோட்ட மன்னன் கந்தளாய்க் குளத்தைக் கட்டுவித்தான். பராக்கிரமபாகு மன்னன் பராக்கிரம சமுத்திரத்தைக் கட்டுவித்தான்...'

சமுத்திரம் என்றால் எப்படியிருக்கும்? மிகப் பிரமாண்ட மானது. கண்ணுக்கு எட்டாத தொலைவு வரை பரந்த பிரதேசமாக இருக்கும். அவ்வளவு பெரிய குளத்தினை பராக்கிரமபாகு மன்னன் கட்டுவித்தான். அரக்கர்களையும், அசுரர்களையும் போரில் வென்று சிறைப்பிடித்து வந்து அவர்களை அடிமைகளாக வைத்திருந்துதான் இந்த குளங்களை மன்னர்கள் கட்டு வித்தார்கள்...'

''சேர் அப்படி அரக்கர்கள் இப்பவும் இருக்கினமா?'' இது எங்களின் கேள்வி. ஆம். சிலவேளை இருப்பார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பார்கள். ஆனால் இப்போது இயந்திரங் களைக் கொண்டு பாரிய வேலைகளைச் செய்கின்ற காலம் வந்து விட்டதல்லவா...'' என்று திருச்செல்வம் மாஸ்ரர் சமாளித்து விடுவார்.

ஆனால் பிற்காலத்தில் இந்தப் பாலனைக் காணும் போது திருச்செல்வம் மாஸ்ரர் படிப்பித்த அரக்கர்கள்தான் நினைவுக்கு வருவார்கள். சும்மா இருக்க ஏலாது. ஏதாவது வேலை கொடுத்தாக வேண்டும். எந்தவேலையும் தனியனாகச் செய்வதில் ஆர்வம். காரணம், கூடவேலை செய்பவர்கள் பாலனின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாது நிற்பார்கள். அது பாலனுக்கு இடைஞ்சலாக இருக்கும்.

தோட்டம் கொத்துவதானால் தனியனாக ஆயிரம் கண்டுத் தறையும் கொத்திப் புரட்டி விட்டுத்தான் போவார். நாலு தூக்கு விறகென்றாலும் ஒரே மூச்சில் கொத்திவிடுவார். ஆனால் மண் வெட்டி, கோடாலி ஒழுங்காக கனமாக இருக்க வேண்டும்.

முந்திரிகை பதிவைக்க கிடங்கு வெட்டுவதானாலும் அதுவும் தனியனாகத் தான். வேலி அடைப்பதானால் குத்தூசியும் நாரும் கொடுத்தால் போதும். ஒற்றைக் கையால் கோர்த்து முழங்காலால் வரிச்சு இறுக்கி; மறுகையால் எட்டி அடுத்த பக்கம் கோர்த்து எடுத்து கட்டி முடிந்து விடுவார்.

வேலை செய்யும் போது நாக்கு மடிந்து பற்களுக்கு இடையில் சொருகி நிற்கும். முகத் தசைகள் கண்களின் பக்கமாகச் சுருங்கி வேலையின் இறுக்கத்தைப் பிரதிபலிக்கும். மூச்சு இரைக்கும் சத்தம் அருகில் நிற்பவருக்குக் கேட்கும். 'வெறுந் தேத்தண்ணியும், வறுத்த விசுக்கோத்தும்' தான் அவரது வேலை நேரச் சிற்றூண்டி.

மதியச் சாப்பாடும் அப்படித்தான். வாழை இலையில் நாட்டரிசிச் சோறு மலை போல் குவிந்திருக்கும். மரக்கறி, மச்சம், ஊறுகாய் உறைப்பு காரசாரமாக இருக்க வேண்டும். ஆதி காலத்துக் குண்டோதரர் சாப்பிடுவதைப் பார்ப்பது போல் நாங்கள் அதிசயமாகப் பார்ப்போம்.

''என்னவும் வேலை கிடக்கேயுங்கோ!'' பாலன் கேட்டார். ''நீ திடீரெண்டு வந்து கேட்டால் இஞ்ச வேலை கிடக்குதே! வந்தனீ! உங்க உதில கிடக்கிற முக்கிழுவை தடி கொஞ்சத்தைப் பிளந்து தா. சமைக்கவும் விறகு வேணும். பிறகு நேரம் இருக்கிற நேரம் வா. விறகு வேண்டி வைக்கிறம்''

அம்மா உடனடி வேலையைக் காட்டினார்.பாலனுக்கு அன்றைய பகற் பொழுது எங்கள் வீட்டில தான் கழிந்தது. விறகு கொத்தி முடிய, மாடு அவிட்டுக் கட்டி, வாழைக்குள் அழிஞ்ச பாத்தி கட்டி, இன்னும் சில தொட்டாட்டு வேலைகளைச் செய்து மத்தியானமும் சாப்பிட்டு, ஓய்வெடுக்க பாலனின் அன்றைய பகற் பொழுது கழிந்தது.

கால் மேல் கழுவி, போகப் புறப்படுகையில் ''என்ன பாலன் கள்ளுக் குடிக்க காசு வேணுமே!'' என்று அம்மா கேட்டார். ''ஓம்... ஒரு பத்து ரூவா இருந்தாத் தாரும். உடம்பு அலுப்புக்கு ஏதும் குடிச்சாத்தான் இராவைக்கு நித்திரை வரும்...''. அன்று அம்மா கொடுத்தனுப்பிய பத்து ரூபாவுடன் போன பாலன் தான்.

மறுநாள் காலை 'அம்பனை றோட்டில் பாலன் விழுந்து கிடந்ததாக' தகவல் வந்தது. தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்று பார்த்த பின்பு தான் தெரியும் நேற்று இரவே உயிர் பிரிந்து விட்டதாக. வலிப்பு வந்ததோ, இருதய வருத்தம் வந்ததோ தெரியாது. ஒரு பராக்கிரமபாகுவின் அசுரன் போதைக்குப் பலியாகிவிட்டான்.

(ஜனவரி - மார்ச் 2008)

# 09. குழந்தை குமாரசாமி



**ஆ**று மணிக்கு யாரும் அலாரம் வைக்கத் தேவையில்லை. ''டாண் டாண் டாண்...'' என்று ஞானவைரவர் கோவில் மணி அந்த வேலையைச் செய்யும். சரியான நேரத்தில் அந்த மணி அடிக்கப்படா விட்டால் 'குழந்தையர் உங்க இல்லைப் போல' என்று ஊர் வாய்கள் முணுமுணுக்கும். அவ்வளவு தூரம் ஞான வைரவர் கோவிலுடன் ஒன்றியவராக குழந்தையர் இருக்கிறார்.

ஆள் உயரம் அவ்வளவு இல்லை; ஐந்தடிக்கு மேற்படாது. மடித்துக் கட்டிய சாறம், வெறும் மேல், வெறும் காலுடன் அந்தக் கோயிலையும் மடத்தையும் வளைய வருவார். மார்பிலும் தலையிலுமாக நரைத்த முடி அவரது முதுமையைக் காட்டும். கூடவே சுத்தமாகச் சவரம் செய்த முகத்தின் சுருக்கங்களும் அதற்கு ஆதாரமாக இருக்கும்.

வெள்ளைக்காரன் ஆட்சி இருந்த காலத்திலேயே அவர் மத்திய வங்கியின் சிறாப்பர் சேவையில் இணைந்து விட்டார். அந்தக் காலத்தில் மெற்றிக்குலேசன் பாஸ் பண்ணி, கோட், சூட் போட்டு உத்தியோகத்திற்குப் போனவர். குமாரசாமி என்பது அவரது பெயராக இருந்தாலும் உறவினர், ஊரவர் அவரைக் 'குழந்தை' என்ற செல்லப் பெயராலே அழைப்பர். உறவு முறையைப் பொறுத்து அண்ணை, மாமா, பெரியப்பா என்ற முறைகள் விகுதியாகச் சேரும்.

எங்களுக்கு அவர் பெரியப்பாவாக மட்டுமல்ல. சில கட்டுக் கோப்பான அன்றாட நடைமுறைகளில் அவர் எமக்கெல்லாம் ஆதர்ஷ புருஷனாகவும் விளங்குகிறார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு நேர் கிழக்காக ஐந்நூறு யார் தூரம் மட்டில் நடந்து வந்தால் யமன் பொன்னம் பலம் வீடு கழியப் பாதையின் ஓரமாய் வலது கைப் பக்கமாக மடம் இருக்கிறது. எதிர்ப்பக்கம் வீமன்காமம் மகாவித்தியாலயம். அறுபது அடி தூரத்துக்கு மடத்தின் முன் விறாந்தைப் பகுதி நீண்டு கிடக்கிறது. நீளவாட்டிற்குச் சிலாகைகளால் அடித்த

மறைப்பு. நட்ட நடுவில் ஒரு படலை, வாசல், படி இருக்கிறது. உள்ளே சிங்கம், நாய், குதிரை போன்ற மரத்தில் செய்த வாகனங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதன் உட்புறமாக இரண்டு தொங்கலிலும் இரண்டு அறைகள். மேற்கு வளத்து அறை ஞான வைரவர் கோவிலின் களஞ்சியசாலை. கிழக்கு வளத்து அறையில்தான் குழந்தையரின் குடியிருப்பு.

தனி அறையாக இருந்தாலும் ஒரு வீட்டிற்கு உரிய அத்தனை தளபாடம், தட்டுமுட்டுச் சாமான்களும் அதனுள் உள்ளன. தெற்கு வளமாக யன்னல் ஓரத்தில் ஒரு சொகுசுக் கட்டில், எதிர்ப்புறத்தில் மேசை, சின்னதாக ஒரு அலுமாரி, மண்ணெண்ணெய் அடுப்பு, ஹொட் பிளேட், அயன் பொக்ஸ் எல்லாம் இருக்கும். அறை வாசலில் ஒரு சாய்மனைக் கதிரை. உள்ளே மேசையின் மேல் ஒரு பிலிப்ஸ் வால்வ் றேடியோ. அதன் ஏரியல் கம்பி, வைரவர் கோவில் மூலஸ்தானத்தின் பின் பக்கமாக உள்ள பனையின் அரைவாசி உயரத்தில் கட்டப் பட்டிருக்கிறது. அந்த றேடியோவில் ஓல் இந்தியா றேடியோவும், பி.பி.சியும் தான் அதிகம் ஒலிக்கும். அதுவும் செய்தி, நல்ல சங்கீதம் என்றால் மட்டும்தான். மற்றும்படி அது ஓய்ந்து கிடக்கும்.

அவரது அறையில் இருந்து கிழக்குப் பக்கமாக இருபது அடி தூரத்தில் ஞானவைரவர் கோவிலின் மூலஸ்தானம். கோவில் ஒன்றும் பெரிய கோவில் அல்ல. ஆனாலும் மூலஸ்தானம், உள் மண்டபம், வெளி மண்டபம், சுற்றுப் பிரகாரம் என்று சில அமைப்புகளைக் கொண்டிருக்கிறது.

கோயிலுக்குக் கிழக்கு வளாகத்தில் கிணறு. கிணற்றடியில் இருந்து ஒரு வாய்க்கால் பிரதான பாதைப் பக்கமாகச் செல்கிறது. பிரதான பாதையில் ஒரு தண்ணீர்த் தொட்டி, அருகில் ஒரு சுமைதாங்கிக் கல்லு.

கோவிலின் கிழக்கு வளத்தில் குழந்தையரின் தங்கை செல்லம்மாவின் வீடு. செல்லம்மாவின் வீட்டிற்கு முன்னால் உள்ள

சந்தியில் இருந்துதான் தம்பக தம்பி ஒழுங்கை வடக்குப் பக்கமாகச் செல்கிறது. செல்லம்மா கொஞ்சம் ஆதிக்க வல்லமை உள்ள பெண்மணி. குழந்தையர் கொழும்பில் தொழில் பார்த்த காலத்தில், ஞான வைரவர் கோவிலைப் பராமரிக்கும் பொறுப்பு தற்காலிகமாக தங்கை செல்லம்மாவிடம் விடப்பட்டிருந்தது.

செல்லம்மாவின் மேற்குப் பக்க எல்லை மெல்ல மெல்ல விஸ்தாரமாகி, சுமைதாங்கிக் கல்லோடு வியாபித்து கிணற்றைச் சுற்றிப் பெருத்து கோயிலுக்கு உரிய காணியின் சில பகுதிகளை யும் கைப்பற்றியிருந்தது. இதை அறிந்து கொண்ட குழந்தையர் தன் தொழிலுக்கும் ஓய்வு கொடுத்துவிட்டு ஊரோடு வந்துவிட்டார்.

கோவில் அவரது மூதாதையரால் பராமரிக்கப்பட்டு வந்தா லும் அதன் அடுத்த வாரிசு குழந்தையர் தான் என்பதால் அது இன்னொரு உரிமைக்காரரர் கைக்கு மாறுவதை அவர் விரும்ப வில்லை. நிலைமை மல்லாகம் நீதிமன்றம் வரை போனது. கோவிலின் தென்புறமாக இருந்த பத்து ஏக்கர் தோட்டக் காணியையும் கிணற்றில் கோயிலுக்குரிய பங்கினையும் அவரால் மீட்டுக் கொள்ள முடிந்தது.

இனியென்ன இவற்றைப் பராமரித்தாக வேண்டுமென்பதால் அவர் கோயில் மடத்திலேயே தங்கிவிட்டார். மனைவி பிள்ளைகள் அளவெட்டியில். குடும்பப் பிரிவு மறுபுறமாக மல்லாகம் கோட்டுக் குப் போனது. ஆனாலும் குழந்தையர் கோவிலைப் பராமரிப்பதே தன் பிரதான பணியென்று இருந்து விட்டார்.

பத்துத் தர இருபது அளவில் சுவர் எழுப்பி, ஓடு போட்டுக் கிடந்த கோவிலை மண்டபம், மூலஸ்தானம், கோபுரம், சிலைகள், வாகனம், சுற்றுப் பிரகாரம் என்ற மட்டத்துக்கு உயர்த்தினார். உறவினர் ஊரவரது பொருள் உதவியுடன் தனது சிரமத்தையும் முழுமையாக ஈடுபடுத்தி அதனைச் சாதித்தார்.

‘தம்பி வைரவருக்கு ஒரு காண்டாமணி செய்ய வேணும், காண்டாமணிக்கு ஒரு தூண் எழுப்ப வேணும்’ என்று அடிக்கடி

ஊரவரை உணர்வுப்படுத்தி அதனையும் செய்து விட்டார். அதைத் தான் இப்போது காலையும் மாலையும் சரியாக ஆறு மணிக்கு அடித்து வருகின்றார்.

குழந்தையருக்கு இப்போது வயது அறுபதைத் தாண்டி யிருக்க வேண்டும். அவரது செயற்பாடுகளில் முதுமையின் தளர்வு தெரிகிறது. அடிக்கடி தொய்வு வந்து சிரமப்படுத்துகின்றது. 'மூச்செடுக்கக் கஸ்ரம், நடக்கக் கஸ்ரம், குனிஞ்சு நிமிர்ந்து ஒண்டும் செய்ய ஏலாது' என்று அடிக்கடி கூறுகின்றார். கை உதவிக்கு, துணைக்கு ஆள் தேவை. ஆனாலும் அவரது றாங்கி அதற்கு சற்றேனும் இடம் கொடுக்காது. சுயமாக தனது தனித்துவத்துடன் இயங்கிக் கொள்ளவே முயல்கிறார்.

தனியாக தான் சமைத்துச் சாப்பிடுவதாக ஒரு சோறு, இரண்டு மரக்கறி அவியல், தேவைக்கு ஏற்ப தேங்காய்ப்பூ, மிளகாய்த் தூள், உப்பு சேர்த்துக் கொள்வார். எதையும் மேல்மிச்சம் என்று வெளியே வீச மாட்டார். தேங்காய்ப் பூவைத் துருவி, மெல்லப் பிழிந்து பால் எடுத்துவிட்டுத் தேங்காய்ப் பூவையும் உணவின் பாகமாகக் கறியுடனோ, சம்பலாகவோ சேர்த்துக் கொள்ளுவார். அது வயிற்றுப் போக்கைச் சுகப்படுத்தும் என்பது அவரது வியாக்கியானம்.

இரவில் இடியப்பம், பிட்டு, அவரது தேவைக்கு ஏற்பச் செய்து சாப்பிட்டுக் கொள்வார். அரிசி மா இடித்து வறுக்கும் வேலையை எங்கள் அம்மாவிடம் ஒப்படைத்து விடுவார். தனது பென்சன் திகதியை ஒட்டி அதற்கான நாளைக் குறிப்பார். சிவப்புப் பச்சை அரிசியை வாங்கிக் கொண்டு வருவார். தெல்லிப்பழை வரையில் போய் கண்ணப்பர் கடையில் வாங்கி வந்தால்தான் அவருக்குத் திருப்தி.

அரிசி பிடைப்பது, நெல்லு உமி, கல்லு அகற்றக் கிளைவது, ஊற விடுவது, இடிப்பது, வறுப்பது, ஆறவிட்டு துணிப் பையில் பொதி செய்வது வரை அத்தனை பக்குவத்தையும்

திரும்பத் திரும்ப நினைவுபடுத்துவார். விடிய அதிகாலையில் ஊறவிட்ட அரிசியை, சின்னாச்சி வந்து இடித்து வறுத்து முடிய மாலை ஐந்து ஆறு மணியாகிவிடும்.

அரிசி மாவைப் பொதி செய்து கொடுத்ததும் அவர் தனது கணக்கு அறிக்கையை வாசிப்பார். அரிசியின் விலை தவிர இடித்தது, வறுத்தது, விறகு, கூலி வரை கணக்குப் பார்த்து சதக் கணக்கு பிசகாமல் அம்மாவின் கையில் கொடுத்துவிட்டுப் போவார். மிளகாய்த்தூள் இடிப்பதானாலும் இதே நடைமுறைதான்.

அவரது போக்கு வரத்துக்கு என்று அவரிடம் ஒரு றலி சைக்கிள் இருந்தது. அது வாங்கிப் பத்து வருசம் கடந்திருக்கும். இன்னும் புதுசு போலவே இருந்தது. கிழமைக்கு ஒரு தரம் எண்ணெய் போட்டுத் துடைப்பார். முதிரைப் பலகையை வெட்டி பொலிஷ் பண்ணி, கரியரில் பூட்டி வைத்திருக்கிறார். ஸ்ரான்ட், டைனமோ, லைற், பிறேக், ரயர், ரியூப், காற்று அமுக்கம் எல்லாம் ரிப் ரொப்பாக இருக்கும். அவரைத் தவிர வேறு யாரிடமும் அதனை ஓடக் கொடுக்க மாட்டார்.

அவருக்கு சுகவீனம் வந்தால் மட்டும் அந்த வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கும். அதுவும் பாடசாலை விடுமுறை என்றால் தான் அந்தச் சந்தர்ப்பத்தைத் தருவார்.

நடு அச்சில் இடது பாதத்தை வைத்து இரண்டு மூன்று முறை கெந்தித்தான் சைக்கிளில் ஏறுவார். சீற்றில் ஏறியபின் மட்டுமட்டாகவே அவரது பாதங்கள் பெடலை மிதிக்கும். வலு நிதானமாக மிதித்து ஓடி எங்கள் வீட்டிற்கு வருவார்.

இறங்கும் போதும் நடு அச்சில் கால் வைத்தே குதித்து இறங்குவார். ''தம்பி! நாளைக்கு உனக்குப் பள்ளிக்கூடம் இல்லைத்தானே! காலமை என்னோட ஒருக்கால் வாறியே! தெல்லிப்பழைக்குப் போக வேணும்...'' எங்கள் பதிலை எதிர் பார்க்க மாட்டார். அது எங்கள் அம்மா, அப்பாவின் அனுமதியாக வருவதை எதிர்பார்ப்பார். குழந்தைப் பெரியப்பாவின் சைக்கிளில்

தெல்லிப்பழைக்குப் போவது என்றால் மனம் இறக்கை கட்டிப் பறக்கும். போவது அவருக்கு உதவியாக அல்ல, ஓட்டுனராக, மறுநாள் எப்போது விடியும் என்று இருக்கும்.

மடத்தை விட்டு எங்கு செல்வதானாலும் 'ரிப் ரொப்' பாகவே வெளிக்கிடுவார். தோய்த்து கஞ்சி, நீலம் போட்டுக் காய வைத்து, அயன் பண்ணிய வெள்ளை வேட்டி, நஷனல் அவரது சீருடை. அதில் ஒரு துளியேனும் அழுக்கு இருக்க அனுமதிக்க மாட்டார். வெள்ளாவிக்குப் போன இடத்தில் கிழிந்து போனால், அல்லது முள்ளுக் கிள்ளு இழுத்துப் பொத்தல் விழுந்தால் அதற்குச் சமனான துணி வைத்து 'டாண் பண்ணிப்' பாவிப்பாரே ஒளிய இலகுவில் தூக்கி வீசிவிட மாட்டார். அப்படி வீசுவதானாலும் அது கோவில் விளக்குக்குத் திரி சுற்ற, பாத்திரம் துடைக்க என்று பயன்படும்.

காலையில் ஏழு மணி என்றால் ஏழு மணிக்கு அவரது மட வாசலில் நாம் நின்றாக வேண்டும். சைக்கிள் பாரிற்கு மேலாக ஏறி நான் சைக்கிளை பலன்ஸ் ஆக்கி கால்களால் நிறுத்தி வைத்திருக்க வேண்டும். அவர் பின் அச்சில் வலது காலை வைத்து கெந்தி ஏறி பின் கரியரில் இடப் பக்கமாக இருந்து திடப்படுத்திக் கொள்ளுவார். இனி நான் உன்னி உழக்க வேண்டும். பின்னுக்கு இருந்து அவர் ஆணையிட்டுக் கொண்டிருப்பார்.

''உந்தா உதில கிடங்கு கிடக்குது, வலப்பக்கமாய் வெட்டி எடு, உதில ரெயில்வே குறொஸ்ஸிங், எப்பன் ஊண்டி உளக்கு, அப்பதான் ஒரே வீச்சாய் ஏறலாம். தடி தண்டு கிடக்குது. கவனமாய் விடு. சிலிப் பண்ணி விட்டுவிடும். அங்கின பிராக்குப் பாக்காதை. நேர பாத்து ஓடு....'' என்று செடில் பிடித்துக் கொண்டே இருப்பார்.

''நேர ஆஸ்பத்திரிக்குப் போ! ஓரமாச் சைக்கிளை நிப்பாட்டு...!'' என்று நிறுத்துவிப்பார். ஏறியது போலவே நான் பாரில் இருந்து பலன்ஸ் பண்ண அவர் மெதுவாக இறங்குவார்.

தடிப்பான ஒரு சீலைப் பை நான்காக உருட்டி மடித்து அதன் வாயில் உள்ள மெல்லிய பட்டியால் சுற்றிக் கட்டி இடுப்பில் செருகியிருப்பார். அவரது கைப் பைக்குள் சில்லறைக் காசுடன் ஐந்து சத முத்திரையும் இருக்கும்.

ஆஸ்பத்திரியில் மருந்து எடுக்க துண்டு எடுக்கும் போது ஐந்து சத முத்திரை ஒட்ட வேண்டும். ஆஸ்பத்திரி உள்ளே போய் அவர் மருந்து எடுத்து வரும் வரை நான் சைக்கிளுக்குப் பாதுகாப்பாக நிற்க வேண்டும். வரும் போது இருந்ததை விட அவர் இப்போது கொஞ்சம் சுகம் பெற்றவராகத் தெரிவார். பின்னர் முன்பு போல் ஏறிச் சவாரி தொடங்கும். ''தம்பி உதால போஸ்ற் ஒவ்வீசுக்கு விடு பாப்பம்'' போஸ்ற் ஒவ்வீசுக்கு பென்சன் எடுக்கப் போகிறார். எனக்கு சைக்கிள் காவல் காக்கும் பணி.

பென்சன் எடுத்ததும் இருபது ரூபாய்க்கு மணி ஓடர் எடுத்து தபாலிலும் அளவெட்டிக்கு அனுப்பி விடுவார். அது நீதிமன்றக் கட்டளைப்படி அவர் தனது மனைவி பிள்ளைகளுக்குச் செலுத்தும் தாபரிப்புப் பணம். மீதியைச் சரியாகக் கணக்குப் பார்த்து கைப் பைக்குள் இட்டுக் கட்டியபடி கண்ணப்பர் கடைக்குப் போவார். அங்கே ஓவல்ரின், சீனி, பிஸ்கெற், அரிசி, பருப்பு எல்லாம் ஒன்றுக்கு இரண்டு தரம் விலை கேட்டு, நிறுவை சரிபார்த்து வாங்குவார். சில்லறைக் காசு பிழைக்காமல் கொடுத்து, 'பில்'லையும் வாங்கி வைத்துக் கொள்ளுவார். பின் வீடு நோக்கிய பயணம் தொடரும். ஒரு அரசாங்க அதிபருக்கு கார் ஓடிய பெருமை போல் மனம் பூரித்துக் கிடக்கும். நாங்கள் தனியாகப் போக முடியாத தெல்லிப்பழைக்கு - பிரதான வீதி வழியாக சைக்கிளில் போவதற்கு குழந்தையர் தரும் சந்தர்ப் பத்தை மதித்தாக வேண்டும்.

அவருக்குச் சுகவீனம் எண்டால் எங்களுக்கு இன்னொரு வாய்ப்பும் கிடைக்கும். வீட்டிற்கு வந்து அம்மாவிடம் அனுமதி கேட்பார். ''எனக்கு இப்ப ரெண்டு மூண்டு நாளாய் நல்ல சுகம் இல்லை, வீடு வாசல், கோயிலடி, மடத்தடி ஒண்டும் கூட்டித்

துடைக்க ஏலாமல் இருக்குது. உவை மூண்டு பேரையும் ஒருக்கால் பள்ளிக்கூடத்தாலை வந்த பின்ன அங்கை அனுப்பி விடுவியளே!" அது எங்கள் காதிலும் விழும். பெரியப்பா கேட்டால் அம்மா மறுக்க மாட்டா. அதனால் நாங்கள் தயாராகி விடுவோம்.

அன்று பின்னேரம் எங்களால் செய்யப்படும் ஆடு, மாட்டுக்கு இரைதேடும் வேலை பிற்போடப்படும். ஆனாலும் பெரியப்பாவின் மடத்தில வேலை மும்முரமாக இருக்கும். கோயில் வீதி கூட்ட ஒராள், மடம் உட்புறம் கூட்ட ஒராள், அவரது அறை துப்பரவு பண்ண தொட்டாட்டு வேலைக்கு ஒராள் என்று பிரித்து விடுவார். தும்புத்தடி, விளக்குமாறு, ஒட்டறை தட்டும் ஓலைச் சிறகுத் தடி, மரத்தளவாடம் துடைக்க, தூசி தட்டத் துணி என்று அத்தனையும் வேறு வேறாக எங்கள் கைகளுக்குத் தரப்படும்.

''இஞ்சார் சும்மா கூட்டிப் பலன் இல்லை. காத்துப் போற பக்கமாய்க் கூட்டு, இந்தா இப்பிடி தூசிய தட்டி எழுப்பிக் கூட்ட வேணும், பங்க பாத்தியே! இதுதான் காத்துள்ள போது தூற்று எண்டு சொல்லுறது" என்று செய்முறை விளக்கமும் தருவார். சாமான்களைப் பிரிப்பது, தூசு தட்டுவது, மீள அடுக்குவது என்று அத்தனையிலும் நுட்பம் இருக்கும்.

முற்றம் கூட்டுபவர் தேவையற்ற புற்கள், களைகளைப் பிடுங்கிக் கூட்ட வேண்டும். பிடுங்கிய புற்களை வேறாகக் குவித்துச் சருகுகளை வேறாகக் கூட்ட வேண்டும். குப்பைகள் எல்லாம் ஒரு இடத்தில் சேர்க்கப்பட்டதும் அதற்கு எரியூட்டும் வேலையை அவர் செய்வார்.

வேலைகள் முடிந்ததும் ''கைகால் முகம் கழுவிப் போட்டு மூண்டு பேரும் வாங்கோ!'' என்று அறிவிப்பார். அவரது அறைக்குள் கூப்பிட்டு கட்டிலில், கதிரையில் இருப்பாட்டுவார்.

அவர் தேநீர் குடிக்க பெரிய மாபிள் கோப்பை, தேனீர் ஆற்றும் எவர்சில்வர் கோப்பை, தண்ணீர் குடிக்கும் தகரக்

கோப்பை மூன்றிலும் ஓவல்ரின் கரைத்து எமக்குப் பரிமாறுவார். குடித்து முடிய வாயில் மீசை வைத்தது போல் பால் கறை படர்ந்து கிடக்கும். அதைத் துடைத்து விட அந்த மாலை வேளையின் வேலைக் களைப்பு பறந்து போயிருக்கும்.


‘‘இந்தா இந்தச் சாக்கில் புடுங்கின புல்லப் போட்டுக் கொண்டு போங்கோ, இந்தா கத்தி. அந்த வேலி முட்கிழுவையில பாத்து குழை வெட்டிக் கொண்டு போ. இந்தாங்கோ படிக்கிறதுக்கு புத்தகம், எழுதுறதுக்கு கொப்பி’’ என்று ஏதாவது பரிசும் கையில் தந்து விடுவார்.

அவருக்கு சுகயீனமான நாளில் இரவுச் சாப்பாடு பெற்றுக் கொள்வதற்காகவும் அம்மாவிடம் வருவார். மூன்று நாள் இரவுக்கு இடியப்பம் தேவை எனில் அதற்கு வேண்டிய அரிசிமாவை சுண்டுக் கணக்கில் அளந்து கடதாசிப் பையில் போட்டு, தேவையான தேங்காயையும் எடுத்து ஒரு துணிப் பையில் போட்டுக் கொண்டு வருவார். பொழுதுபட முதல் சொதி விடுவதற்கான போத்தலுடன் வருவார். வந்து இடியப்பத்தைக் கோப்பை ஒன்றில் வைத்து மற்றொரு கோப்பையால் மூடித் துணி ஒன்றினால் வைத்துக் கட்டி எடுத்துப் போய்விடுவார்.

அவரது புத்தக அலுமாரியில் பெரிய பெரிய ஆங்கில நூல்கள் மினுங்கிக் கொண்டிருக்கும். இரவு சாப்பிட்டு முடிய, கொஞ்ச நேரம் சாய்மனைக் கதிரையில் படுத்திருந்து ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து வாசித்த பின்பு ஒரு ஓவல்ரின்னோ, மைலோவோ குடித்து விட்டு றேடியோவில் பாட்டுக் கச்சேரி கேட்டுவிட்டுத் தூங்கப் போவார்.

(ஏப்ரல் - ஜுன் 2008, ஜுலை - செப்டெம்பர் 2008)

# 10. தலைவர் தவராசா



**மா**விட்டபுரம் கோவில் கடந்து வடக்குப் பக்கமாக காங் கேசன்துறை வீதியில் அரைக் கட்டை தூரம் நடந்தால் அந்த வீதியில் ஒரு பரபரப்புத் தெரியும். தேன்கூட்டைச் சுற்றித் தேனீக்கள் சுறு சுறுப்பாக இயங்குவது போல் ஒரு சுறுசுறுப்பு. சீமெந்துத் தொழிற்சாலைக்கு அப்பகுதியில் இரண்டு நுழை வாயில்கள். அடுத்தடுத்துக் காற்கட்டை தூரத்தில் உள்ளன. தொழிலாளர்கள், அலுவலர்கள் உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருப்பர். சீமெந்து ஏற்றும் லொறிகள் வரிசையில் நின்று உள்ளே புகும், ஏற்றிய லொறிகள் முக்கி முனகிக் கொண்டு மூச்சு இரைத்தபடி வெளியேறும். பிரதான வீதிக் கரையில் உள்ள தேநீர்க்கடை எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும். ரயில் றோட்டுக் கடக்கும் சந்தி மூலையில் இராசையாவின் சைக்கிள் திருத்தும் கடை. அதுவும் ஓய்வற்ற வேலையுடன் காற்றடிக்க வருபவர்களுக்கும், ரியூப் ஒட்டுப் போட வருபவர்களுக் கும் சலிக்காது முகம் கொடுத்தபடி இருக்கும். எந்த நேரமும் இந்தப் பகுதியில் வந்து ‘‘தலைவற்ரை வீடு எவடத்தை?’’ என்று கேட்டால் ‘‘ஆர் தவராசா அண்ணையோ!’’ என்று பதில் கேள்வி கேட்பார்கள். ‘‘உந்தா உதில போறார், அவர்தான்’’ என்று சில சந்தர்ப்பங்களில் காட்டப்படும் அளவுக்கு அந்தப் பிரதேசத்தில் பிரசித்தமானவர். அவரது வீட்டைக் காட்டும் வகையில் குறிப்புக் கூறுவதும் சுலபம்.

‘‘உந்தா உந்த ரெயில் பாதைப் பக்கத்து றோட்டால கிழக்கு முன்னாப் போங்கோ ஒண்டு, ரெண்டு முடக்குக் கழிய துண்டி ஒண்டு இடப்பக்கமாய்த் தெரியும். ஆலமரமும் அரச மரமும் நிக்கிற குமார கோயில் அது. அதுக்கு எதிர்ப்பக்கமா முந்திரிகைப் பந்தல் வீடு. றோஸ் கலரிலை கேற் போட்டிருக்கு. முந்திரிகைப் பந்தலுக்கு இடப்பக்கமாக் கிணத்தடி இருக்கு. ஆடுகால் துலா தெரியும்’’ என்று வழி காட்டுவார்கள்.

எப்பொழுதும் மெல்லிய நிறத்தில் அரைக் கை சேட், வெள்ளை வேட்டி, மேவி இழுத்த தலை, நாற்பத்தைந்து வயது

கடந்தாலும் நரைக்காத கேசம், சாதாரண உயரம், திடகாத்திரமான தேகம். சேவ் எடுத்து மீசையை அரும்பு மீசையாக 'கிளிப்' செய்திருப்பார். சிகரட், சாராயம், கள்ளு வாசனையே அறியாதவர்.

தவராசா அண்ணர் ஒரு ஓய்வில்லாத சமூக சேவையாளன். நடேஸ்வராக் கல்லூரியில் எஸ்.எஸ்.ஸி. படித்த கையோடு, சீமெந்துத் தொழிற்சாலையில் தொழிலாளியாகச் சேர்ந்து கொண்டார். அவரது அதிஷ்டம், மின்சாரப் பராமரிப்புப் பகுதியில் வேலை கிடைத்தது. மேலதிகாரியான எஞ்சினியருடன் கண்ணும் கருத்துமாய்ப் பணியாற்றியதால் மிகக் குறுகிய காலத்திலேயே மின்சாரம் பற்றிய விடயங்களைக் கற்றுக் கொண்டார். மிகக் குறுகிய காலத்தில் திறமை அடிப்படையில் அவருக்கு மின் முகாரியாகப் பதவி உயர்வு கிடைத்தது.

உத்தியோக தர உயர்வை விட இதர தொழிலாளர்களிடம் தலைவர் பதவி கிடைத்தமை தான் அவருக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும். சத்தமில்லாத சிறு நதி போல் அமைதி யாக ஓடிக் கொண்டிருந்த காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையின் தொழிலாளர் சங்கம் தவராசாவை அங்கத்தவராக இணைத்துக் கொண்டது. அவ்வப்போது நடந்த தொழிலாளர் போராட்டங்கள், முகாமைத்துவத்துடனான பேச்சு வார்த்தைகளில் தவராசா அண்ணரும் முன்னணியில் செயற்பட்டார்.

அதற்குரிய தகைமைகள், குணப் பண்புகள் தவராசா அண்ணருக்கு இயற்கையாகவே கைவரப் பெற்றிருந்தன. சட்ட திட்டங்கள், ஒழுங்கு விதிகள், உரிமைகள், சலுகைகள் என்று அனைத்து விடயங்களையும் படித்துப் பாடமாக்கி வைத்திருப்பார். உள்நாட்டு அரசியல், சமூக விடயங்கள் மட்டுமல்ல உலக விடயங்களையும் படித்து அறிந்து கொள்வார். விடயம் தெரிந்த வர்களுடன் கலந்துரையாடிக், கொள்கைகள் கோட்பாடுகளைச் சரிப்படுத்திக் கொள்வார்.

இதற்கும் அப்பால் அண்ணரின் வாதாடும் திறன், நாவன்மை தான் முக்கியமானது. அமைதியாக, தெளிவாக காரணகாரிய ஆதாரங்களுடனும் கருத்துக்களை முன்வைப்பார். தான் கொண்ட கருத்து, நியாயம் என்பதற்கும் அப்பால் எதிரே நிற்பவரை மடக்கும் வகையில் விதண்டாவாதமாகவும் பேசுவார்.

"ஜீ.ஜீ. செய்தது சரி" என்று ஒருவர் சொன்னால் "ஜி.ஜிக்கு ஒண்டும் தெரியாது, பிழை விட்டிட்டார். எஸ்.ஜே.வி. தான் சரி!" என்று வாதாடுவார். இன்னும் ஒரு நாளில் அந்த நபர் இவர் எஸ்.ஜே.வியின் ஆள் என்ற நம்பிக்கையில் எஸ்.ஜே.விக்குச் சார்பாக கதைத்தால் "எஸ்.ஜே.வி. என்ன செய்தது. சும்மா காலத்தைக் கடத்தினது! ஜி.ஜி. தானே இந்தப் பக்ரரி எல்லாம் போட்டுத் தந்தது" என்று மாத்திப் பிடிப்பார்.

அந்தத் திறமையினால் அவர் தன் சக தோழர்களைத் திணறடித்து மகிழுவார். அதே போல முகாமைத்துவத்துடன் பேசி தொழிலாளர் சார்பில் வெற்றியும் பெற்று விடுவார். தவராசா அண்ணர் பேச வருவதானால் முகாமைத்துவம் ஒரு சிரேஷ்ட சட்டத்தரணியுடன் பேசும் வகையில் உசாராகிவிடும். ஆனாலும் தவராசா அண்ணரிடம் தோற்று விடும். தொழிலாளர் பலம் இருப்பதால், முகாமைத்துவம் அண்ணரைப் பழிவாங்க உத்தேசிப்பதில்லை. ஆனாலும் முகாமைத்துவத்தில் உள்ள முக்கியமான அதிகாரிகள் அண்ணரின் தனிப்பட்ட நண்பர்களுமாக இருப்பர்.

வருடா வருடம் செயற்குழு, பொதுக்குழு கூட்டி தலைவர் செயலாளரை மாற்றுவார்கள். மாற்றினாலும் தலைவர், அல்லது செயலாளர்கள் மாறி மாறி இருப்பர். சில வேளைகளில் கணபதிப் பிள்ளை அண்ணர் தலைவராக வருவார். வந்தாலும் அவர் நாடகம் போடுவதே பிராக்காய், சிந்தனையாய் இருப்பதால் தவராசா அண்ணர் தான் அந்தப் பணிகளையும் கவனிப்பார்.

சீமெந்து ஆலையின் தொழிலுக்கும் தொழிற்சங்கத்துக்கும் புறம்பாக அண்ணருக்கு இன்னொரு சமூகப் பணியும் இருக்கிறது.

அதுதான் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். அதன் செயற்குழு அங்கத்தவர், தனாதிகாரி, ஆலோசனைக்குழு உறுப்பினர் என்று எப்போதும் ஏதாவது பதவியில் இருப்பார். கூட்டுறவுச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டமும் அண்ணர் இல்லாமல் நடக்காது. அப்படி ஏதும் அவசர காரணங்களால் அண்ணர் சமூகமளிக்க முடியாமற் போனால் அந்தக் கூட்டம் களைகட்டவில்லை என்று ஆட்கள் முணுமுணுப்பார்கள். அந்தளவு தூரம் கூட்டுறவுச் சங்கத்தில் அண்ணர் குரல் தொழிலாளர் சார்பாகவும், சங்க நன்மைக்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும் ஒலிக்கும்.

கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் ஏதும் குழப்படி விட்டால் முகாமை அவர்களை வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்து விடும். பின் அவர்கள் தவராசா அண்ணரின் தயவைப் பெற்று மீள்நியமனம் பெற்று விடுவார்கள்.

வழமைபோல பெருத்த தட்டுப்பாடு வந்து அமளியாகச் சாமான்கள் பங்கிட்டு வழங்கப்படுகின்ற காலத்தில் அண்ணர் சும்மா இருக்க மாட்டார். சங்கக் கடைகளுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு மேற்பார்வைகளைச் செய்வதன் மூலம் ஊழல்கள் நடப்பதைத் தவிர்த்து விடுவார். தனது பங்கீட்டு அட்டைக்கு உரிய அளவைவிட ஒரு சிறங்கை சீனி தன்னும் தனது வீட்டுக்குக் கொண்டு போக மாட்டார். கையில் காசு கொடுத்துப் பிள்ளை களைத் தங்கள் பிரதேச சங்கக் கடைக்கு அனுப்பி, வரிசையில் நின்று சாமான் வாங்க வைப்பார்.

அதனால் ஊரவர்கள் மத்தியிலும் தவராசா அண்ணர் ஒரு தலைவராகவே மதிக்கப்பட்டார். பொது வேலையைப் போலவே வீட்டு வேலைகளிலும் அண்ணர் பங்களிப்பு தவறாமல் இருக்கும். அவரது வீட்டின் பின்னால் ஒரு இரண்டு பரப்பில் வீட்டுத் தோட்டம் இருக்கிறது. அதில் வாழை, கத்தரி, வெண்டி, புடோல், பாகல், மிளகாய் என்று எப்போதும் வீட்டுத் தேவைக்கான வருமானம்

இருக்கும். தாவாரத்தில் ஒரு பசுமாடு கன்றுடன், ஆட்டுக்குட்டி ஒன்று இரண்டும் எப்போதும் நிற்கும்.

வீட்டிற்கு முன் முற்றப் பகுதியை மூடிக்கொண்டு முந்திரிகைப் பந்தல் பச்சைக் கூடாரமாக நிழல் தரும். அதில் ஆறு அடி அளவில் முந்திரிகைச் செடிகள் இருக்கும். இன்னும் தென்னை, செவ்விளநீர். மாமரங்களும் அந்த வளவிற்குள் உண்டு. அவற்றைப் பராமரிப்பது, நீர் பாய்ச்சுவது, பசளை இடுவது, கொத்துவது, சாறுவது எல்லாம் அண்ணர் தன் கையால் ஆற்றும் பணிகள் தான்.

இதற்கு மேலதிகமாக சீமெந்துத் தொழிற்சாலைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தை ஒப்பந்த அடிப்படையில் பெற்று பயிர் விளைவிக்கும் பசுந்தரையாக மாற்றி விட்டிருக்கிறார். அதில் தனக்கென ஒரு ஆயிரம் கண்டுப் பகுதியை வைத்துக் கொண்டு மீதியை தனது விவசாய, தொழிலாள நண்பர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளார். அதாவது சீமெந்துத் தொழிற்சாலை காங்கேசன்துறைக்கு வர முதல் அது அந்த மண்ணின் விவசாயிகளின் விளை நிலமாக இருந்ததால் அதை மீளப் பெற்று குத்தகை செலுத்தியேனும் விவசாயம் செய்யப் பயன்படுத்தப் படுவதில் அண்ணருக்குப் பெருமை அதிகம்.

சுண்ணாம்புக் கற்பாறைகள் நிறைந்த அந்தப் பகுதியில் பற்றை வெட்டி, கல்லுக் கிளறி, உழுது, மட்டப்படுத்தி, இறைப்புக் கிணறுகளை தூர் அகற்றி அங்கு பலர் கூடிப் பருவப் பயிர்கள் செய்து வருகிறார்கள். தனது தொழில் தவிர்ந்த நேரங்களில், சங்க வேலை தவிர்ந்த நேரங்களில் அண்ணர் இந்தத் தோட்ட வெளிக்குள் தான் நிற்பார்.

காலத்துக்கு ஏற்றவாறு வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய், மரவள்ளி, கீரை, மரக்கறி என்று எப்போதும் பயிர்ச் செய்கை நடைபெறும். சுண்ணாம்புக் கற்குன்றுகள் கலந்த செம் பாட்டுத் தரை, எப்போதும் வேதாள வெங்காயத்துக்குத் திறம்

என்று சொல்லுவார்கள். களைகளின் தொல்லை பெரிதாக இல்லா விடினும் கோரைப்புல்லின் ஆதிக்கம் தான் அந்தத் தோட்ட வெளியில் எப்போதும் இருக்கும்.

முறை இறைப்பு, தவணை தப்பினால் கிணத்தடி லீவு ஆகுவது சிரமம். வேலைக்குப் போகும் முன்பாக விடியற்காலை, அல்லது வேலை முடிந்து வந்து மாலை வேளையாவது முறை இறைப்பு இறைத்தாக வேண்டும். மெஷினைச் சைக்கிள் கரியரில் கட்டிக் கொண்டு சுருட்டிக் கட்டிய அங்கத்தில் பைப்பை குறுக்குத் தடிக் கட்டில் இறுக்கி தோளில் பலன்ஸ் செய்தபடி அண்ணர் தோட்டத்துக்குப் போகும் அழகே அழகு. மகன்மார் மண்வெட்டி, குல்லான், வாளி, சுடுதண்ணீர்ப் போத்தலுடன் தமது அரைச் சைக்கிள்களில் பின்னால் போவார்கள். காலையில் தோட்ட வேலை முடித்து வந்து தான் பிள்ளைகள் பாடசாலை போவார்கள், அண்ணரும் வேலைக்குப் போவார். மாலையிலும் நாலு மணிக்குத் தேநீர் குடித்து விட்டுத் தோட்டத்துக்குப் போனால் மைம்மல் ஆகி, நிலவு காலிக்கும் வரை தோட்டத்தில் வேலை நடக்கும். மாட்டுக்குப் புல்லுப் புடுங்குதல், வரப்பு, வாய்க்கால், உடைச்ச இடங்கள் திருத்துதல், மரக்கறி அறுவடை என்று வேலைகள் இருக்கும்.

தோட்ட வேலை, தொழில், கூட்டுறவுச் சங்கப் பணிகளுக்கும் அப்பால் இன்னொரு துறையில் அண்ணரின் ஈடுபாடு இருக்கும்.

தவராசா அண்ணருக்கு முரசு மோட்டையில் பத்தேக்கர் மட்டில் வயற்காணி இருக்கிறது. அங்கு விவசாயத்தைக் கவனிப்பதற்கு ஒரு குடும்பம் குடியமர்த்தப்பட்டிருக்கிறது. வயற் கரையோடு ஒரு நீரோடை, பளிங்கு நிறத்தில் ஒரு மலைப்பாம்பு போல மெல்ல அசைந்து கொண்டிருக்கும். வருசம் பூராவும் தண்ணீர் இருக்கும். அதை ஒட்டியதாய் ஒரு பிள்ளையார் சிலை. சின்னக் குடில். அந்தப் பகுதி வயல்களுக்கு இந்தப் பிள்ளையார் தான் படைத்தல், காத்தல், அருளல் பணிகளைச் செய்து

வருகிறார். அதற்குக் கைம்மாறாகப் பொங்கல், படையல், மடை, கொழுக்கட்டை அவியல் என்பன காலத்துக்கு காலம் தவறாமல் நடக்கும். இவை எல்லாவற்றுக்கும் தலைமைப் பங்கை வகிப்பவர் தவராசா அண்ணர்தான்.

சனி, ஞாயிறு, போயா விடுமுறை நாள் வருவதைப் பொறுத்து அண்ணர் விடியப்புறம் யாழ்தேவியில் புறப்பட்டு விடுவார். பரந்தனில் இறங்கி விசுவமடுவுக்குப் போற தட்டி வானைப் பிடித்து காலைச் சாப்பாட்டிற்கு வயலுக்குப் போய்விடுவார். அங்கு விவசாய கடமைகளைப் பார்த்து முடித்துவிட்டு இரவிரவாகப் புறப்பட்டு பரந்தன் வந்து மெயில் ரெயினைப் பிடித்து விடியற் காலை மாவிட்டபுரம் ஸ்ரேசனில் வந்து இறங்கிவிடுவார். அப்படியே வீடு வந்து தேத்தண்ணீர் குடித்துச் சாப்பிட்டு விட்டு லோங்சை மாட்டிக் கொண்டு எட்டு மணி சைரன் அடிக்கும் போது பக்ரறி வேலைக்குப் போய் விடுவார்.

அறுவடைக் காலத்தில் கொஞ்சம் கூட நாள் லீவு எடுத்து வயல் அலுவலைப் பார்ப்பார். அலுவல்கள் முடிய வேலையாட்கள், வயலில் இருப்பவர்களின் கொடுக்குமதியைக் கொடுத்து விட்டு ரக்டர் ஒன்றில் நெல் மூடைகளையும் வைக்கோலையும் ஏற்றிக் கொண்டு வீட்டிற்கு வந்து விடுவார். இனி வருசம் முழுவதும் வீட்டில் அரிசி இருக்கும். மாட்டுக்கு வைக்கோல் இருக்கும். இந்தக் களை முடிய முதல் அவர் அடுத்த போகத்துக்கு ஆயத்தம் செய்யத் தொடங்கி விடுவார். இடையில் உழுந்து, பயறு, சோளம் போன்ற பயிர்களையும் உப பயிர்களாகப் பயிரிடுவார். வருமானத்தில் ஒரு பங்கு வயலில் இருப்பவர்களுக்கு கொடுக்கப் படுவதால் அவர்கள் திருப்தியடைவதோடு அண்ணருக்கு விசுவாசமாகவும் இருப்பார்கள்.

ஊரில் உள்ள இளைஞர்கள் நேரங் கெட்ட நேரங்களில் சந்தியிலும், முடக்குகளிலும், வீட்டு வாசல்களிலும் நின்று கதைத்துப் பொழுது போக்குவது அண்ணருக்குப் பிடிக்காது.

அதற்காக இளைஞர்களைப் பகைத்துக் கொள்ளவும் மாட்டார். ஆனால் ஒன்று செய்வார். இதற்கு முக்கியமான இளைஞனிடம் வாரப்பாடாகக் கதைத்து, 'கண்ணா! விவசாயக் கந்தோர் தெரியுமில்லே! அங்க இருப்பார் ஓ.சி. துரைராசா அவரிட்டப் போய் தவராசா அண்ணை சொன்னார் எண்டு பயித்தம் விதை ரண்டு பைக்கற் வாங்கிக் கொண்டு வா, சந்துப் பூச்சிக்கு என்ன மருந்து அடிக்கிறதெண்டு கேட்டுக் கொண்டு வா, இல்லாட்டி இந்தப் பக்கம் ஒருக்கா வந்திட்டுப் போகச் சொல்லிப் போட்டு வா...!' என்று கடமைகளை ஏற்றுவார். போதாக் குறைக்கு தனது சைக்கிளையும் கொடுத்து அனுப்புவார். அதன் பாருக்குக் கீழாக 'காங்கேசன் சீமெந்துத் தொழிலாளர் சங்கம்' என்ற தகரத்திலான பெயர்ப்பலகை தொங்க விடப்பட்டிருக்கும்.

இளைஞர்களால் தவிர்க்க முடியாது. 'ஓமோம்!' என்று புறப்பட்டுக் கலைவார்கள். பின் தவராசா அண்ணர் தூரத்தில் வரும் போதே கூட்டத்தைக் கலைத்துப் பறந்து விடுவார்கள்.

ஊரில் உள்ளவர்களும் தமது வீட்டில் என்ன பிரச்சினை என்றாலும் தவராசா அண்ணரிடம் ஒரு வார்த்தை கேட்டுப் பார்ப்பம் என்று வருவார்கள். வெளியூர் சம்பந்தம், பேச்சுக்கால் என்று வந்தாலும் இடம், பகுதி பற்றி விசாரிக்க அண்ணரைத்தான் ஆலோசிப்பார்கள். காரணம் எந்த ஊரிலும் எந்த அலுவலகத்திலும் அவருக்கு அறிமுகமானவர்கள் இருப்பார்கள். அரசாங்க அலுவலகங்களில் ஏதும் அலுவல் பார்க்க வேண்டும் என்றால், ஊரில் யாரும் முதலில் தவராசா அண்ணரைத்தான் பிடிப்பார்கள். அது தெல்லிப்பழை டி.ஆர்.ஓ. கந்தோர் ஆனால் என்ன, யாழ்ப்பாணம் கச்சேரி, கொழும்பில் உள்ள திணைக்களத் தலைமை அலுவலகங்கள் என்றால் என்ன, எங்கும் அண்ணருக்கும் அறிமுகமான, வேண்டிய ஆள் ஓராள் இருப்பார். கையோடு கடிதம் கொடுத்தனுப்புவார். அண்ணருக்காக அலுவல் நடக்கும். அப்படி ஒரு செல்வாக்கு. செத்தவீடு, கலியாணவீடு, அந்தியேட்டி என்றாலும் தவராசா அண்ணர்தான் முன்னின்று

நடத்துவார். சிலவேளைகளில் பண உதவியும் செய்வார். அவருக்கு நெருக்கமான வீடுகளில் புளிக்கஞ்சி, ஒடியற்கூழ் காய்ச்சினாலும் அண்ணருக்கும் அழைப்பும் கிடைக்கும். சொன்ன நேரத்துக்குப் போய் ஒரு பிடி பிடித்து விடுவார்.

அண்ணர் எட்டு முழ வெள்ளை வேட்டி வெள்ளை சேட்டுடன் புறப்பட்டால் அது கூட்டுறவுச் சங்க, தொழிற்சங்கக் கூட்டமாக அல்லது தூரப் பயணமாக இருக்கும். சாரம் வெறும் மேலோடு புறப்பட்டால் தோட்ட வேலையாக இருக்கும். சாரம் சேட் என்றால் அயல் அண்டையில் ஏதோ அலுவலாக இருக்கும். பட்டுவேட்டி, சேட், சால்வை என்றால் அது மங்கள கருமமாக இருக்கும்.

அண்ணர் ஒழுங்கையால் போகும் போது யாருடைய மணற் கும்பியிலாவது, சிறுவர்கள் ஏறி இருந்து விளையாடினால் பொறுக்க மாட்டார். 'டேய் காசுக்கு வாங்கின மணலடா, கொட்டிச் சிந்தாமல் வேறை எங்கையேன் போய் விளையாடுங்கோ!' என்று விரட்டி விடுவார்.


தோட்ட வேலைகள், ஊர் வேலைகள் எல்லாம் முடிந்து அண்ணர் வீட்டிற்கு வந்தால் வீடு கலகலக்கும். 'பக்ரறிக்குப் போற ஹைரென்சன் கேபிள் வீட்டுக்கு முன் ஒழுங்கைக்கு மேலால் போவதால் அவரது வீட்டுக்கு கரண்ட் எடுப்பது சிரமமாக உள்ளது. பன்னக்காரன் வீட்டில் படுக்கப் பாய் இல்லை எண்ட மாதிரி வீட்டில் எப்போதும் மண்ணெண்ணெய் விளக்குத்தான். குளித்து, கடவுள் வணக்கம் முடித்து, சாய்மனைக் கதிரைக்குள் சாய்வார். 'எங்க தண்ணியைக் கொண்டா....' என்று குரல் கொடுப்பார். பின் மக்களைக் கூப்பிடுவார். நந்தன் என்ன படிக்கிறாய்? புத்தகத்தைக் கொண்டு வா. கரன் கணக்குக் கொப்பியைக் கொண்டு வா! என்று நாலு பிள்ளைகளையும் கூப்பிட்டு தன்னைச் சுற்றி அமர வைப்பார். அவரவர் வகுப்புக்கு ஏற்ப வீட்டுப் பாடம் நடக்கும். தேவாரம், பொழிப்பு, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் எல்லாம் படிப்பிப்பார். திடீரென

அமெரிக்காவின் ஜனாதிபதி யார்? இந்தியாவின் பிரதமர் யார்? தமிழில் எத்தனை எழுத்துக்கள்? உயிர் எத்தனை? மெய் எத்தனை? உயிர்மெய் எத்தனை? எங்க ஒண்டு குறையுது? என்று பொது அறிவுக் கேள்விகள் கேட்பார்.

இரவுச் சாப்பாடும் ஒன்றாகத்தான் மண்டபத்தில் நடக்கும். நடுவில விளக்கு வைத்து எல்லோரும் வட்டமாக அமருவார்கள். அண்ணரின் மனைவி மிகுந்த பொறுமைசாலி. வட்டமாக எல்லோருக்கும் உணவு பரிமாறுவா. பின் தானுங் கூட அமர்ந்து சாப்பிடுவார். குழைத்த சோறு எண்டா அன்று இரவுச் சாப்பாடு விசேசம் தான். அண்ணருக்கு அப்பப்ப மச்சம், மாமிசம், உறைப்பு, புளிப்பு சாப்பாட்டில இருக்க வேணும்.

சாப்பாடு முடிய பிள்ளைகளை இருத்தி வைத்து தவராசா அண்ணர் கதைகள் சொல்லுவார். அது அநேகமாக வரலாற்று அரசர்கள், தலைவர்கள், ஞானிகள், சித்தர்கள் பற்றிய கதையாகத் தான் இருக்கும்.

(ஒக்டோபர் - டிசெம்பர் 2008)



இரு தசாப்த காலத்துக்கும் மேலாக வலிவடக்கு மண்ணுக்கு மீளமுடியா மக்களின் சோகத்துக்கு மருந்தாக மாவை வரோதயனின் 'வலிகாமத்து மண்ணின் மாந்தர்கள்' என்ற நடைச்சித்திரம் 'தாயகம்' சஞ்சிகையில் 2006 - ஜுன் முதல் 2008 டிசம்பர் வரையிலான இதழ்களில் தொடர்ந்து வெளிவந்தது.

மாவை வரோதயனின் இந்நடைச் சித்திரம் ஈழத்து கதை சொல் மரபில் ஒரு முக்கிய பங்களிப்பாகும். எதிர் கால இலக்கியத்துக்கு வழிகாட்டியாகவும் அமையும் தனித்துவம் மிக்க படைப்பாக்க முயற்சியாகும்.



978-955-8637-28-9

ரூ.150/=